# இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்

சென்னை / காஞ்சிபுரம் பதிப்பு ● ஞாயிறு, ஜூலை 25, 2021

RNI No.TNTAM/2018/76449 Vol.4 No.205

https://www.hindutamil.in

● அச்சகம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ●

● 12 பக்கங்கள் ₹ 7




# AMRITA VISHWA VIDYAPEETHAM School of Engineering

DEEMED TO BE UNIVERSITY

CHENNAI • COIMBATORE

₹66 LAKH P.A. HIGHEST CTC

₹6 LAKH P.A. AVERAGE CTC

50% SEATS WITH SCHOLARSHIP

95% STUDENTS PLACED in 2020

## We Heard You!



Yes, seats will be alloted only after the CBSE results are announced!

amrita.edu/btech

Apply Online

+91 94437 97777

Helpline Number

**Last Date to Apply for AEEE 28 JULY 2021**

Amrita Entrance Examination - Engineering (AEEE) 2021

FINAL PHASE

Apply with your best scores from

AEEE 2021

JEE Mains 2021

SAT | PUEE

SCAN TO APPLY

## #CLAIMYOURFUTURE WITH CUTTING-EDGE B.TECH PROGRAMMES

- Aerospace
- Civil
- Computer Science
- Computer Science (Cyber Security)
- Electrical & Electronics
- Chemical
- Computer & Communication
- Computer Science (A.I.)
- Electrical & Computer
- Mechanical
- Electronics & Communication

DF/111



INTRODUCING

**B.Tech in Automation & Robotics Engineering**

Available exclusively in the Coimbatore Campus

AMRITA VISHWA VIDYAPEETHAM COIMBATORE

## The Shortest Route to Winning The World's Heart is Through Food & Nutrition



APPLICATIONS OPEN

B.Sc. Food Science & Nutrition

Full time, 3 year UG programme

For more information

amrita.edu/admissions

Apply Online

+91 9943 984 432
+91 4222 685 041

Helpline Number

AMRITA VISHWA VIDYAPEETHAM School of Agricultural Sciences

## Agricultural Science is Redefining the New World Order



APPLICATIONS OPEN

B.Sc. (Hons) Agriculture

Full time, 4 year UG programme

For more information

amrita.edu/agriculture

Apply Online

+91 9486 148 592
+91 7806 813 003

Helpline Number

**Education for Life. Education for Living.**

# இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்

சென்னை / காஞ்சிபுரம் பதிப்பு ● ஞாயிறு, ஜூலை 25, 2021

RNI No.TNTAM/2018/76449 Vol.4 No.205

https://www.hindutamil.in

● அச்சகம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ●

● 12 பக்கங்கள் ₹ 7





ஸ்ரீ வீராஸ்

பல ஜவுளிக்கடை முதலாளிகளை உருவாக்கும் ஒரே ஸ்தாபனம்

மொத்த விலை கடை

சில்க்ஸ் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட் கலெக்‌ஷன்ஸ்

sriveerascreations www.sriveeras.com

SHANKAR IAS ACADEMY™ SINCE 2004 The Best IAS Academy in India

76677 66266

enquiry@shankarias.in

shankariasacademy.com | iasparliament.com

ADMISSIONS OPEN

18, Old Plot No 109, New Plot No 259, AL Block, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai - 600040.

UPSC CIVIL SERVICES COACHING 2021 - 22

TNPSC GR I PRELIMS CUM MAINS BATCH

REGULAR BATCH

CLASSES START ON 29th JULY 2021


2 லட்சம் போலி துப்பாக்கி உரிமம் வழங்கிய விவகாரம்

## ஜம்மு-காஷ்மீர், டெல்லியில் 40 இடங்களில் சிபிஐ சோதனை

■ புதுடெல்லி

ஜம்மு-காஷ்மீரில் சுமார் 2 லட்சம் போலி துப்பாக்கி உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக காஷ்மீர், டெல்லியில் 40 இடங்களில் சிபிஐ அதிகாரிகள் நேற்று ஒரே நேரத்தில் சோதனை நடத்தினர்.

இந்தியாவில் அதிக துப்பாக்கி உரிமங்கள் வழங்கப்பட்ட மாநிலங்களின் பட்டியலில் உத்தர பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. யூனியன் பிரதேசமான ஜம்மு-காஷ்மீர் 2-வது இடத்தில் உள்ளது. கடந்த 2012 முதல் 2016 வரையிலான காலத்தில் மட்டும் காஷ்மீரில் 4.49 லட்சம் துப்பாக்கி உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 2017-ம் ஆண்டில் ராஜஸ்தான் தீவிரவாத தடுப்பு பிரிவு போலீஸார் நடத்திய விசாரணையில் காஷ்மீரில் இருந்து சுமார் 3,000 பேர் போலி துப்பாக்கி உரிமங்கள் பெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வழக்கின் முக்கியத்துவம் கருதி சிபிஐயிடம் வழக்கு விசாரணை ஒப்படைக்கப்பட்டது.

இதில் கடந்த 2012-ம் ஆண்டு முதல் ஜம்மு-காஷ்மீரில் சுமார் 2 லட்சம் போலி துப்பாக்கி உரிமங்கள் வழங்கப்பட்டிருப்பது தெரியவந்தது காஷ்மீர் மட்டுமன்றி ராஜஸ்தான், டெல்லி உள்ளிட்ட வெளி மாநிலங்களை சேர்ந்தோரும் காஷ்மீர் அரசிடம் இருந்து துப்பாக்கி உரிமம் பெற்றிருப்பது அம்பலமானது.

இந்த வழக்கு தொடர்பாக கடந்த 2019 டிசம்பரில் காஷ்மீரில் 12-க்கும் மேற்பட்ட இடங்களில் சிபிஐ சோதனை நடத்தியது. அப்போது மூத்த அதிகாரிகளுக்கு மோசடியில் தொடர்பிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கடந்த 2020-ம் ஆண்டில் ஐஏஎஸ் அதிகாரி ராஜீவ் ரஞ்சன் உட்பட 2 மூத்த அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர். முறைகேடாக துப்பாக்கி உரிமம் வழங்கியதற்கு பிரதிபலனாக 2 அதிகாரிகளும் பெரும் தொகையை லஞ்சமாக பெற்றது தெரியவந்தது.

இந்த பின்னணியில் இவ்வழக்கு தொடர்பாக காஷ்மீர், டெல்லியில் 40 இடங்களில் சிபிஐ அதிகாரிகள் நேற்று ஒரே நேரத்தில் சோதனை நடத்தினர். ஜம்மு, ஸ்ரீநகர், உதம்பூர், ராஜோரி, அனந்தநாக், பாரமுல்லா மற்றும் டெல்லியில் முக்கிய அரசு அலுவலகங்கள், அதிகாரிகளின் வீடுகளில் சோதனை நடைபெற்றது.

குறிப்பாக காஷ்மீரைச் சேர்ந்த ஐஏஎஸ் அதிகாரிகள் ஷாகித் இக்பால் சவுத்ரி, நீரஜ் குமார் ஆகியோரின் வீடுகளில் தீவிர சோதனை நடத்தப்பட்டது. இதில் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிகிறது.

இதுதொடர்பாக ஷாகித் இக்பால் சவுத்ரி வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், 'கடந்த 4 ஆண்டுகளாக வழக்கு விசாரணை நடைபெற்று பெறுகிறது. எனது வீட்டில் சிபிஐ அதிகாரிகள் சோதனை நடத்தினர். எனது பதவிக் காலத்தில் வழங்கப்பட்ட துப்பாக்கி உரிமங்கள் குறித்த விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவேன்' என்று கூறியுள்ளார்.

தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தலைமையில்

## ஆக.2-ல் சட்டப்பேரவை நூற்றாண்டு விழா

● குடியரசுத் தலைவர் பங்கேற்கிறார் ● கருணாநிதி படத்தை திறந்து வைக்கிறார்

■ சென்னை / உதகை

தமிழக சட்டப்பேரவை நூற்றாண்டு விழா ஆகஸ்ட் 2-ம் தேதி நடக்கிறது. இதில் சிறப்பு விருந்தினராக பங்கேற்கும் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பேரவை அரங்கில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உருவப்படத்தை திறந்து வைக்கிறார்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், 1919-ம் ஆண்டின் இந்திய அரசு சட்டத்தின்கீழ், சென்னை மாகாண சட்டப்பேரவை 1921-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. மூன்றாண்டு ஆயுள்காலத்தை கொண்ட இந்தப் பேரவையில் ஆளுநரால் நியமிக்கப்பட்ட 34 பேருடன், மக்களால் தேர்வு செய்யப்பட்டவர்களையும் சேர்த்து 132 உறுப்பினர்கள் இருந்தனர். மக்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகளை கொண்ட முதல் சட்டப்பேரவை, 1921-ம் ஆண்டு ஜனவரி 12-ம் தேதி தொடங்கி வைக்கப்பட்டது.

அதன்படி, தமிழக சட்டப்பேரவை தொடங்கப்பட்டு தற்போது 100 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது. இதை நினைவுகூரும் வகையில் சட்டப்பேரவையின் நூற்றாண்டு விழாவை கொண்டாட தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. அத்துடன், சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் வெற்றிபெற்றுதிமுக ஆட்சியமைத்துள்ள நிலையில், தமிழகத்தில் 5 முறை முதல்வராக இருந்த திமுக தலைவர்



கருணாநிதியின் உருவப்படத்தை பேரவையில் திறக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 19-ம் தேதி டெல்லி சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தை மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார். அப்போது, தமிழக சட்டப்பேரவை நூற்றாண்டு விழா மற்றும் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் படத்திறப்பு விழாவில் பங்கேற்க வருமாறு அழைப்பு விடுத்தார். விழாவுக்கு வர குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்ததாகவும், அவரது தேதி அளித்ததும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படும் என்றும் முதல்வர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், ஆகஸ்ட் 1 முதல் 3-ம் தேதி வரை தமிழகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளார். அப்போது, சட்டப்பேரவை நூற்றாண்டு விழா, கருணாநிதி படத்திறப்பு விழாவில் பங்கேற்கிறார். மேலும், மதுரையில் கருணாநிதி பெயரில் நூலகம், சென்னை கிண்டியில் அமைய உள்ள அரசு மருத்துவமனை, சுதந்திரம் பெற்று 75 ஆண்டை குறிக்கும் வகையில் சென்னை கடற்கரைச் சாலையில் அமைக்கப்பட உள்ள நினைவுத்தூண் ஆகியவற்றுக்கான அடிக்கல் நாட்டு விழாவிலும் பங்கேற்க உள்ளதாகக் கூறப்படுகிறது.

சட்டப்பேரவை நூற்றாண்டு விழா குறித்து செய்தியாளர்களிடம் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு நேற்று கூறியதாவது:

தமிழக சட்டப்பேரவை நூற்றாண்டு விழா மற்றும் தமிழகத்தில் 5 முறை முதல்வராக இருந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உருவப்படம் திறப்பு நிகழ்ச்சி வரும் ஆகஸ்ட் 2-ம் தேதி மாலை 5 மணிக்கு தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டப்பேரவை வளாகத்தில் நடக்க உள்ளது. இந்த விழாவில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, கருணாநிதி படத்தை திறந்து வைக்கிறார். விழாவுக்கு ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தலைமை ஏற்கிறார். முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சிகளை பேரவை செயலகத்தின் மூலம் நடத்துவதற்கான சிறப்பான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. விழாவில் பங்கேற்க முக்கியப் பிரமுகர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார். அப்போது சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி உடனிருந்தார்.

நூற்றாண்டு விழாவுக்காக தலைமைச் செயலக கட்டிடத்தில் உள்ள சட்டப்பேரவை கூட்ட அரங்கில் இருக்கைகளை மாற்றி, மேடை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் வேகமாக நடந்து வருகின்றன.

### உதகையில் ஓய்வு

சென்னையில் நடக்கும் நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு ஆகஸ்ட் 3-ம் தேதி குடியரசுத் தலைவர் உதகைக்கு வருகிறார். இதுகுறித்து உதகை ராஜ்பவன் அதிகாரிகள் கூறும்போது, "குடியரசுத் தலைவராக பொறுப்பேற்ற பின்னர் முதல்முறையாக ராம்நாத் கோவிந்த், 3 நாட்கள் ஓய்வுக்காக ஆகஸ்ட் 3-ம் தேதி உதகைக்கு வருகிறார். இங்குள்ள ராஜ்பவனில் தங்குகிறார். அவரது வருகையையொட்டி பாதுகாப்பை பலப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது" என்று தெரிவித்தனர்.

இந்தியாவுக்கு முதல் பதக்கம்

## ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்று வரலாறு படைத்தார் மீராபாய் சானு

■ டோக்கியோ

ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவுக்கு முதல் பதக்கம் கிடைத்துள்ளது. பளுதூக்குதல் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை வென்று நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளார் மீராபாய் சானு.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் 32-வது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் கோலாகலமாக தொடங்கின. இதைத் தொடர்ந்து பல்வேறு விளையாட்டு பிரிவுகளில் நேற்று போட்டிகள் நடந்தன. இதில் மகளிருக்கான பளு தூக்குதலில் 49 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் மீராபாய் சானு, 202 கிலோ எடையை தூக்கி வெள்ளிப் பதக்கத்தை வென்றார். மீராபாய் சானு, ஸ்நாட்ச் பிரிவில் 87 கிலோ எடையையும், கிளீன் அன்ட் ஜெர்க்கில் 115 கிலோ எடையையும் தூக்கினார். தன்னுடைய முதல் முயற்சியில் மீராபாய் சானு 84 கிலோவையும், 2-வது முயற்சியில் 87 கிலோவையும் தூக்கினார். ஆனால், 3-வது முயற்சியில் 89 கிலோவைத் தூக்குவதில் மீராபாய் சானு தோல்வி அடைந்தார்.

சீனாவின் ஜிஹுய் ஹூ 210 கிலோ எடையை தூக்கி (94+116) புதிய ஒலிம்பிக் சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார். இந்தோனேஷியாவின் விண்டி கன்டிகா ஐஷா 194 கிலோ எடையைத் தூக்கி வெண்கலப் பதக்கம் பெற்றார்.

ஒலிம்பிக்கில் பளு தூக்குதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை படைத்துள்ளார் மீராபாய் சானு. கடந்த 2000-ம் ஆண்டு சிட்னியில் நடந்த ஒலிம்பிக்கில் இந்தியாவின் கர்ணம் மல்லேஸ்வரி வெண்கலப் பதக்கம் கைப்பற்றியிருந்தார்.

2016-ம் ஆண்டு ரியோ ஒலிம்பிக்கில் ஏமாற்றம் அடைந்த மீராபாய் சானு, கடந்த 5 ஆண்டுகளாக கடினமாக பயிற்சிகள் செய்து தற்போது முதல் பதக்கத்தை வென்று நாட்டுக்கு பெருமை தேடித் தந்துள்ளார்.

இந்த வெற்றி குறித்து மீராபாய் சானு தனது ட்விட்டர் பதிவில், 'உண்மையில் கனவு நனவான தருணம் இது. இந்தப் பதக்கத்தை நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கிறேன்.

இந்தப் பயணத்தின்போது உடனிருந்த கோடிக்கணக்கான இந்தியர்களின் பிரார்த்தனைகளுக்கு நன்றி. நிறைய தியாகங்களைச் செய்து என் மீது நம்பிக்கை வைத்த குடும்பத்தினருக்கும், குறிப்பாக என் அம்மாவுக்கு நன்றி' என தெரிவித்துள்ளார்.



▲ டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் மகளிருக்கான 49 கிலோ எடைப்பிரிவு பளுதூக்குதலில் தங்கப் பதக்கம் வென்ற சீனாவின் ஜிஹுய் ஹூ (நடுவில் இருப்பவர்), வெள்ளிப் பதக்கம் வென்ற இந்தியாவின் மீராபாய் சானு (இடது) மற்றும் வெண்கலப் பதக்கம் வென்ற இந்தோனேஷியாவின் விண்டி கன்டிகா ஐசா (வலது) ஆகியோர். - பிடிஐ

### பிரதமர் வாழ்த்து

ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற மீராபாய் சானுவுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது ட்விட்டர் பதிவில், 'மீராபாய் சானுவின் அற்புதமான செயல்திறனால் நாடு மகிழ்ச்சி அடைகிறது. பளுதூக்குதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற அவருக்கு வாழ்த்துகள். அவரது வெற்றி ஒவ்வொரு இந்தியரையும் ஊக்குவிக்கிறது' என தெரிவித்துள்ளார்.

தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் வெளியிட்ட செய்தியில், 'ஒலிம்பிக் போட்டியில் முதல்நாளிலேயே வெள்ளிப் பதக்கத்தை வென்ற மீராபாய் சானுவுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். அவரது சாதனை, இந்தியாவில் இருக்கும் விளையாட்டு வீரர்களை ஒலிம்பிக்கில் சிறப்பாக செயல்பட ஊக்குவிக்கும்' என கூறியுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது ட்விட்டர் பக்கத்தில், 'ஒலிம்பிக்கின் முதல் நாளிலேயே இந்தியாவுக்கு ஒளிமயமான தொடக்கம். தனது அபாரமான செயல்திறனால் பளுதூக்குதலில் இந்தியாவுக்கு முதல் ஒலிம்பிக் வெள்ளிப்பதக்கத்தை பெற்றுத் தந்திருக்கும் மீராபாய் சானுவுக்கு நெஞ்சார்ந்த பாராட்டுகள்' என பதிவிட்டுள்ளார்.

துப்பாக்கிச் சுடுதலில் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் போட்டியில் இந்தியாவின் இளவேனில் வாளறிவன், அபூர்வி சண்டிலா ஆகியோர் பதக்க சுற்றுக்கு முன்னேறத் தவறினர். ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் சவுரப் சவுத்ரி இறுதிச் சுற்றில் 137.4 புள்ளிகளுடன் 7-வது இடம் பிடித்து ஏமாற்றம் அளித்தார்.

### ஹாக்கியில் முதல் வெற்றி

வில்வித்தை கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் தீபிகா குமாரி, பிரவீன் ஜாதவ் ஜோடி காலிறுதியில் தோல்வியடைந்தது. ஆடவர் ஹாக்கியில் இந்திய அணி நியூஸிலாந்தை 3 -2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றியுடன் தொடங்கியது. மகளிர் ஹாக்கியில் இந்தியா 1-5 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்திடம் தோல்வி கண்டது.

டேபிள் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் மணிகா பத்ரா, சுதிர்தா 2-வது சுற்றுக்கு முன்னேறினர். ஆடவருக்கான ஒற்றையரில் இந்தியாவின் சுமித் நாகல் 2-வது சுற்றுக்கு முன் னேறினார்.

பாட்மிண்டன் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஷிராக் ஷெட்டி, சாட்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி ஜோடி 2-வது சுற்றுக்கு முன்னேறியது.


பெண் இன்று உலகம் இவள் வசம்

8-ம் பக்கத்தில்...






அனைத்து ஆன்லைன் சேவைகளைப் பெற அப்டேட் செய்யுங்கள்:

PAN கார்டு விவரங்கள் | மொபைல் எண் | மின்னஞ்சல் முகவரி

ஆன்லைன் சேவைகள் மற்றும் அப்டேட் செய்ய பாருங்கள் www.licindia.in

உங்கள் நகரத்தின் பெயரை 56767474க்கு SMS செய்யுங்கள் | அழைப்பு உதவி மையம் (022) 68276827 | எல்ஐசி மொபைல் ஆப் "MyLIC" பதிவிறக்கம் செய்யுங்கள்

எங்களை பின்தொடருங்கள்: LIC India Forever

IRDAI Regn No.: 512

மோசடி தொலைபேசி அழைப்புகள் மற்றும் ஏமாற்றும்/போலி சலுகைகள் மீது எச்சரிக்கையாக இருங்கள்.

IRDAI காப்பீட்டு பாலிசிகளை விற்பனை செய்தல், போனஸ் அறிவித்தல் மற்றும் பிரீமியம்களை முதலீடு செய்தல் போன்றவற்றில் ஈடுபடுவதில்லை. பொதுமக்களுக்கு இத்தகைய தொலைபேசி அழைப்பு வந்தால், உடனே காவல்துறையில் புகார் செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அபாய காரணிகள், விதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, விற்பனையை முடிக்கும் முன்பு தயவுசெய்து விற்பனை கையேட்டைப் படியுங்கள்.

LIC

லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியா

LIFE INSURANCE CORPORATION OF INDIA

வாழும்போதும், வாழ்க்கைக்கு பிறகும்.

LIC/MUD/2021-22/10/Tam

தொகுப்பு: பி.எம்.சுதிர்

# பளிச் பத்து 25




- சாய்கோம் மீராபாய் சானு, மணிப்பூரில் இம்பால் நகருக்கு அருகில் உள்ள சிற்றூரில் 1994–ம் ஆண்டு ஆகஸ்ட் 8–ம் தேதி பிறந்தார். 6 குழந்தைகளைக் கொண்ட குடும்பத்தில் மீராபாய் கடைக்குட்டி ஆவார்.
- சானுவின் அப்பா சாய்கோம் கிரிடி மீடி, பொதுப்பணித் துறையில் பணியாற்றி வந்தார்.
- சானுவின் அம்மா, சாய்கோம் ஓங்பி டோம்பி லீமா, உள்ளூரில் சிறிய கடை நடத்தி வருகிறார்.
- மணிப்பூரைச் சேர்ந்த முன்னாள் பளுதூக்கும் வீராங்கனையான குஞ்சராணி தேவியால் ஈர்க்கப்பட்டு, இவ்விளையாட்டில் இணைந்தார் சாய்கோம் மீராபாய் சானு.
- 11 வயதிலேயே உள்ளூரில் நடந்த பளுதூக்கும் போட்டி ஒன்றில் மீராபாய் சானு தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.
- 2014–ம் ஆண்டில் நடந்த கிளாஸ்கோ காமன்வெல்த் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றதன் மூலம், உலகின் கவனத்தை தன் பக்கம் ஈர்க்கத் தொடங்கினார் மீராபாய் சானு.
- 2018–ம் ஆண்டில் முதுகுவலியால் பாதிக்கப்பட்ட அவர், நீண்ட சிகிச்சைக்குப் பிறகு குணமடைந்தார்.
- மீரா பாய்க்கு பத்மஸ்ரீ, ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதுகளை மத்திய அரசு வழங்கியுள்ளது.
- 2021–ம் ஆண்டு நடந்த ஆசிய பளுதூக்கும் போட்டியில் 49 கிலோ எடைப்பிரிவில் கிளீன் அண்ட் ஜெர்க் பிரிவில் 119 கிலோ எடை தூக்கி உலக சாதனை படைத்துள்ளார் மீராபாய் சானு.
- மல்யுத்த போட்டிக்காக ஒருமுறை தனது சகோதரியின் திருமணத்துக்குகூட செல்லாமல் தவிர்த்துள்ளார் மீராபாய்.

## நல்லதே நடக்கும்

• ஜோதிஷபூஷண் வேங்கடசுப்பிரமணியன் •

**25-07-2021** பிலவ 9 ஆடி

ஞாயிற்றுக்கிழமை

**திதி** : பிரதமை காலை 7.20 வரை. அதன் பிறகு துவிதியை.
**நட்சத்திரம்** : திருவோணம் பிற்பகல் 1.26 மணி வரை. பிறகு அவிட்டம்.
**நாமயோகம்** : ஆயுஷ்மான் பின்னிரவு 3.36 வரை. பிறகு சௌபாக்யம்.
**நாமகரணம்** : கௌலவம் காலை 7.20 வரை. அதன் பிறகு தைதுலம்.
**நல்ல நேரம்** : காலை 7.00-10.00, 11.00-12.00, மதியம் 2.00-4.00, மாலை 6.00-7.00 மணி வரை.
**யோகம்** : அமிர்தயோகம் பிற்பகல் 1.26 வரை. பிறகு மந்தயோகம்.
**சூலம்** : மேற்கு, வடமேற்கு காலை 10.48 மணி வரை.
**பரிகாரம்** : வெல்லம்
**சூரிய உதயம்**: சென்னையில் காலை 5.53 **அஸ்தமனம்:** மாலை 6.36

| | |
|---|---|
| ராகு காலம் | மாலை 4.30-6.00 |
| எமகண்டம் | மதியம் 12.00-1.30 |
| குளிகை | மாலை 3.00-4.30 |

| | |
|---|---|
| நாள் | தேய்பிறை |
| அதிர்ஷ்ட எண் | 1, 5, 7 |
| சந்திராஷ்டமம் | திருவாதிரை, புனர்பூசம் |

நான்கு தலைமுறையாக பாரம்பரியமிக்க தங்க நகை நிறுவனம்
T.NAGAR LKS GOLD HOUSE (P) LTD SINCE 1925
T.NAGAR | ANNA NAGAR | TAMBARAM
"LKS - GOLD" IS CASH IN HAND

**மேஷம்:** முக்கிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். வீண் குழப்பங்களிலிருந்து விடுபடுவீர்கள். தொட்ட காரியங்கள் துலங்கும். குடும்பத்தில் குதூகலம் காணப்படும். பணவரவு உண்டு.

**ரிஷபம்:** திருமணப் பேச்சுவார்த்தை நல்ல விதத்தில் முடியும். உறவினர், நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு கூடும். சுபநிகழ்ச்சிகளில் முதல் மரியாதை கிடைக்கும். திடீர் பயணம் உண்டு.

**மிதுனம்:** அநாவசிய செலவுகளை தவிர்ப்பது நல்லது. குடும்ப அந்தரங்க விஷயங்களை வெளிநபரிடம் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கடகம்:** எதிலும் தெளிவு பிறக்கும். அடிக்கடி செலவு வைத்த வாகனத்தை மாற்றி புதியது வாங்குவீர்கள். மகிழ்ச்சியான சம்பவங்கள் குடும்பத்தில் நிகழும். தாயாரின் ஆதரவு கிடைக்கும்.

**சிம்மம்:** எத்தனை தடைகள், பிரச்சினைகள் வந்தாலும் அவற்றை சாமர்த்தியாக சமாளிக்கும் சக்தி கிடைக்கும். விஐபிகளால் சில வேலைகள் முடிவடையும். பால்ய நண்பரை சந்திப்பீர்கள்.

**கன்னி:** எல்லா வகையிலும் வெற்றி கிட்டும். நீண்டநாட்களாக எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். பெரிய மனிதர்கள் ஆதரவாக இருப்பார்கள். ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள்.

**துலாம்:** நண்பர்கள், உறவினர்களின் வருகையால் வீடு களைகட்டும். பழைய இனிய சம்பவங்களை அடிக்கடி நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். அக்கம்பக்கத்தினரின் அன்பு தொல்லை குறையும்.

**விருச்சிகம்:** சமூகத்தில் பிரபலமானவர்கள் அறிமுகமாவார்கள். கணவன் – மனைவிக்குள் நிலவிய கருத்துவேறுபாடுகள் நீங்கும். வேற்று மாநிலம் செல்லும் வாய்ப்பு வரும்.

**தனுசு:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வீடு, வாகனம் வாங்குவதற்கான சூழல் கனிந்து வரும். வெளிநாட்டிலிருப்பவர்களால் ஆதாயமடைவீர்கள்.

**மகரம்:** தாழ்வுமனப்பான்மை அடிக்கடி தலைகாட்டும். யாரை நம்புவது என்பதில் குழப்பம் வரும். கையொப்பமிட்டு காசோலைகளை வைக்க வேண்டாம். எதிலும் நிதானம் தேவை.

**கும்பம்:** வேலைச்சுமை இருந்து கொண்டே இருக்கும். எந்த காரியத்தைத் தொட்டாலும் இழுபறியிலேயே முடியும். முக்கிய விஷயங்களில் மற்றவரை நம்பாமல் நீங்களே நேரடியாக முடிப்பது நல்லது.

**மீனம்:** வெளியூரில் இருந்து மகிழ்ச்சிகரமான செய்திகள் வரும். மூத்த சகோதரர் வகையில் உதவிகள் கிடைக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். கலைப்பொருட்கள் வாங்குவீர்கள்.

### தமிழகத்தில் மழைநீர் சேமிப்புக்கான

# தடுப்பணைகள், புதிய நீர்நிலைகளை உருவாக்க வேண்டும்

● அமைச்சர், அதிகாரிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்

■ சென்னை

மழைநீரை முழுமையாக பயன்படுத்தும் வகையில் தமிழகத்தில் அணைகள் இல்லாத மாவட்டங்களில் நீர்சேமிப்புக்கான தடுப்பணைகள் மற்றும் புதிய நீர்நிலைகளை உருவாக்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழக அரசின் முழுமையான நிதிநிலை அறிக்கை விரைவில் தாக்கல் செய்யப்பட உள்ளது. இதற்காக துறைகள் தோறும் ஆய்வுக் கூட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் மேற்கொண்டு வருகிறார். அதன்படி, நீர்வளத் துறையின் செயல்பாடுகள், திட்டப் பணிகள், புதிய திட்டங்கள் குறித்து நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, மாநில நிதியில் காவிரி டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறப்பு தூர்வாரும் பணிகள், அத்திக்கடவு - அவிநாசி நீர்ப்பாசன திட்டம், மேட்டூர் சரபெங்கா நீரேற்று திட்டம், காட்டூர்- தத்தமஞ்சு ஏரிகளின் கொள்ளளவை மேம்படுத்தி நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம், விழுப்புரம் கழுவேலி ஏரி, செங்கல்பட்டு கொளவாய் ஏரிகளை மீட்கும் திட்டம் குறித்து ஆய்வு செய்தார். நபார்டு உதவியுடன் புதிய தடுப்பணைகள் கட்டுதல், அணைக்கட்டுகள், நீர்நிலைகள், ஏரிகள் புனரமைப்பு குறித்தும் ஆய்வு செய்தார்.

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம், அணைகள் புனரமைப்பு மேம்பாட்டுத் திட்டம், காவிரி - குண்டாறு, தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்பு திட்டங்களின் முன்னேற்றம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்தும் ஆய்வு செய்தார்.

அப்போது முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தியதாவது:

தமிழகம் முழுவதும் நீர்நிலைகளை புனரமைத்து, தூர்வாரி, நீரின் கொள்ளளவை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய நீர்நிலைகளை உருவாக்கவும், மழை மூலம் கிடைக்கும் நீரை முழுமையாக சேமித்து பயன்படுத்தவும் அணைகள் இல்லாத மாவட்டங்களில் புதிய நீர் சேமிப்பு கட்டுமானங்களை குறிப்பாக தடுப்பணைகளை உருவாக்க வேண்டும்.

மேலும், விவசாயிகள் நலன் கருதி பல ஆண்டுகளாக சீரமைக்கப்படாத நீர்நிலைகளை செப்பனிட வேண்டும். புதிய நீர்நிலைகளை உருவாக்க வேண்டும். கால்வாய்களை சரி செய்ய முன்னுரிமை அளிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஆய்வுக் கூட்டத்தில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலர் வெ.இறையன்பு, பொதுப்பணித் துறை செயலர் சந்தீப் சக்சேனா, நிதித் துறை செயலர் ச.கிருஷ்ணன், பொதுப்பணித் துறை சிறப்பு செயலர் டி.ரவீந்திரபாபு, நீர்வளத் துறை தலைமை பொறியாளர் கு.ராமமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 15 மாவட்டங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்பு

■ சென்னை

தமிழகத்தில்15 மாவட்டங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் நா.புவியரசன் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தென்மேற்கு பருவக்காற்று காரணமாக தமிழகத்தில் 25-ம் தேதி நீலகிரி, கோவை, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், திண்டுக்கல், தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், நெல்லை, தூத்துக்குடி, ஈரோடு, சேலம், மதுரை, விருதுநகர், தருமபுரி, நாமக்கல், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் மிதமான மழையும் பெய்யக் கூடும். இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழ் இணைய ஒருங்குறி விளக்க பயிற்சி

● அமைச்சர் தொடங்கி வைத்தார்

■ சென்னை

தமிழ் இணைய ஒருங்குறி, ஒருங்குறி மாற்றியை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துவது குறித்த செயல்முறை விளக்கப் பயிற்சியை அமைச்சர் மனோ தங்கராஜ் இணைய வழியாக தொடங்கி வைத்தார்.

இந்த செயல்முறை விளக்கத்தின்போது, தமிழ் ஒருங்குறி எழுத்துருவான 'மருதம்' எவ்வாறு பதிவிறக்கம் செய்வது, ஒருங்குறி எழுத்துருவை தட்டச்சு செய்ய எந்த விசைப்பலகை உகந்தது மற்றும் முன்னர், வானவில்-அவ்வையார், ஸ்ரீலிபி, பாமினி, டேம், டேப் முதலான குறியீட்டு முறையில் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்களை இந்த மென்பொருளைக் கொண்டு எவ்வாறு ஒருங்குறிக்கு மாற்றுவது போன்றவை குறித்து இந்தக் கூட்டத்தில் விளக்கப்பட்டன.

▼ **இந்த நிகழ்ச்சியில் இணைய தளம் வழியாக 1,400 பேர் பங்கேற்றனர். 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் யுடியூப் வழியாக பார்த்தனர்.**

இக் கூட்டத்தில் இணைய தளம் வழியாக 1,400 பேர் பங்கேற்றனர். மேலும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் யுடியூப் வழியாகப் பார்த்தனர். மேலும், இதுகுறித்து சந்தேகங்கள் இருந்தால் முனைவர் அ.ஜேம்சை 9710039249, 044 22209400 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது 'cdntacd.tva@tn.gov.in, tva@tn.gov.in' என்ற மின்னஞ்சல்கள் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

இந்நிகழ்ச்சியில்தமிழ் இணைய கல்விக் கழகத்தின் இயக்குநர் வீ.ப.ஜெயசீலன் பங்கேற்றார்.

### 'இந்து தமிழ் திசை', வி.எஸ்.நடராஜன் முதியோர் அறக்கட்டளை சார்பில்

# முதியோருக்கு ஆன்லைனில் இலவச யோகா பயிற்சி

● வாரம்தோறும் செவ்வாய்க்கிழமை நடக்கிறது

■ சென்னை

'இந்துதமிழ் திசை' நாளிதழ், டாக்டர் வி.எஸ்.நடராஜன் முதியோர் நல அறக்கட்டளை சார்பில் வாரம்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் முதியோருக்கான இலவச யோகா பயிற்சி ஆன்லைனில் நடத்தப்பட்டு வருகிறது.

வயதான காலத்தில் உடலையும், உள்ளத்தையும் நலமாக வைத்திருக்க மருந்து, மாத்திரைகளால் மட்டும் முடியாது. யோகா பயிற்சி செய்வதன் மூலம் உடலையும், உள்ளத்தையும் புத்துணர்ச்சியாக, ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள முடியும். வயதுக்கேற்ப சிறு பயிற்சிகளை செய்வதன் மூலம் ஏராளமான பலன்களை பெற்று நலமுடன் வாழலாம்.

கரோனா பேரிடர் காலத்தில் முதியவர்கள் வீட்டிலேயே முடங்கியுள்ளனர். இவர்களுக்கு உடல்வலி, மூட்டுவலி, பசியின்மை, உடல் சோர்வு போன்ற உபாதைகள் அதிகம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இத்துடன் மனச் சோர்வுக்கும் முதியவர்கள் ஆளாகின்றனர்.

இதில் இருந்து முதியோர் விடுபட, 'இந்து தமிழ் திசை' நாளிதழும், டாக்டர் வி.எஸ்.நடராஜன் முதியோர் நல அறக்கட்டளையும் இணைந்து ஆன்லைனில் இலவச யோகா பயிற்சியை வழங்குகின்றன. ஜூலை 13-ம் தேதி தொடங்கப்பட்ட இப்பயிற்சி, ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் காலை 11 முதல் பகல் 12 மணி வரை நடக்கிறது.

யோகாவில் மிகுந்த அனுபவம் பெற்றவரும், இந்தியாவின் பல்வேறு பகுதிகள் மட்டுமின்றி அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் உள்ளவர்களுக்கும் ஆன்லைனில் யோகா பயிற்சி அளித்து வருபவருமான பல் மருத்துவர் நந்தினி, இதில் பங்கேற்று, யோகா கற்றுத் தருகிறார்.

இப்பயிற்சியில் பங்கேற்று ஏராளமான முதியவர்கள் பயனடைந்து வருகின்றனர். சென்னை மட்டுமின்றி, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள முதியோர் இல்லங்களில் இருப்பவர்களும் இதில் பங்கேற்று வருகின்றனர்.

இப்பயிற்சியில் பங்கேற்பதற்கான ஆன்லைன் இணைப்பு ஒரு நாள் முன்னதாக திங்கள்கிழமை அறிவிக்கப்படும். மேலும் விவரங்களுக்கு ராஜசேகரன் மணிமாறன் என்பவரை 7200519167, 9994902173, 044-48615866, 24331866 ஆகிய எண்களிலும், rm@drvsngeriatricfoundation.com என்ற மின்னஞ்சல் வழியாகவும் தொடர்புகொள்ளலாம்.



▲ தமிழகத்தில் கரோனா ஊரடங்கு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளால் 2 மாதங்களாக மூடப்பட்டிருந்த நூலகங்கள் நேற்று முதல் திறக்கப்பட்டன. சென்னை எழும்பூர் கன்னிமாரா நூலகத்தில் தனிமனித இடைவெளியுடன் அமர்ந்து நூல்களை வாசிக்கும் வாசகர்கள். படம் க.ஸ்ரீபரத்

### 2 மாதங்களாக மூடப்பட்டிருந்த

# அரசு நூலகங்கள் மீண்டும் திறப்பு

● கரோனா நெறிமுறைகளுடன் வாசகர்கள் அனுமதி

■ சென்னை

தமிழகத்தில் கரோனா பரவலால் 2 மாதங்களாக மூடப்பட்டிருந்த அரசு பொது நூலகங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் கரோனா பரவல் தீவிரத்தால் கடந்தமே மாதம் முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. இதனால், அரசு நூலகங்கள் மே 10-ம் தேதி முதல் மூடப்பட்டன. தற்போது நோய் பரவல் படிப்படியாக குறைந்து வருவதால், பல்வேறு தளர்வுகளை அரசு அறிவித்து வருகிறது.

அந்த வகையில், வாசகர்கள், போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, அரசு நூலகங்கள் செயல்பட பொது நூலகத் துறை இயக்குநரகம் உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து, கடந்த 2 மாதங்களாக மூடப்பட்டிருந்த அரசு பொது நூலகங்கள் நேற்று முதல் திறக்கப்பட்டன.

கரோனா வழிகாட்டு நெறிமுறைகளின்படி, முகக் கவசம் அணிந்து வருபவர்கள் மட்டுமே நூலகத்துக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். வாசகர்கள், பணியாளர்கள் உட்பட அனைவரது உடல் வெப்பமும் பரிசோதனை செய்யப்பட்டது. கிருமிநாசினி பயன்பாடு, தனிநபர் இடைவெளி உள்ளிட்ட நடைமுறைகளும் பின்பற்றப்பட்டன.

வாசகர்கள் சுட்டிக்காட்டும் நூல்களை நூலகப் பணியாளர்கள் கையுறை அணிந்தபடி எடுத்துத் தந்தனர்.

நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள நூலகங்கள் திறக்கப்படவில்லை. 15 வயதுக்கு கீழ் உள்ள சிறார்கள், 65 வயதுக்கு மேற்பட்டோர் நூலகத்துக்குள் செல்ல அனுமதி வழங்கப்படவில்லை. கட்டுப்பாடுகளுடன் நூலகங்கள் திறக்கப்பட்டிருப்பது, வாசகர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

### 'இந்து தமிழ் திசை', அம்ரிதா விஷ்வ வித்யாபீடம் உடன் இணைந்து வழங்கும் 'உயர்வுக்கு உயர்கல்வி'

# கிளவுட் கம்ப்யூட்டிங், சைபர் செக்யூரிட்டி படிப்புகளுக்கு ஏராளமான வாய்ப்புகள்

■ சென்னை

தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வரும் இந்த காலகட்டத்தில் கிளவுட் கம்ப்யூட்டிங், சைபர் செக்யூரிட்டி படிப்புகளுக்கு தேவையும், வாய்ப்புகளும் குவிந்துள்ளன என்று 'இந்து தமிழ் திசை' நாளிதழ், அம்ரிதா விஷ்வ வித்யாபீடம் இணைந்து நடத்தும் 'உயர்வுக்கு உயர்கல்வி' ஆன்லைன் வழிகாட்டி நிகழ்ச்சியில் வல்லுநர்கள் தெரிவித்தனர்.

பிளஸ் 2 முடித்துள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் 'இந்து தமிழ் திசை' நாளிதழும், அம்ரிதா விஷ்வ வித்யாபீடமும் இணைந்து 'உயர்வுக்கு உயர்கல்வி' என்ற தொடர் நிகழ்ச்சியை ஆன்லைனில் நடத்துகின்றன. கடந்த 10–ம் தேதி தொடங்கிய இந்த நிகழ்ச்சி, இன்னும் 11 நாட்கள் நடக்க உள்ளது. கடந்த 23–ம் தேதி நடந்த 6–வது நிகழ்வில் 'கிளவுட் கம்ப்யூட்டிங், சைபர் செக்யூரிட்டி படிப்புகள்' என்ற தலைப்பில் இத்துறை வல்லுநர்கள் உரையாற்றியதாவது:

**சென்னை சவீதா இன்ஜினீயரிங் காலேஜ் கம்ப்யூட்டர் சயின்ஸ் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் ஜி.நாகப்பன்:** அலுவலகங்களில் டேட்டா சேகரிப்பதற்கு என்றே கூடுதலான இடம், ஆட்கள் முன்பு இருந்தனர். இன்று கிளவுட் கம்ப்யூட்டிங் வந்த பிறகு, நம் டேட்டாக்களை சேகரிப்பதற்கு என்றே பிரத்யேகமான நிறுவனங்கள் வந்துவிட்டன.

நாம் வைத்துள்ள டேட்டாக்களை யாரும் தவறாகப் பயன்படுத்திவிடாமல் இருக்க, சைபர் செக்யூரிட்டி மிகவும் அவசியம். இதற்காக புதுப்புது உத்திகளை சைபர் செக்யூரிட்டி மூலம் கையாண்டு, நமது டேட்டாக்களைப் பாதுக்கவேண்டி உள்ளது. இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சியில் கிளவுட் கம்ப்யூட்டிங், சைபர் செக்யூரிட்டி ஆகிய படிப்புகளுக்கு தேவையும், வாய்ப்புகளும் ஏராளமாக குவிந்துள்ளன.

**சென்னை கிளஸ்ட்ரெக்ஸ் டேட்டா நிறுவனத்தின் நிறுவனர் பி.வெங்கட்ரமணி:** கிளவுட் கம்ப்யூட்டிங் தொழில்நுட்பம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த துறையாக இன்று வளர்ந்திருக்கிறது. கிளவுட் கம்ப்யூட்டிங், சைபர் செக்யூரிட்டி படிப்புகளை எடுப்பது மாணவர்களுக்கு சிறப்பான எதிர்காலத்தை அமைத்துத் தரும். இன்று செல்போனை அனைவருமே பயன்படுத்துகின்றனர். இ–மெயில் பயன்படுத்தாதவர்கள் மிகவும் குறைவு. வரும் காலங்களில் இவற்றின் பயன்பாடு இன்னும் அதிகமாகும். சைபர் செக்யூரிட்டி இல்லாமல் இனி முடியாது என்ற அளவில் அதன் தேவை மிகவும் கூடுதலாகியுள்ளது.

அனைத்து வியாபார பெரு நிறுவனங்களும் ஆன்லைன் வர்த்தகத்தில் இறங்கியுள்ளன. வீட்டில் இருந்தபடியே நமக்கான உணவுப் பொருள், மருந்துகளை ஆன்லைனில் பெறுகிறோம். பயணங்களுக்கும் ஆன்லைனில் பதிவு செய்கிறோம். திரைப்படங்கள் பார்க்கவும் அமேசான், நெட்ஃபிளிக்ஸ் ஆகியவை வந்துவிட்டன. இத்துறையின் வேகமாக வளர்ச்சியால் வருங்காலத்தில் நிறைய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

**சென்னை சிடிஎஸ் சீனியர் இயக்குநர் வி.எஸ்.ஸ்ரீகாந்த்:** கிளவுட் கம்ப்யூட்டிங் படிப்புக்கான தேவையும், வேலைவாய்ப்பும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. கரோனா போன்ற பெருந்தொற்று காலத்தில் அனைத்து தொழில்களும் பெரிய அளவில்பாதிப்பைசந்தித்துள்ளன. ஆனால், ஐ.டி. துறை மட்டும்தான் தடையின்றி இயங்கி வருகிறது. தங்களது தகவல்களை மிகவும் பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அதற்கென சிறப்பான ஏற்பாடுகளை பெரிய நிறுவனங்கள் திட்டமிடுகின்றன. அதற்கு, புதுமையான முறையில் நுட்பமாக சிந்திக்கும் ஆற்றல் உடைய சைபர் செக்யூரிட்டி சிஸ்டம் தேவைப்படுகிறது.

இன்றைய இளைய தலைமுறையினர் அவர்களை அறியாமலேயே தங்களைப் பற்றிய தகவல்களை செல்போன் வழியாகவும், இ–மெயில் வழியாகவும் அனைவருக்கும் எப்படியாவது தெரியப்படுத்தி விடுகின்றனர். இதனால், வங்கிக் கணக்கில் இருந்து தொழில்நுட்ப ரீதியாக பணம் திருடப்படுகின்றன. நம் தகவல்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு அனைவருக்கும் அவசியம். புதிய சிந்தனையும், நுட்பமான திறனும் கொண்டவர்களுக்கு இத்துறைகளில் ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

இந்த ஆன்லைன் வழிகாட்டி நிகழ்ச்சியை 'இந்து தமிழ் திசை' நாளிதழின் முதுநிலை துணை ஆசிரியர் ம.சுசித்ரா நெறிப்படுத்தினார்.

இந்த நிகழ்ச்சியை சவீதா இன்ஜினீயரிங் காலேஜ், சென்னை இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, ஸ்ரீஈஸ்வர் காலேஜ் ஆஃப் இன்ஜினீயரிங் ஆகியவை இணைந்து வழங்கின. இந்த நிகழ்வில் பங்கேற்க தவறியவர்கள் https://bit.ly/36ZIBR8 என்ற லிங்க் மூலம் முழு நிகழ்வையும் பார்க்கலாம்.

### ஆன்லைன் வழிகாட்டி நிகழ்ச்சியில் துறை வல்லுநர்கள் தகவல்


▲ ஜி.நாகப்பன்


▲ பி.வெங்கட்ரமணி


▲ வி.எஸ்.ஸ்ரீகாந்த்




### இன்று மாலை மரைன் & ஓஷன் இன்ஜினீயரிங்

'உயர்வுக்கு உயர்கல்வி' ஆன்லைன் நிகழ்வில் இன்று (ஞாயிறு) மாலை 4.30 மணிக்கு மரைன் & ஓஷன் இன்ஜினீயரிங் படிப்புகள் குறித்து புவி அறிவியல் அமைச்சக விஞ்ஞானியும் நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஓஷன் டெக்னாலஜி தலைவருமான டாக்டர் ஆர்.வெங்கடேசன், மும்பை ஆங்கிலோ ஈஸ்ட்டர்ன் ஷிப் மேனேஜ்மென்ட் மாஸ்டர் மரைனர் கேப்டன் டி.ராமநாதன், சென்னை வேல்ஸ் பல்கலைக்கழக ஸ்கூல் ஆஃப் மரைன்டைம் ஸ்டடீஸ் இயக்குநர் கேப்டன் என்.குமார் ஆகியோர் ஆலோசனை வழங்க உள்ளனர். இதில் பங்கேற்க விரும்புவோர் https://bit.ly/3wxsbK6 என்ற லிங்க்கில் பதிவுசெய்து கொள்ளவும்.

## ‘சைபர் க்ரைம்’ விழிப்புணர்வு போலீஸாருக்கு டிஜிபி பாராட்டு

■ சென்னை

சைபர் குற்றத் தடுப்பு தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் காணொலிக் காட்சிகளை தயாரித்து அளிக்குமாறு காவல் துறையினருக்கு டிஜிபி சைலேந்திர பாபு அறிவுறுத்தியிருந்தார்.

அதன்படி, தமிழகம் முழுவதும் மாவட்டவாரியாக சைபர் க்ரைம் தடுப்பு குறித்து போலீஸார் விழிப்புணர்வு வீடியோக்கள் எடுத்து வெளியிட்டனர். இவ்வாறு போலீஸார் தயாரித்து அனுப்பிய காணொலிக் காட்சிகள் ஆய்வு செய்யப்பட்டன. அதில் 24 மாவட்ட காவல் அதிகாரிகள் சிறப்பான வீடியோ எடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தியிருந்தனர். அவர்களை டிஜிபி சைலேந்திரபாபு பாராட்டினார்.

இதன்படி நாமக்கல் மாவட்டம் முதலிடத்தையும் விருதுநகர் இரண்டாம் பரிசும் சேலம் மற்றும் திருப்பத்தூர் மாவட்டம் மூன்றாம் பரிசும் பெற்றன. இந்த 3 மாவட்ட காவலர்களை நேரில் அழைத்து டிஜிபி சைலேந்திர பாபு பாராட்டினார். சைபர் கிரைம் தொடர்பாக உடனடி உதவி தேவைப்பட்டால் 155260 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

### வேலை இழந்த என்யூஎல்எம் தொழிலாளர்களுக்கு

# முகாம்கள் நடத்தி வேலை வழங்க சென்னை மாநகராட்சி நடவடிக்கை

■ சென்னை

சென்னை மாநகராட்சியில் வேலை இழந்த என்யூஎல்எம் தொழிலாளர்களுக்கு, வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி வேலை வழங்க மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களில், 12 மண்டலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் தூய்மைப் பணிகளை தனியார் நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. இதற்கு முன்பு, அந்த 12 மண்டலங்களில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (என்யூஎல்எம்) கீழ் தொகுப்பூதிய அடிப்படையில் ஒப்பந்த தொழிலாளர்கள் தூய்மைப் பணி மேற்கொண்டு வந்தனர்.

**பணி நீக்கம்**

இப்பணி தனியாருக்கு வழங்கப்பட்டதால், அங்கு பணியாற்றிய ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இவர்களுக்கு மீண்டும் பணி வழங்குமாறு, தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத் தலைவர் மா.வெங்கடேசன் மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடியிடம் கூறியிருந்தார்.

இதன் தொடர்ச்சியாக, என்யூஎல்எம் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் சென்னை என்விரோ சொல்யூஷன்ஸ் நிறுவனம் சார்பில் மணலி மண்டலத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த முகாமில் பேட்டரியால் இயங்கும் வாகனங்களின் ஓட்டுநர்கள், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் வாகன உதவியாளர்கள் ஆகிய பணிகளுக்கு 214 தொழிலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு வழங்கப்படும். தொடர்ந்து இதுபோன்று சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு உரிய பணி வழங்கப்பட்டும் என்று மாநகராட்சி உறுதியளித்துள்ளது.



▲ சென்னை புறநகர் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் அவ்வப்போது பெய்து வரும் மழையால், சென்னையின் முக்கிய குடிநீர் ஆதாரமான புழல் ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை நீர் நிறைந்து கடல்போல காட்சியளிக்கும் புழல் ஏரி. படம்: ம.பிரபு

(C) KSL Media Ltd.



▲ செல்லப் பிராணிகளுக்கு கெனைன் பார்வோ வைரஸ் பாதிப்பைத் தடுக்கும் வகையில், இலவச சிறப்பு தடுப்பூசி முகாம், சென்னை பெசன்ட் நகரில் உள்ள பெசன்ட் மெமோரியல் கால்நடை மருத்துவமனையில் நேற்று நடைபெற்றது. இதில் ஏராளமானோர் தங்கள் செல்லப் பிராணிகளுக்கு தடுப்பூசி செலுத்திக் கொண்டனர். படம்: பு.க.பிரவீன்.

### ஹாலிவுட் ஒளிப்பதிவாளர் சுரேஷ்ரோஹின் வழங்கிய

# ரூ.1.20 கோடி மதிப்பிலான வென்டிலேட்டர்களை உதயநிதி ஸ்டாலினிடம் ஒப்படைத்தார் தங்கர்பச்சான்

■ சென்னை

கரோனா வைரஸ் பரவல் தடுப்பு மற்றும் நிவாரணத்துக்காக பல்வேறு தரப்பிலிருந்தும் நிதி மற்றும் மருத்துவ உபகரணங்கள் வந்துள்ளன. இந்நிலையில், கனடாவைச் சேர்ந்த ஹாலிவுட் ஒளிப்பதிவாளர் சுரேஷ் ரோஹின் ஏற்பாட்டில், ரூ.1.20 கோடி மதிப்பிலான 14 போர்ட்டபிள் வென்டிலேட்டர் கருவிகள் தமிழகத்துக்கு அனுப்பப்பட்டிருந்தன.

இவற்றை, சட்டப்பேரவை உறுப்பினர் உதயநிதி ஸ்டாலினிடம், ஒளிப்பதிவாளரும், இயக்குநருமான தங்கர்பச்சான் ஒப்படைத்தார்.

அப்போது, சமீபத்தில் கடலூர் மருத்துவமனையில் வென்டிலேட்டர் தட்டுப்பாட்டால் ஏற்பட்ட பாதிப்பை கனடா நண்பருடன் பகிர்ந்து கொண்டதால், அவர் இக்கருவிகளை வாங்கி அனுப்பிவைத்ததாக தங்கர் பச்சான் தெரிவித்தார். சந்திப்பின் போது, நடிகர் நாகிநீடு உடனிருந்தார்.



▲ ஹாலிவுட் ஒளிப்பதிவாளர் சுரேஷ்ரோஹின் வழங்கிய ரூ.1.20 கோடி மதிப்பிலான வென்டிலேட்டர்களை உதயநிதி ஸ்டாலின் எம்எல்ஏவிடம் ஒப்படைத்த திரைப்பட இயக்குநர் தங்கர்பச்சான். உடன், நடிகர் நாகிநீடு.

### எழும்பூர் அரசு மருத்துவமனையில்

# ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

● மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

■ சென்னை

எழும்பூர் அரசு தாய் சேய் நல மருத்துவமனையில் ஒப்பந்த அடிப்படையில் 6 மாதங்களுக்கு பணியாற்ற செவிலியர்கள், மருந்தாளுநர்கள் விண்ணப்பிக்கலாம்.

சென்னையில் கரோனா தொற்று தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒருபகுதியாக சென்னை அரசு தாய் சேய் நல மருத்துவமனையில் 60 செவிலியர்கள், 10 மருந்தாளுநர்கள், 5 ஆய்வக தொழில்நுட்பனர், 10 மயக்கவியல் தொழில்நுட்புனர், 10 இசிஜி தொழில்நுட்பனர் மற்றும் 70 மருத்துவமனை பல்நோக்கு ஊழியர்கள் என மொத்தம் 165 பேர் ஒப்பந்த அடிப்படையில் 6 மாதங்களுக்கு மட்டும் நியமிக்கப்படவுள்ளனர்.

மாதம் ரூ.12 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரை சம்பளம் வழங்கப்படும். இப்பணியிடங்கள் முற்றிலும் தற்காலிகமானது. ஒப்பந்த அடிப்படையில் 6 மாதங்களுக்கு மட்டும் நிரப்பப்பட உள்ளன. பணி நிரந்தரம் செய்யப்படாது.

**விண்ணப்பிக்க கடைசி நாள்**

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது அனைத்து கல்வித் தகுதியின் சான்றிதழ்களின் நகல்களுடன் புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பத்தை இயக்குநர் மற்றும் பேராசிரியர், மகப்பேறு மகளிர் நோயியல் நிலையம் மற்றும் அரசு தாய் சேய் நல மருத்துவமனை, எழும்பூர், சென்னை-8 என்ற முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அளிக்கலாம். விண்ணப்பிக்க கடைசி நாள் வரும் ஆகஸ்ட் 3-ம் தேதி ஆகும் என்று சென்னை மாவட்ட ஆட்சியர் ஜெ.விஜயா ராணி தெரிவித்துள்ளார்.



▲ பழைய வாகன உதிரிபாகங்களைக் கொண்டு கலைநுணுக்கத்துடன் சிற்பங்கள் அமைக்கப்பட்டு, அவை சென்னை மாநகராட்சியின் பல்வேறு இடங்களில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. மெரினா கடற்கரையில் வைக்கப்பட்டுள்ள ராட்சத மீன் சிற்பம். படம்: பு.க.பிரவீன்

## மாற்றுத் திறனாளிகளின் கோரிக்கை: இணையத்தில் பதிவேற்ற ஏற்பாடு

■ சென்னை

சென்னை மாவட்ட ஆட்சியர் விஜயா ராணி வெளியிட்ட செய்திக்குறிப்பு: சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் வரும் 30-ம் தேதி வரை, தங்களது கோரிக்கை மனுக்களை *http://chennai.nic.in* என்ற இணையதளத்தில் *district collector chennai-special grievance petitions for differently abled* என்ற இணையதள பக்கத்தில் பதிவேற்றம் செய்யலாம்.

இந்த விண்ணப்பங்களை பரிசீலனை செய்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர். நேர்காணல் தேதி பின்னர் அறிவிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



▸▸ தாம்பரத்தை அடுத்த மண்ணிவாக்கம் ஸ்ரீநடேசன் வித்யாசாலா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் 9-ம் வகுப்பு மாணவன் தனுஷ்குமார், கோவாவில் நடந்த தேசிய அளவிலான சிலம்பம் போட்டியில் 14 வயதுக்கு உட்பட்ட பிரிவில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம், பாராட்டுப் பத்திரம் பெற்றுள்ளார். வெற்றிவாகை சூடிய மாணவனுக்கு பள்ளி நிறுவனர் டாக்டர் ந.ராமசுப்ரமணியன் பொன்னாடை போர்த்தி, ரூ.15 ஆயிரம் ஊக்கத் தொகை வழங்கினார். தனியார் நிறுவனத்தில் ஓட்டுநராக பணிபுரியும், மாணவனின் தந்தை சுரேஷையும் அவர் கவுரவித்தார்.








▲ பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தி வரும் மத்திய அரசைக் கண்டித்து தொமுச பேரவை, சென்னை பெருநகர் ஆட்டோ ஓட்டுநர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில், சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் ஆட்டோ ஓட்டுநர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் நடராஜன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். படம் க.ஸ்ரீபரத்

## தூய்மைப் பணி திட்டத்தில் 4,000 டன் குப்பை அகற்றம்

■ சென்னை

சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பு: மாநகராட்சி பகுதிகளில், நீண்ட நாட்களாக தேங்கிக் கிடக்கும் குப்பைகள் மற்றும் கட்டிடக் கழிவுகளை அகற்ற மாதந்தோறும் ஒரு வாரக்காலத்துக்கு தீவிர தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி ஜூலை மாதத்தில் 19 முதல் 23-ம் தேதி வரை நடைபெற்ற தீவிர தூய்மைப் பணியில் 4,479 டன் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளன.

பொது இடங்களை தூய்மைப்படுத்தி மாநகரின் அழகை பராமரிக்க மாநகராட்சி சார்பில் பொது இடங்கள், அரசு கட்டிடங்கள் மற்றும் பாலங்கள் போன்ற இடங்களில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள் மாநகராட்சி பணியாளர்களால் ஏற்கனவே அகற்றப்பட்டு வருகின்றன. சனிக்கிழமையும், சுவரொட்டிகளை அகற்றும் பணி நடைபெற்றது.

### தவறுதலாக பிளீச்சிங் பவுடரை சாப்பிட்டு

# உடல் மெலிந்த சிறுமிக்கு தீவிர சிகிச்சை

● சுகாதாரத் துறை அமைச்சர் நலம் விசாரித்தார்

■ சென்னை

தென்காசி மாவட்டம் செங்கோட்டையை சேர்ந்த 5 வயது சிறுமி இசக்கியம்மாள். இவர் கடந்த மார்ச் மாதம் தவறுதலாக பிளீச்சிங் பவுடரை சாப்பிட்டதால் உணவுக் குழாய் பாதிப்பு, உடல் எடை இழப்பு போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டார். அங்கு உள்ள அரசு மருத்துவர்களின் பரிந்துரைப்படி, மேல் சிகிச்சைக்காக சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் சிறுமி சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில், மருத்துவமனைக்கு நேற்று வந்த சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிகிச்சை பெறும் சிறுமியிடம் நலம் விசாரித்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:

சிறுமி 14 கிலோ எடையுடன் ஆரோக்கியமாகவே இருந்துள்ளார். தவறுதலாக பிளீச்சிங் பவுடரை சாப்பிட்ட பிறகு, திடீரென உடல் மெலிந்து 6 கிலோவாக குறைந்தது. எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் 10 நாட்களாக சிகிச்சை பெற்று வருகிறார். திரவ உணவு கொடுப்பதற்காக சிறுமியின் வயிற்றில் சிறு துளைக்கான அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அதன்மூலம் சிறுமிக்கு உணவு கொடுக்கப்படுகிறது.

அவர் இன்னும் ஒரு மாதத்துக்கு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறவேண்டி உள்ளது.

சிறுமியின் தாயும், தந்தையும் தங்க எனக்கு வழங்கப்பட்டுள்ள சட்டப் பேரவை உறுப்பினர் விடுதியை அவர்களுக்கு கொடுத்துள்ளேன். சிறுமிக்கு சிகிச்சை முடியும் வரை அவர்கள் எனக்கு வழங்கப்பட்ட வீட்டில் தங்கிக் கொள்ளலாம் என்றார்.

## இந்தியா-பாக். போர் வெற்றியின் பொன்விழா வெற்றி ஜோதிக்கு வரவேற்பு

■ சென்னை

இந்தியா-பாகிஸ்தான் போர் வெற்றியின் பொன்விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு கொண்டுவரப்பட்ட வெற்றி ஜோதிக்கு தாம்பரம் விமானப்படை தளத்தில் நேற்று சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

1971-ல் இந்தியா-பாகிஸ்தான் இடையே நடைபெற்ற போரில் இந்தியாவின் வெற்றியை நினைவுகூரும் வகையில், ஸ்வர்ணம் விஜய் வர்ஷ் என்ற பெயரில் 50-ம் ஆண்டு பொன்விழா கொண்டாட்டங்களை பிரதமர் மோடி கடந்த ஆண்டு டிசம்பரில் டெல்லியில் தொடங்கி வைத்தார்.

அப்போது, தேசிய போர் நினைவுச் சின்னத்தில் உள்ள தீச்சுடர் 4 வெற்றி ஜோதிகளாக உருவாக்கப்பட்டன. 1971 போரில் பங்கு பெற்ற வீரர்கள் மற்றும் விதவைகள் உள்ள நகரங்கள், கிராமங்கள் வழியாக நாட்டின் நான்கு திசைகளுக்கும் அவை கொண்டு செல்லப்படுகின்றன.

அதன்படி, தமிழகத்தில் கன்னியாகுமரி வழியாக சென்னையில் உள்ள இந்திய ராணுவத்தின் தெற்கு மண்டல தலைமையகத்துக்கு கடந்த 20-ம் தேதி வெற்றி ஜோதி கொண்டுவரப்பட்டது. இந்த வெற்றி ஜோதி தாம்பரத்தில் உள்ள இந்திய விமானப்படை தளத்துக்கு நேற்று கொண்டுவரப்பட்டது.

அதை, விமானப்படை தள அதிகாரி விபுல் சிங் மற்றும் ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரிகள் பெற்றுக் கொண்டனர். இந்தியா-பாகிஸ்தான் போரில் பங்கேற்ற வீரர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து, பள்ளி மாணவர்கள், விமானப்படை வீரர்களின் கலை, சாகச நிகழ்ச்சிகள் நடைபெற்றன.




**பொன்மொழி** வியாபார ரீதியாக அரசாங்கத்தை நடத்த முடியாது. அது மனிதாபிமானியாக இருக்க வேண்டும். அது ஓர் இதயம் கொண்டிருக்க வேண்டும்.
- ஹென்றி லெனன்

**இணையம்:** ஸ்காட்லாந்தின் ஆண்ட்ரூ யூல் என்ற இளைஞர் 1863–ல் இந்தியாவின் அப்போதைய தலைநகரான கல்கத்தாவுக்கு வந்து ரயில்வே, தந்தி, தபால் சேவை நிர்வாக நிறுவனம் தொடங்கினார். 1875–ல் இது சணல், தேநீர், பருத்தி, நிலக்கரி, காப்பீடு துறைகளில் இறங்கியது. www.andrewyule.com இணையதளத்தில் இதன் செயல்பாடுகளை அறியலாம்.

**பொதுஅறிவு:** பயிரிடப்படும் நிலங்கள் நஞ்சை, புஞ்சை என இரண்டாக பிரிக்கப்படுகின்றன. ஆண்டு முழுவதும் மழை வளத்துடன் பயிர் செய்யக்கூடிய நிலங்கள் நன்செய் (நஞ்சை) என்றும், பருவமழையை மட்டுமே நம்பி பயிர் செய்யும் நிலங்கள் புன்செய் (புஞ்சை) என்றும் அழைக்கப்படுகின்றன.

சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் சுரங்கப் பணிகள்

# செயற்கை மணல் தயாரிப்பு, விற்பனைக்கு புதிய கொள்கை

**● அதிகாரிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு**

■ **சென்னை**

தமிழகத்தில் சுற்றுச்சூழலை பாதிக்காமல் சுரங்கப் பணிகளை மேற்கொள்ள நிலையான சுரங்கக் கொள்கை, செயற்கை மணல் தயாரிப்பு மற்றும் விற்பனையை ஒழுங்குபடுத்த புதிய கொள்கை ஆகியவற்றை உருவாக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

தலைமைச் செயலகத்தில் புவியியல் மற்றும் சுரங்கத் துறை, தமிழ்நாடு கனிம நிறுவனம், தமிழ்நாடு மேக்னசைட் நிறுவன செயல்பாடுகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் முதல்வர் ஸ்டாலின் வழங்கிய அறிவுறுத்தல்கள்:

சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் பாதிக்கப்படாமல் சுரங்கப் பணிகளை மேற்கொள்வது குறித்த நிலையான சுரங்கக் கொள்கை, செயற்கை மணல் தயாரிப்பு மற்றும் விற்பனையை ஒழுங்குமுறைப்படுத்த புதிய கொள்கை ஆகியவற்றை உருவாக்க வேண்டும். கனிம வருவாயை பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பயன்பாட்டில் உள்ள குவாரிகளை கண்டறிந்து, வாய்ப்பு உள்ள இடங்களில் அவற்றை மழைநீர் சேகரிப்பு அமைப்புகளாக மாற்றி, பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும்.

பொதுமக்கள் மற்றும் கால்நடைகளுக்கு பாதிப்பு விளைவிக்கும் பயனற்ற கல்குவாரிகளை மறுசீரமைப்பு செய்து, பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**2 கோடி ஆண்டு பழைய படிமம்**

விழுப்புரம் மாவட்டம் திருவக்கரை கிராமத்தில் உள்ள 2 கோடி ஆண்டுகள் பழமைவாய்ந்த கல்மரப் படிமங்கள் மற்றும் திருச்சி, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் உள்ள தொல்லுயிர் படிமங்கள் ஆகியவற்றை பாதுகாத்து, யுனெஸ்கோவின் பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் சேர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மின்னணு சேவை முறை**

புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் குத்தகை விண்ணப்பம் பெறுவதில் தொடங்கி, குவாரி குத்தகை உரிமம் மற்றும் நடைச்சீட்டு வழங்கும் வரை சுரங்க நிர்வாகத்தில் மின்னணு சேவை முறையை ஏற்படுத்த விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு கனிம நிறுவனம், அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.250 கோடி அளவுக்கு வருவாயை உயர்த்த முயற்சி எடுக்க வேண்டும். சிவகங்கை மாவட்டத்தில் கிடைக்கும் கிராஃபைட்டில் இருந்து அதிக செறிவூட்டப்பட்ட உயர்தர கிராஃபைட் தயாரிக்க உரிய தொழில்நுட்பத்தை கண்டறிய வேண்டும்.

அரக்கோணம் அருகே செயற்கை மணல் தயாரிக்க புதிய உற்பத்திப் பிரிவு தொடங்க செயல்திட்டம் உருவாக்க வேண்டும்.

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம், கூடுதல் சுரங்கப் பகுதிகளை அடுத்த 3 ஆண்டுகளில் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும். உலகத் தரம் வாய்ந்த ஆலோசகரை நியமித்து உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும்.

இவ்வாறு முதல்வர் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலர் வெ.இறையன்பு, நிதித் துறை செயலர் ச.கிருஷ்ணன், தொழில் துறை செயலர் நா.முருகானந்தம், சிறப்பு செயலர் ரா.லில்லி, புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநர் இல.நிர்மல்ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தமிழக மக்களின் எதிர்ப்பை சந்திக்க நேரிடும்

# மீண்டும் லாட்டரி சீட்டை கொண்டுவர வேண்டாம்

**● அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி எச்சரிக்கை**

■ **சென்னை**

தமிழகத்தில் மீண்டும் லாட்டரி சீட்டு கொண்டுவர திமுக அரசு முயற்சிக்க வேண்டாம். மக்களின் எதிர்ப்பை சந்திக்க நேரிடும் என்று எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை:

உன்னத நோக்கத்தில் தொடங்கப்பட்ட லாட்டரி சீட்டு திட்டத்தில் மு.கருணாநிதி, தமிழக முதல்வராக இருந்தபோது தனியாரை நுழைய அனுமதித்து லாட்டரி சீட்டு திட்டத்தை சீரழித்தார். அப்போதுதான் வெளி மாநில லாட்டரிகள் தமிழகத்தில் அனுமதிக்கப்பட்டன. ஒரு சீட்டின் விலை ரூ.10 என்றும் பரிசு ரூ.1 கோடி என்றும் மக்களிடையே பேராசை தூண்டப்பட்டது. ரூ.1-க்கு ஒரு லட்சம், மாதம் ஒருமுறை குலுக்கல் என்ற நிலை மாறி, ஒரு நம்பர் லாட்டரி முதல் பல கோடி வரை பரிசு என்று ஒரு நாளுக்கு 50 விதமான லாட்டரிகள் விற்பனை தமிழகத்தில் நடந்தது.

இதனால் குதிரை ரேஸ், சீட்டாட்டம் போல லாட்டரி சீட்டு தமிழகத்தில் மாபெரும் சூதாட்டமாக மாறியது. தனியார் ஏஜென்ட்கள், கள்ள நோட்டுகள் போல அச்சிட்டு லாட்டரி சீட்டுகளை விற்றனர். ஆசை வார்த்தைகளை நம்பி அப்பாவி ஏழைகள், லாட்டரி மயக்கத்தில் தங்கள் குடும்பத்தையும், வாழ்வையும் இழந்தனர். பல அப்பாவிகள் தற்கொலை செய்துகொண்ட அவலமும் நிகழ்ந்தது.

ஜெயலலிதா 2-வது முறையாக 2001-ல் ஆட்சி அமைத்த பிறகு, லாட்டரி கொள்ளையர்கள் பிடியில் இருந்து மக்களை காக்க 2003 ஜனவரியில் ஒரே கையெழுத்தில் லாட்டரி சீட்டை ஒழித்தார். இதை எதிர்த்து லாட்டரி விற்பனையாளர்கள் உச்ச நீதிமன்றம் வரை வழக்கு தொடர்ந்து தோல்வியை சந்தித்தனர். அதன் பிறகுதான், பல ஆண்டுகளாக லாட்டரியின் பிடியில் இருந்த ஏழை மக்கள் தப்பி, நல்வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது பதவிக்கு வந்துள்ள திமுக அரசு, ஆட்சிக்கு வருவதற்கு முன்பு வருவாயை பெருக்கும் வழி எங்களுக்குத் தெரியும் என்று கூறிவிட்டு, லாட்டரி சீட்டை மீண்டும் கொண்டு வந்து நாட்டை சுடுகாடாக்க முடிவெடுத்துள்ளது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது.

தனியார் லாட்டரி ஏஜென்ட்கள் கொள்ளை அடிக்கவும், அதன் மூலம் ஆட்சியாளர்கள் பெருத்த ஆதாயம் பெறுவதற்குமான இந்த அதிகாரப்பூர்வ லாட்டரி சீட்டு திட்டத்தை திமுக அரசு கைவிட வேண்டும். அரசின் வருவாயை பெருக்க நல்ல வழிகளைத் தேட வேண்டும். மீண்டும் லாட்டரி சீட்டை கொண்டு வந்தால் மக்களின் மிகப்பெரிய எதிர்ப்பை ஸ்டாலின் அரசு சந்திக்க நேரிடும் என அதிமுக சார்பில் எச்சரிக்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



▲ நிமோனியா காய்ச்சலை தடுப்பதற்காக குழந்தைகளுக்கு 'நிமோகாக்கல்' தடுப்பூசி போடும் திட்டத்தை சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று தொடங்கி வைத்தார். உடன் மருத்துவமனை இயக்குநர் எழிலரசி, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை டீன் தேரணிராஜன், எம்எல்ஏ பரந்தாமன் மற்றும் மருத்துவக் குழுவினர். படம் க.ஸ்ரீபரத்

நிமோனியா, மூளைக் காய்ச்சலை தடுக்க

# குழந்தைகளுக்கு இலவசமாக 3 தவணை தடுப்பூசிகள்

**● சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்**

■ **சென்னை**

தமிழகத்தில் நிமோனியா, மூளைக் காய்ச்சலைத் தடுக்க குழந்தைகளுக்கு 3 தவணை நிமோகாக்கல் தடுப்பூசி இலவசமாக போடப்படுவதாக சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் குழந்தைகளுக்கு நிமோகாக்கல் தடுப்பூசி போடும் பணி நேற்று தொடங்கியது. சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தடுப்பூசி போடும் பணியை பார்வையிட்டார். துறை செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன், மருத்துவக் கல்வி இயக்குநர் நாராயணபாபு, சென்னை அரசு பொது மருத்துவமனை டீன் தேரணிராஜன், எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் எழிலரசி, எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனை இயக்குநர் விஜயா ஆகியோர் உடன் இருந்தனர்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:

இந்தியாவில் ஆண்டுதோறும் நிமோனியா, மூளைக் காய்ச்சல் போன்ற பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு 12 லட்சம் குழந்தைகள் உயிரிழக்கின்றனர். இந்த நோய்களால் குழந்தைகள் பாதிக்கப்படுவதைத் தடுக்க தேசிய தடுப்பூசி திட்டத்தின் கீழ் கடந்த 2 ஆண்டுகளாக பல மாநிலங்களில் நிமோகாக்கல் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. இந்தியாவில் 21 மாநிலங்களில் 2 ஆண்டுகளுக்கு முன்பு இந்த தடுப்பூசி திட்டம் தொடங்கப்பட்டது. ஆனால், தமிழக அரசு இத்திட்டத்தை தொடங்கவில்லை. தனியார் மருத்துவமனைகளில் மட்டும் இந்த தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தமிழகத்தில் நிமோகாக்கல் தடுப்பூசி போடும் பணி கடந்த வாரம் திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கப்பட்டது.

எழும்பூர் அரசு குழந்தைகள் மருத்துவமனையில் தற்போது தடுப்பூசி போடும் பணி தொடங்கப்பட்டுள்ளது. ஒன்றரை மாதம், மூன்றரை மாதம் மற்றும் 9 மாதம் என மூன்று தவணைகளில் இந்த தடுப்பூசியைப் போட வேண்டும்.

**தனியாரில் ரூ.12 ஆயிரம்**

தமிழகம் முழுவதும் அரசு சார்பில் 3 தவணை தடுப்பூசியும் இலவசமாக போடப்படுகிறது. இதுவே, தனியார் மருத்துவமனைகளில் ஒரு தவணைக்கு ரூ.4 ஆயிரம் என மொத்தம் ரூ.12 ஆயிரம் வரை செலவாகும்.

தமிழகத்தில் 5 வயதுக்கு உட்பட்ட 9.23 லட்சம் குழந்தைகள் உள்ளனர். மத்திய அரசிடம் இருந்து முதல் கட்டமாக 70 ஆயிரம் தடுப்பூசிகள் வந்துள்ளன. எந்த தேதியில் வந்து குழந்தைக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என பெற்றோருக்கு குறுஞ்செய்தி (எஸ்எம்எஸ்) அனுப்பப்படும்.

'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளது. கிருஷ்ணகிரி, தருமபுரி அல்லது விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஏதாவது ஒரு கிராமத்தில் முதல்வர் ஸ்டாலின் இத்திட்டத்தை தொடங்கி வைப்பார்.

இவ்வாறு அவர் கூறினார்.

காவல் துறைக்கு எதிரான வழக்குகளில்

# குற்றவியல் நடுவர்கள் இயந்திரத்தனமாக செயல்படக் கூடாது

**● ஆவணங்களை ஆராய்ந்து உரிய உத்தரவு பிறப்பிக்க உயர் நீதிமன்றம் அறிவுரை**

■ **சென்னை**

காவல் துறைக்கு எதிரான வழக்குகளில் குற்றவியல் நடுவர்கள் இயந்திரத்தனமாக செயல்படக் கூடாது என்று உயர் நீதிமன்றம் அறிவுரை வழங்கியுள்ளது.

திருவண்ணாமலை வழக்கறிஞர் பாலசுப்பிரமணியம், அதிக வட்டிக்கு பணம் கடனாக கொடுத்து, தனது சொத்தை அபகரித்துக் கொண்டதாகக் கூறி, ஆர்த்தி என்பவர் திருவண்ணாமலை முதலாவது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

அந்த வழக்கை விசாரித்த குற்றவியல் நடுவர், குற்றத்துக்கான முகாந்திரம் இருந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும், வழக்கை முடித்து வைப்பதாக இருந்தால் அதுகுறித்த அறிக்கையை மனுதாரருக்கு வழங்குமாறும் உத்தரவிட்டிருந்தார். அதன்படி, விசாரணை நடத்திய போலீஸார், வழக்கை முடித்துவைத்து, மனுதாரருக்கு அறிக்கை அனுப்பினர்.

இதையடுத்து, வழக்கறிஞருக்கு எதிரான தனது புகார் மீது வழக்கு பதிவு செய்ய உத்தரவிடக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆர்த்தி மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு ஏற்கெனவே நீதிபதி எம்.நிர்மல்குமார் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, ஏற்கெனவே அச்சிடப்பட்டு தயாராக இருந்த உத்தரவு நகலில் காலியாக விடப்பட்ட பகுதியை மட்டும் திருவண்ணாமலை குற்றவியல் நடுவர் கையால் பூர்த்தி செய்து, உத்தரவு பிறப்பித்ததற்காக நீதிபதி கடும் கண்டனம் தெரிவித்திருந்தார்.

மேலும், இது தொடர்பாக திருவண்ணாமலை தலைமைக் குற்றவியல் நடுவர் விசாரணை நடத்தி, அறிக்கை தாக்கல் செய்யவும் உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், 'பணி அழுத்தம் காரணமாக அந்த குற்றவியல் நடுவர் இதுபோல உத்தரவைப் பிறப்பித்துள்ளதாகவும், வேறு உள்நோக்கம் இல்லை' எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையை அரைகுறை மனதுடன் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்த நீதிபதி, எதிர்காலத்தில் இதுபோல அச்சிடப்பட்ட உத்தரவுகளைப் பிறப்பிக்கக் கூடாது என்று திருவண்ணாமலை முதலாவது குற்றவியல் நடுவருக்கு அறிவுறுத்தினார்.

மேலும், காவல் துறைக்கு எதிரான வழக்குகளில், ஆவணங்களை ஆராய்ந்து உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்ற உத்தரவுகளை சுட்டிக் காட்டிய நீதிபதி எம்.நிர்மல்குமார், இனிவரும் நாட்களில் குற்றவியல் நடுவர்கள் இயந்திரத்தனமாக செயல்படக் கூடாது என்றும் அறிவுரை வழங்கினார்.

மேலும், இது தொடர்பாக மனுதாரர் அளித்துள்ள புகாரை போலீஸார் முறையாகப் பரிசீலித்து, உரிய முடிவு எடுக்க வேண்டும் என உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தார்.

'இந்து தமிழ் திசை' நாளிதழ், சங்கர் ஐஏஎஸ் அகாடமி சார்பில்

# இணைய வழியில் இன்று காலை 'ஆளப் பிறந்தோம்' வழிகாட்டு நிகழ்ச்சி

**● யுபிஎஸ்சி, டிஎன்பிஎஸ்சி தேர்வு எழுத விரும்புவோர் பங்கேற்கலாம்**

■ **சென்னை**

'இந்து தமிழ் திசை' நாளிதழ், 'சங்கர் ஐஏஎஸ் அகாடமி' யுடன் இணைந்து வழங்கும் 'ஆளப் பிறந்தோம்' எனும் வழிகாட்டு நிகழ்ச்சி இன்று (ஞாயிறு) காலை 10.30 மணிக்கு இணைய வழியில் நடைபெற உள்ளது.

யுபிஎஸ்சி, டிஎன்பிஎஸ்சி தேர்வுகளில் வெற்றி பெற வேண்டும் என்ற ஆசை பலருக்கும் உண்டு. ஆனால், அதற்கான கல்வித் தகுதி என்ன, எத்தனை ஆண்டுகள் படிக்க வேண்டும், அதிக செலவு ஆகுமா என ஏராளமான கேள்விகளுடன் தயங்கி நிற்பவர்களே அதிகம்.



அவ்வாறான தயக்கத்தைப் போக்கி, இத்தேர்வுகளுக்கு படிப்பதற்கான தெளிவைத் தரும் நோக்கில் 'ஆளப் பிறந்தோம்' என்ற நிகழ்ச்சி இன்று நடத்தப்படுகிறது. காலை 10.30 மணிக்கு தொடங்கும் இந்த நிகழ்ச்சி மதியம் 1 மணி வரை நடைபெறும்.

இதில் மகாராஷ்டிர மாநிலம் அமராவதி (ஊரகம்) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் என்.ஹரி பாலாஜி, ஐபிஎஸ்., திருநெல்வேலி மாவட்டம் சேரன் மகாதேவி சார் ஆட்சியர் வி.சிவ கிருஷ்ணமூர்த்தி ஐஏஎஸ்., சங்கர் ஐஏஎஸ் அகாடமி இயக்குநர் டாக்டர் எஸ்.டி.வைஷ்ணவி ஆகியோர் கருத்துரையாற்ற உள்ளனர்.

பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், யுபிஎஸ்சி, டிஎன்பிஎஸ்சி தேர்வுகளுக்கு தயாராகும் அனைவரும் இதில் கலந்துகொண்டு பயன்பெறலாம். பங்கேற்க விரும்புவோர் http://bit.ly/3pVDpGj என்ற லிங்க்கில் பதிவுசெய்து கொள்ளலாம்.

# அரசு ஊழியர் ஓய்வு வயதை 58 ஆக குறைக்க வேண்டும்

**● முதல்வருக்கு கி.வீரமணி வேண்டுகோள்**

■ **சென்னை**

வேலையில்லாதோர் எண்ணிக்கை 67 லட்சத்தையும் கடந்த நிலையில், அரசு ஊழியர்களின் ஓய்வு வயதை 58 ஆக குறைக்க வேண்டியது அவசியம் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து வேலைக்காக காத்திருக்கும் இளைஞர்கள், நடுத்தர வயதினர்களின் எண்ணிக்கை 67 லட்சத்து 76 ஆயிரமாக உள்ளது என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இதில் பட்டதாரி மற்றும் வயது குறைந்த இளைஞர்களின் எண்ணிக்கை சுமார் 12 லட்சம்.

சுமார் ஒன்றரை லட்சம் மாற்றுத் திறனாளிகள் வேலைக்கு விண்ணப்பித்துக் காத்திருக்கின்றனர். இதற்கு முக்கிய காரணம் முந்தைய அதிமுக அரசுதான்.

மாநில அரசுக்கு சுமார் 5 லட்சம் கோடி கடன். அதில் பெரும் பகுதி பழைய கடனுக்கு கட்ட வேண்டிய வட்டித் தொகைக்காகவே புதிய கடன் என்ற விசித்திரமான 'நிதி மேலாண்மை' நிர்வாகம். இந்நிலையில், ஓய்வு பெற்று செல்லும் அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியத் தொகை, பென்ஷன் உடனடியாக வழங்க இயலாததால், அவர்களை பதவியில் நீடிக்கச் செய்யும் 'உத்தி'யாகத்தான் 58 என்ற ஓய்வு வயதை 60 ஆக ஆக்கினார்கள்.

கடினமான நிதி நெருக்கடியிலும் தேர்தல் வாக்குறுதிகளை முதல்வர் நிறைவேற்றி வருகிறார். இதில் தெளிவான கொள்கை முடிவாக, ஓய்வு வயது 60 ஆக உயர்த்தியதை, மீண்டும் 58 ஆக குறைக்க வேண்டும்.

மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட பலருக்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்க குறுகிய காலத்தில் 29 ஆயிரம் கோடி முதலீடுகளை சிறப்பாக தொழில் துறையில் ஈர்த்துள்ளதை தொடர வேண்டும். வேலைவாய்ப்புகள் பெருகி, இளைஞர்கள் துயர் நீங்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பாதிரியார் ஜார்ஜ் பொன்னையா பேச்சைக் கண்டித்து

# தமிழகம் முழுவதும் பாஜகவினர் ஆர்ப்பாட்டம்

■ **சென்னை**

பாதிரியார் ஜார்ஜ் பொன்னையாவின் பேச்சைக் கண்டித்து தமிழகம் முழுவதும் பாஜக சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரை பாதிரியார் ஜார்ஜ் பொன்னையா இழிவாகப் பேசியதாக கண்டனம் தெரிவித்து, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பாஜக சென்னை கிழக்கு மாவட்டத் தலைவர் விஜய் ஆனந்த் தலைமை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் மதுவந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் மதுவந்தி கூறும்போது, "மதக் கலவரத்தை உருவாக்கும் வகையில் ஜார்ஜ் பொன்னையா பேசியுள்ளார். திமுக மற்றும் தமிழக முதல்வரையும்கூட அவர் இழிவாகப் பேசியுள்ளார். ஆனால், திமுக ஏன் இன்னும் வாய் மூடி உள்ளது என்று தெரியவில்லை. மதம், தேசியம், ஒருமைப்பாட்டை தவறாகப் பேசினால் பாஜக பார்த்துக் கொண்டிருக்காது. பாஜக மதத்தை வைத்து அரசியல் செய்யும் கட்சி இல்லை" என்றார்.

இதேபோல, தமிழகம் முழுவதும் பாஜக மாவட்டத் தலைவர்கள் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

# புதிதாக 1,819 பேருக்கு கரோனா வைரஸ் தொற்று

**● ஒரே நாளில் 2,583 பேர் குணமடைந்து வீடு திரும்பினர்**

■ **சென்னை**

தமிழகத்தில் புதிதாக 1,819 பேருக்கு கரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. ஒரே நாளில் முதியவர்கள் உட்பட 27 பேர் உயிரிழந்தனர்.

இதுதொடர்பாக தமிழக சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

தமிழகத்தில் நேற்று ஆண்கள் 1,026, பெண்கள் 793 என மொத்தம் 1,819 பேர் கரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டனர். இதன் மூலம் தமிழகத்தில் பாதிப்பு எண்ணிக்கை 25 லட்சத்து 46,689 ஆக அதிகரித்துள்ளது.

தமிழகம் முழுவதும் இதுவரை 24 லட்சத்து 88,775 பேர் குணமடைந்துள்ளனர். நேற்று மட்டும் 2,583 பேர் குணமடைந்து வீடு திரும்பினர். 24,025 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

அரசு, தனியார் மருத்துவமனைகளில் நேற்று நடுத்தர வயதினர், முதியவர்கள் உட்பட 27 பேர் உயிரிழந்தனர். இதன்மூலம் தமிழகத்தில் கரோனா தொற்றால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 33,889 ஆக உயர்ந்துள்ளது. சென்னையில் மட்டும் 8,307 பேர் இறந்துள்ளனர்.

இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'சார்பட்டா' திரைப்படத்தில் எம்ஜிஆரை தவறாக சித்தரிப்பதா?

**● முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கண்டனம்**

■ **சென்னை**

எம்ஜிஆரை 'சார்பட்டா' திரைப்படத்தில் தவறாக சித்தரித்துள்ளதாக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பா.ரஞ்சித் இயக்கத்தில், ஆர்யா நடிப்பில் 'சார்பட்டா பரம்பரை' என்ற திரைப்படம் ஓடிடியில் கடந்த 22-ம் தேதி வெளியாகியுள்ளது. இப்படத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் நேற்று வெளியிட்ட அறிக்கை:

'சார்பட்டா' திரைப்படம் முழுக்க திமுக பிரச்சாரப் படமாகவே எடுக்கப்பட்டுள்ளது. மறைந்த முதல்வர் எம்ஜிஆருக்கும், விளையாட்டுத் துறைக்கும் சம்பந்தம் இல்லாததுபோல இதில் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

திரைப் பயணம் தொடங்கி அரசியல் பயணம் வரை விளையாட்டை விடாப்பிடியாக கைக்கொண்டவர் எம்ஜிஆர். மான் கொம்பு சண்டை, வாள் சண்டை, குத்துச்சண்டை, குதிரையேற்றம் என ஒவ்வொரு படத்திலும் விளையாட்டு வீரராகவே தன்னை வெளிப்படுத்திக் கொண்டார்.

1980-ல் தமிழ்நாடு அமெச்சூர் பாக்ஸர் சங்கத்துக்கு நிதி திரட்டும் வேடிக்கை குத்துச்சண்டையில் பங்கேற்க முகமது அலியை சென்னைக்கு அழைத்து வந்தார். முதல்வரான பிறகு, விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க எண்ணற்ற சலுகைகளை வழங்கினார். நலிவடைந்த வீரர்களுக்கு நிதியளித்து சர்வதேசப் போட்டிகளில் விளையாடச் செய்தார்.

ஆனால், திமுக ஆட்சியில் மட்டுமே விளையாட்டு வீரர்கள் மதிக்கப்பட்டது போலவும், எம்ஜிஆர் அவர்களை கைகழுவியது போலவும் இப்படத்தில் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

வரலாற்றைவிட கூர்மையானது கலை. எனவே, அதில் உண்மைகள் மறைக்கப்படுவது சம்பந்தப்பட்ட மனிதர்களுக்கு மட்டுமின்றி, வருங்கால தலைமுறைக்கே செய்யும் துரோகம். எத்தனையோ வீரர்களை ஊக்குவித்த எம்ஜிஆரை தவறாக சித்தரித்ததை வன்மையாக கண்டிக்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திருநின்றவூர் ரயில் நிலையத்தில்
# பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும்

● பால்வளத் துறை அமைச்சர் தகவல்

■ திருவள்ளூர்

திருநின்றவூர் ரயில் நிலையத்தில் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என அமைச்சர் சா.மு.நாசர் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர் ரயில் நிலையத்தில் அடிப்படை வசதிகள் செய்து தரக் கோரி, திருநின்றவூர் ரயில் பயணிகள் பொதுநலச் சங்கத்தின் சார்பில், தலைவர் எஸ்.முருகையன் தலைமையில் நிர்வாகிகள் பால்வளத் துறை அமைச்சர் நாசரிடம் கோரிக்கை மனு அளித்தனர். இதையடுத்து, அமைச்சர் திருநின்றவூர் ரயில் நிலையத்தில் ஆய்வு செய்தார்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:



▲ திருநின்றவூர் ரயில் நிலையத்தில் அமைச்சர் சா.மு.நாசர் ஆய்வு மேற்கொண்டார்.

திருநின்றவூர் ரயில் நிலையத்தில் இருந்து சென்னை சென்ட்ரலுக்கு மின்சார ரயில்களை இயக்க வேண்டும். தென்மாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகளின் வசதிக்காக, காலை, மாலை வேளைகளில் திருவள்ளூரில் இருந்து தாம்பரத்துக்கு நேரடி ரயில் போக்குவரத்தை இயக்க வேண்டும்.

திருநின்றவூரில் விரைவு ரயில்கள் நின்று செல்ல வேண்டும். திருநின்றவூர் ரயில் நிலையத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்த வேண்டும். அரக்கோணம்-சேலம் விரைவு ரயில் ஆவடியில் இருந்து இயக்கப்பட்டு, திருநின்றவூர், திருவள்ளூர் ரயில் நிலையங்களில் நின்று செல்ல வேண்டும்.

திருநின்றவூரில் இருந்து நெமிலிச்சேரி புறவழிச் சாலையாக தாம்பரத்துக்கு பேருந்து போக்குவரத்துசேவைகளை இயக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் ரயில் பயணிகள் சங்கம் சார்பில் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கைகள் குறித்து ரயில்வே மற்றும் போக்குவரத்துத் துறை அதிகாரிகளிடம் பேசி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு நாசர் கூறினார்.

இந்த ஆய்வின்போது, ரயில் பயணிகள் சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# சாதுர்மாஸ்ய விரதத்தை தொடங்கினார் ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

■ காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் சங்கர மடத்தின் மடாதிபதி ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தனது சாதுர்மாஸ்ய விரதத்தை ஓரிக்கையில் உள்ள மகா பெரியவர் மணி மண்டபத்தில் நேற்று தொடங்கினார்.

ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாதத்தில் வரும் பௌர்ணமியன்று வியாச பூர்ணிமா அல்லது குரு பூர்ணிமா அனுசரிக்கப்படும். இந்த நேரத்தில் ஆசிரமத்தில் இருக்கும் துறவிகள் வேத வியாசரை பூஜை செய்து ஆராதிப்பது வழக்கம். இந்த நாளில் ஒரே இடத்தில் தங்கி இருந்து சாதுர்மாஸ்ய விரதத்தையும் துறவிகள் தொடங்குவர்.

காஞ்சிபுரம் சங்கர மடத்தின் மடாதிபதியான ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தனது சாதுர்மாஸ்ய விரதத்தை, காஞ்சிபுரம் அருகே ஓரிக்கை பாலாற்றங்கரையில் உள்ள மகா பெரியவர் மணி மண்டபத்தில் தொடங்கினார்.

அங்கேயே சந்திரமவுலீசுவரர் பூஜை, வியாச பூஜை, குரு பூஜை நடைபெற்றன. சங்கர மடத்தின் ஆஸ்தான வித்வான்களின் இன்னிசை கச்சேரிகளும் நடைபெற்றன. பக்தர்கள் பலர் பங்கேற்றனர்.



▲ காஞ்சிபுரம் ஓரிக்கையில் உள்ள மகா பெரியவர் மணி மண்டபத்தில், சங்கர மடத்தின் மடாதிபதி ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் சாதுர்மாஸ்ய விரதத்தை தொடங்கி பூஜைகளை செய்தார்.

## மாணவர்களின் பங்களிப்பில்
# வாழை மரக்கழிவுகளை மறுசுழற்சி செய்ய நவீன இயந்திரம் வடிவமைப்பு

● விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை தகவல்

■ சென்னை

வாழை மரக்கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கான நவீன இயந்திரம் கல்லூரி மாணவர்கள் பங்களிப்பில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை தெரிவித்தார்.

வாழை மரத்தின் கழிவுகளை மறுசுழற்சி செய்து பயன்படுத்துவதற்கான அதிநவீன தானியங்கி இயந்திரத்தை விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை வழிகாட்டுதலில், காஞ்சிபுரம் ஜஐஜபு ஆசிரியர்கள், மாணவர்கள் குழு வடிவமைத்துள்ளது. இதன்செயல் விளக்கக் கூட்டம் தேசிய வடிவமைப்பு மற்றும் ஆய்வுமன்றம் சார்பில் 'கழிவுகளை வளமாக்குவோம்' என்ற தலைப்பில் இணையவழியில் நேற்று நடைபெற்றது.

இதில், ஜஜஜயின்உதவிப் பேராசிரியர் ரகுராமன் முனுசாமி பேசியதாவது: நம்நாட்டில் வாழை அறுவடை செய்த பின்னர், 80 மில்லியன் டன் அளவுக்கு கழிவுகள் கிடைக்கின்றன. இவற்றிலிருந்து நார், பட்டை, சாறு, தண்டை பிரித்தெடுக்க முடியும்.

வாழைப்பட்டை கழிவுகள் மற்றும் அதன் நீர் விவசாயத்துக்கு சிறந்த உரமாக அமையும். மரக்கழிவுகளைப் பிரித்தெடுப்பதற்கான நவீன இயந்திரங்களும் இல்லாத சூழல் நிலவியது. இதை சரிசெய்யும்பொருட்டு, ஒருங்கிணைந்த நவீனதானியங்கிபிரித்தெடுப்பு இயந்திரம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. வாழை மரத்தை இந்த இயந்திரத்தில் செலுத்தினால், பட்டை, சாறு, தண்டு, நார், கழிவுநீர் என தனித்தனியாக விரைவாகப் பிரித்தெடுக்கும்.

இந்தப் பணிகளை தன்னிச்சையாகவே இயந்திரம் மேற்கொள்ளும். இதன்மூலம் கழிவுகளில் இருந்து தினமும் 3 டன்னுக்கு மேலாக நார் பிரித்தெடுக்க முடியும். இயந்திரத்துக்கான செலவு ரூ.40 முதல் ரூ.45 லட்சம் வரையாகும். உதவிப் பேராசிரியர்கள் சிவ பிரசாத், கல்பனா, 6 மாணவர்களின் பங்களிப்பில் இயந்திர வடிவமைப்பு பணிகள் நடைபெற்றன என்றார்.

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மன்றத் துணைத் தலைவரான விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை பேசியது: மரக்கழிவுகளை முறையாகப் பிரித்தெடுத்து, அவற்றை உப பொருட்களாக தயாரித்து விற்பனை செய்தால் ஆண்டுக்கு ரூ.2,000 கோடிக்கும் மேல் வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும், ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

மும்பை ஜெனிக்ரஸ்ட் தொழிற்சாலை, தேசிய வாழை ஆராய்ச்சி மையம் ஆகியவற்றுடன் இணைந்து, ஒருங்கிணைந்த அதிநவீன இயந்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுதவிர, மரக்கழிவுகளை கொள்முதல் செய்வதில் நிலவும் சிரமங்களைத் தவிர்க்க, செல்போன் செயலியும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த செயலியை விவசாயிகள் பதிவிறக்கம் செய்து, உரிய விவரங்களைப் பதிவு செய்தால் நேரடியாக கொள்முதல் செய்யப்படும்.

இந்த விவரங்களை தமிழக அரசிடம் தெரிவித்தபோது, ஆய்வு மையம் அமைக்க 5 ஏக்கர் வரை நிலம் வழங்க முன்வந்துள்ளது. அதேநேரம், ஆராய்ச்சிப் பணிகளுக்கு 10 ஏக்கர் வரையும், ஆய்வு மையத்துடன் தொழிற்சாலை அமைக்க 50 ஏக்கர் வரையும் இடம் தேவைப்படும் என்று அரசிடம் தெரிவித்துள்ளோம் என்றார்.

இந்நிகழ்வில், டிஆர்டிஓ விஞ்ஞானி வி.டில்லிபாபு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



▲ வாழை மரக்கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்காக விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரையின் வழிகாட்டுதலில் மாணவர்களால் வடிவமைக்கப்பட்டுள்ள நவீன இயந்திரம்.


# 'மீனவர்களுக்கு ரூ.15 கோடியில் 5 ஆயிரம் டிரான்ஸ்பாண்டர்கள்'

■ சென்னை

சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் மீன்வளத் துறை செயலர் ஜவகர் நேற்று கூறியதாவது:

தமிழக மீனவர்கள் இந்திய கடல் எல்லையை தாண்டுவதை தடுப்பதற்காகவும், மீன்பிடி படகுகள் செல்வதைக் கண்காணிக்கவும், இஸ்ரோ நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட டிரான்ஸ்பாண்டர் கருவிகளை தமிழக அரசு மீனவர்களுக்கு இலவசமாக வழங்க உள்ளது.

இதுதவிர, ஆழ்கடல் மீன்பிடிப்புக்குச் செல்லும்மீனவர்கள்கடல்எல்லைதாண்டுவதை தடுக்கவும், புயல், மழையில் சிக்கும் படகுகளைக் கண்டறிய உதவவும் 5,000 நவீன டிரான்ஸ்பாண்டர் கருவிகளை இஸ்ரோவிடம் இருந்து ரூ.15 கோடிக்கு கொள்முதல் செய்யும் பணிகள் நடைபெறுகின்றன. இக்கருவிகளை வரும் அக்டோபர் மாதம் மீனவர்களுக்கு இலவசமாக வழங்க முடிவெடுத்துள்ளோம். இதன் மூலம் மீனவர்கள் ஆபத்தின்றி மீன் பிடிப்பதை உறுதி செய்ய முடியும். இவ்வாறு அவர் கூறினார்.



▶▶ நிப்பான் பெயின்ட் நிறுவனம் வெளிப்புற சுவருக்கான 'வெதர்பாண்ட் ப்ரோ' எக்ஸ்டீரியர் எமல்ஷன் பெயின்டை அறிமுகம் செய்துள்ளது. நீர் உட்புகாத மேல்பூச்சு கொண்ட இந்த பெயின்ட் 15 ஆண்டுகாலம் வரை நீடித்து உழைத்து, அதிக வெப்பம், மழையில் இருந்து சுவர்களுக்கு முழு பாதுகாப்பு அளிக்கும் என்று நிப்பான் நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன் விளம்பர செயல் திட்டம், சந்தையிடுதல் உத்தியை நிப்பான் பெயின்ட் இந்தியா நிறுவனத்தின் தலைவர் மகேஷ் எஸ்.ஆனந்த், இயக்குநர் மார்க் டைட்டஸ், தமிழ்நாடு விற்பனை பிரிவு பொது மேலாளர் எம்.நடராஜ் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.


## வரி விளம்பரங்கள்

### ஆட்கள் தேவை

**வீட்டுவேலை**

MRV HOME Service தங்கி/ தங்காமல் சமையல், வீட்டுவேலை, மேல்வேலை, குழந்தை, Patient Attender தேவை. ஆட்கள் வேண்டுவோரும் அனுகவும்: 7449075679

### பொது

**விற்பனை**


WWW.CITYADSBOOKS.COM புத்தகங்கள் வாங்கிட அழைக்கவும். 9841016016

### தொழில்

**நிதி சேவைகள்**

பூண்டு, புளி, அரிசி கொள்முதல் செய்து மொத்த & சில்லறை விற்பனை செய்ய குறைந்த வட்டியில் நீண்ட கால கடன் தேவை. எண்.21, தேன்மொழி முதல் தெரு, திருவேங்கடபுரம், பழைய பெருங்களத்தூர், சென்னை 63. Ct 9667528164.

இந்து தமிழ் திசை
... அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.




### திருமண சேவை மையம்

1000 DAYS Validity + Free Benefits One Time Regn. Fees Rs.1000. brahminkalyanam.com, bkmatrimony.com. 89397 02500




### மணமகள் தேவை

தமிழ்


L. முரளி Age:42, Monthly Income: 30000/- முதலியார் - பிராமின் முதல்மணம் Cast No bar. Ct: 9003152212

பிள்ளை முதல்மணம் அரசுபணி வரனுக்கு 38 வயது பெண்தேவை டவுரி No மறுமணம் சம்மதம். Ct: 75987 61936

### மணமகன் தேவை

தமிழ்

38YRS, FIRST marriage, Degree holder, well to do family. Bridegroom wanted (FC, BC, MBC) working within India. 9080359664.





## SHRIRAM ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

**பூந்தமல்லி கிளை: எண்.6/54, G.S. காம்ப்ளக்ஸ், ஆவடி ரோடு, செந்நீர்குப்பம், பூந்தமல்லி, சென்னை-600056**

**கோரிக்கை அறிவிப்பு**

2012-ம் ஆண்டு பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) சட்டம் பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு ஒன்று **1.M/s.ஐயங்கரன் ஃபார்ம்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், அதன் சார்பாக இயக்குனர் Mr.வரதராஜன்,** எண்.60, ஆஞ்சநேயம் கோயில் தெரு, பூந்தமல்லி, சென்னை-600056. **2.Mr.வரதராஜன்,** S/o.மூர்த்தி, எண்.2/15, பூணம்மாள் தெரு, வள்ளியம்மாள் நகர், வானகரம், சென்னை-600095. **3.Mr.P.முத்துபாண்டி,** S/o.புஷ்பா, எண்.2-7/NA, முத்தமிழ் தெரு, தண்டலம், திருவேற்காடு, சென்னை-600077. மேலும், எண்.2/4, முத்தமிழ் தெரு, அண்ணா நகர், தண்டலம், சென்னை-600077 ஆகியோருக்கு பதிவு அஞ்சல் மூலமாக **05.07.2021** அன்று அனுப்பப்பட்டது.

**பொருள்: M/s.ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், பூந்தமல்லி கிளையில்** வைக்கப்பட்டுள்ள **கடன் கணக்கு POONMO712190001 & POONMO712200001-தொடர்பாக.**

நீங்கள் மேற்படி கடன் கணக்கு தொடர்பாக **25.06.2021 அன்றுள்ளபடி நிலுவைத் தொகை ரூ.36,43,307/-** (ரூபாய் முப்பத்து ஆறு லட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து முன்னூற்று ஏழு மட்டும்) மற்றும் 26.06.2021 முதல் அத்தொகை செலுத்தப்படும் வரையான ஒப்புக்கொள்ளபட்ட வீதத்தில் மேல் வட்டியையும் சேர்த்து செலுத்த தவறிவிட்டீர்கள். மேற்படி சட்டத்தின் கீழ் கம்பெனியானது 25.06.2021 அன்றுள்ளபடியான நிலுவைத்தொகை **ரூ.36,43,307/-** செலுத்துமாறு கோரி **05.07.2021** அன்று அறிவிப்பு ஒன்றை உங்களுக்கு அனுப்பியது.

உங்கள் நிறுவனத்திற்கு பதிவு அஞ்சலில் ஒப்புகை சீட்டுடன் அனுப்பப்பட்ட அந்த அறிவிப்புகள் "No Such Person" எனவும், அதன் நிர்வாக இயக்குனருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்புகள் "Door Locked" எனவும், ஜாமீன்தாரராக கையொப்பம்மிட்ட நபரின் இரண்டு விலாசத்திற்கும் அனுப்பப்பட்ட அறிவிப்புகள் "Addressee Left" என குறிப்பிட்டு திரும்பி வந்துவிட்டன. எனவே, இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், கடன் நிலுவைத்தொகை ரூ.36,43,307/- (ரூபாய் முப்பத்து ஆறு லட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து முன்னூற்று ஏழு மட்டும்) மற்றும் 26.06.2021 முதல் அத்தொகை செலுத்தப்படும் தேதி வரையான வட்டியையும் சேர்த்துச் செலுத்துமாறு இதன்மூலம் உங்களிடம் கோரப்படுகிறது. தவறினால் கிழ்காணும் அட்டவணையில் உள்ள கடனுக்கு ஈடான அடமான சொத்து மீது கம்பெனி தமக்குள்ள அமலாக்க அதிகாரத்தை, உரிமையைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும். இந்த அறிவிப்பு கம்பெனிக்கு இருக்கும் இதர எந்தவொரு உரிமைக்கும் பாதகமின்றி வெளியிடப்படுகிறது.

அதாவது தற்போது DRT/RO-DRT/DRAT/நீதிமன்றம் முன்னிலையில் நிலுவையில் உள்ள வழக்கு விசாரணைகளுக்கும் பெறப்பட்ட / பெறப்படவுள்ள ஆணைகள் / தீர்ப்பு ஆணைகள் போன்றவற்றை மேற்கொள்வதற்கு கம்பெனிக்கு இதர எந்தவொரு இருக்கும் உரிமைகளுக்கு பாதகமின்றியும் இந்த அறிவிப்பு அறிவிக்கப்படுகிறது.

**அசையா சொத்து விபரம்**

**சொத்தானது Mr.M.வரதராஜன் பெயரில் உள்ளது (செட்டில்மென்ட் பத்திர ஆவண எண்.402/2011)**

தென் சென்னை பதிவு மாவட்டம், சைதாப்பேட்டை சார் பதிவாளர், ஜாயின்ட் 1 சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.112/1 & 112/2B, பட்டா சர்வே எண்.112/1A2 & 112/2B1A2 (பட்டா எண்.10909), வானகரம் கிராமம், அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், கதவு எண்.2/15, பொன்னம்மாள் தெரு, வானகரம், சென்னை-600095 என்னும் முகவரியில் 2302 சதுர அடி நிலம் மற்றும் வீட்டு கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: 20 அடி ரோடு, மேற்கு: தட்சிணாமூர்த்தி மற்றும் ஜெய் சங்கர் சொத்து, வடக்கு: 30 அடி ரோடு, தெற்கு: Mrs.மகாதேவி சொத்து. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 48 அடி 9 அங்குலம், கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 50 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 46 அடி மற்றும் 9 அங்குலம், வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 46 அடி மற்றும் 6 அங்குலம்.

**தேதி : 05.07.2021**
**இடம் : சென்னை**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்**

## पंजाब नैशनल बैंक ...भरोसे का प्रतीक ! பஞ்சாப் நேஷனல் வங்கி ...the name you can BANK upon !

மண்டல சாஸ்த்ரா மையம், சென்னை, எண். 63, R.K.சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004. Mail: zs8341@pnb.co.in

**அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளை சீரமைத்தல், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன்கீழ் வங்கியிடம் அடமானத்திலுள்ள ஈடுபெற்ற அசையா சொத்துக்கள் விற்பனை**

பஞ்சாப் நேஷனல் வங்கில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை பஞ்சாப் நேஷனல் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கபூர்வ/அடையாளபூர்வ/மெய்நிலை **(Symbolic)** சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களிடமிருந்து பெற வேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள கடன் தொகை மற்றும் அதற்கான வட்டி, இதர செலவுகளையும் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் மின் ஏல விற்பனை செய்யப்படும். என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது. சொத்துக்களின் குறைந்தபட்ச கேட்பு விலை மற்றும் டேவணித்தொகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. **வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் இல்லை.**

| | | | |
|---|---|---|---|
| மெகா மின் ஏல தேதி | 12.08.2021 | EMD செலுத்த கடைசி தேதி | 10.08.2021 |
| | | சொத்துக்களை பார்வையிடும் தேதி | 06.08.2021 முதல் 07.08.2021 |

**வ.எண்.1: கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி :**

**1.M/s CHENNAI PAPER KRAFT INDUSTRIES** 26/28 காட்டு சடையப்பன் தெரு, பெரியமேடு, சென்னை-600 003. **பங்குதாரர்கள்: 1.** திரு. சித்திக் அஹமத், எண்.132, அல் ஹுதா வளாகம், பட்டேல் யாக்கூப் தெரு, கோட்டை, வாணியம்பாடி-635751, 2.திருமதி. Pak மலிகை ஆசியா ஜபீன், எண்.132, அல் ஹுதா வளாகம், பட்டேல் யாக்கூப் தெரு, கோட்டை, வாணியம்பாடி-635751, 3.திருமதி. A. ஜோதி, ஃபிளாட் எண்.D2, சாந்தி அப்பார்ட்மென்ஸ், கதவு எண்.4, அவின்யூ சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600 034, 4.திரு. NUM. கோமதிநாயகம், த/பெ NU முருகன், 53/8, சம்பாதெரு, தென்காசி 627811. **ஜாமீன்தாரர்கள்:** 1. திருமதி. A. ஜோதி, ஃபிளாட் எண்.D2, சாந்தி அப்பார்ட்மென்ஸ், கதவு எண்.4, அவின்யூ சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600 034, 2. திரு. NUM. கோமதிநாயகம், த/பெ NU முருகன், 53/8, சம்பாதெரு, தென்காசி 627811. 3. திரு. M. S. A. சங்கர்லிங்கம், ஃபிளாட் எண்.D2, சாந்தி அப்பார்ட்மென்ஸ், கதவு எண்.4, அவின்யூ சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

**நிலுவைத் தொகை : 1) ரூ.34,90,96,191.00 (ரூபாய் முப்பத்து நான்கு கோடியே தொண்ணூறு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து நூற்று தொண்ணூற்று ஒன்று மட்டும்)**
**அடையாள சுவாதீனம்**

**சொத்தின் விவரம்: (1)** M. சித்திக் அஹமத் மற்றும் திருமதி. Pak மலிகை ஆசியா ஜபீன். சர்வே எண்.305/2C1, பட்டா எண்.819, ஆகிவற்றின் கீழ் அடங்கிய எண்.29, தேர்வாய் கண்டிகை கிராமம், கும்மிடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு இல் உள்ள விஸ்தீரணம் 4.99 ஏக்கர்கள் நிலம் மற்றும் (தரை+2 தளங்கள்) கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டுகளும் பகுதிகளும். **(2) (a)** சர்வே எண்.305/2D, இல் அடங்கிய விஸ்தீரணம் 5.00 ஏக்கர் தொழிற்துறை நிலம், ஆலை இடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டுகளும் பகுதிகளும். **(b)** சர்வே எண்.305/2C2, இல் அடங்கிய காலி நிலத்தின் விஸ்தீரணம் 4.98 ஏக்கர். At கதவு எண்.860, பூவாலம்பேடு- தேர்வாய் கண்டிகை கிராமம், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம்-601202, இல் அமைந்துள்ளது அதனுடன் கட்டிடம் தரை+2 தளங்கள் தோராயமாக 26227 ச.அடி. **(3)** M/s Chennai Kraft Paper Industries அவர்களின் தொழிற்சாலை கட்டிடத்தில் உள்ள ஆலை மற்றும் இயந்திரங்கள்.

**குறைந்தபட்ச கேட்பு விலை : ₹.542.20 இலட்சங்கள்; டேவணித் தொகை : ₹.55.00 இலட்சங்கள்; ஏல உயர்வுத் தொகை: ₹.0.50 இலட்சங்கள்; ஏல நேரம் : காலை 11 மணி**

**வ.எண்.2: கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி :**

**M/s GhoAgro Pvt Ltd,** புதிய எண்.10, பழைய எண்.122, 2வது தளம், P.S. சிவசாமி சாலை, (சுலிவன் கார்டன் சாலை), St. Ebbas அவின்யூ, மைலப்பூர், சென்னை -600 004. அலுவலக முகவரி: சர்வே எண்.147/2A & 3A, நகர் கிராமம், உளுந்தூர் பேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம். **தனிநபர் ஜாமீன்தாரர்கள்: 1. திரு. இரஞ்சித்மல் சோர்டியா 2. திரு. விமல்ராஜ் சோர்டியா 3. திரு. ஹேமந்த் சோர்டியா 4. திரு. பங்கஜ் பெத்தலா 5. திருமதி. உகம கவர் 6. திருமதி. ரிட்டா சோர்டியா 7. திருமதி. நிதி ஜெயின்**

**நிலுவைத் தொகை : 1) 01.02.2020 அன்றுள்ளபடி ரூ.48,78,74,701.84 (ரூபாய் நாற்பத்து எட்டு கோடியே எழுபத்து எட்டு இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து எழுநூற்று ஒன்று மற்றும் பைசா எண்பத்து நான்கு மட்டும்) மேலும் 01.01.2020 அன்றுமுதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள்**
**அடையாள சுவாதீனம்**

**சொத்துக்களின் விவரம்: (A)** திருமதி. ரீடா சோர்டியா, க/பெ திரு. விமல் ராஜ் சோர்டியா மற்றும் திருமதி. நிதி ஜெயின் க/பெ திரு. ஹேமந்த் சோர்டியா ஆகியோரின் உரிமைப் பெற்ற ஸ்ரீபெரும்புதூர் சாலை, திருகச்சூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்-603204 இல் அமைந்துள்ள மறு சர்வே எண்.348C/2C1B (பழைய சர்வே எண்.348/2C), (பட்டா எண்.2108, பத்திர எண். 1763/ 2012) இல் அடங்கிய மொத்தம் 67 சென்ட்கள் விஸ்தீரணம் கொண்ட ஈடுபெற்ற காலி நிலம். **(B)** திருமதி. உகமகவர் அவர்களின் உரிமைப் பெற்ற ஸ்ரீபெரும்புதூர் சாலை, திருகச்சூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்-603204 இல் அமைந்துள்ள மறு சர்வே எண்.348C/2 இல் அடங்கிய மொத்தம் 1.50 சென்ட்கள் விஸ்தீரணம் கொண்ட ஈடுபெற்ற காலி நிலம். **(C)** திருமதி. உகமகவர் அவர்களின் உரிமைப் பெற்ற ஸ்ரீபெரும்புதூர் சாலை, திருகச்சூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்-603204 இல் அமைந்துள்ள மறு சர்வே எண்.348C/2B (பழைய சர்வே எண்.348C/2) இல் அடங்கிய மொத்த விஸ்தீரணம் 86 சென்ட்கள் + மொத்த விஸ்தீரணமான 1.50 சென்ட்களில் உள்ள கிணறு, 3 HP பம்பு செட் மற்றும் பிரிக்கப்படாத 1/4 பங்கு. **(D)** திருமதி. உகமகவர் அவர்களின் உரிமைப் பெற்ற ஸ்ரீபெரும்புதூர் சாலை, திருகச்சூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்-603204 இல் அமைந்துள்ள மறு சர்வே எண்.348C/1A1, (பழைய சர்வே எண்.348/C/2,) இல் அடங்கிய 49 சென்ட்கள் (55 சென்ட்களில், நெடுஞ்சாலைத் துறையால் வாங்கப்பட்ட 6 சென்ட்கள்) விஸ்தீரணம் கொண்ட ஈடுபெற்ற காலி நிலம். **(E)** திருமதி. உகமகவர் அவர்களின் உரிமைப் பெற்ற ஸ்ரீபெரும்புதூர் சாலை, திருகச்சூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்-603204 இல் அமைந்துள்ள சர்வே எண்.348C/1A2 இல் அடங்கிய 42.89 சென்ட்கள் (54 சென்ட்களில், நெடுஞ்சாலைத் துறையால் வாங்கப்பட்ட 11.11 சென்ட்கள்) விஸ்தீரணம் கொண்ட ஈடுபெற்ற காலி நிலம். **(F)** திரு. விமல்ராஜ் சோர்டியா அவர்களின் உரிமைப் பெற்ற ஸ்ரீபெரும்புதூர் சாலை, திருகச்சூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்-603204 இல் அமைந்துள்ள மறு சர்வே எண்.348C/2, இல் அடங்கிய 1.50 சென்ட்கள் விஸ்தீரணம் கொண்ட ஈடுபெற்ற காலி நிலம். **(G)** திருமதி. உகமகவர் அவர்களின் உரிமைப் பெற்ற ஸ்ரீபெரும்புதூர் சாலை, திருகச்சூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்-603204 இல் அமைந்துள்ள பழைய சர்வே எண்.348C/1A. மறு சர்வே எண்.348C/1A1 இல் அடங்கிய 54 சென்ட்கள் விஸ்தீரணம் கொண்ட ஈடுபெற்ற காலி நிலம்.

**குறைந்தபட்ச கேட்பு விலை : ₹.1850.00 இலட்சங்கள்; டேவணித் தொகை : ₹.185.00 இலட்சங்கள்; ஏல உயர்வுத் தொகை: ₹. 50.00இலட்சங்கள்; ஏல நேரம் : காலை 11.30 மணி**

திருமதி. ரஞ்சித்மல் சோர்டியா அவர்களின் உரிமைப் பெற்ற சந்தோஷபுரம், வேங்கைவாசல் கிராமம், சோழிங்கநல்லூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தின் பட்டா எண்.4762 படி சர்வே எண்.55/32 , பட்டா எண்.1633 & 1635 படி பழைய சர்வே எண்.53/5A2(பகுதி) இல் அடங்கிய CMDA வின் அங்கீகாரத்தின் படி எண்.55/1997 படி மனைபிரிவில், எண்.II "ஆதிநாத் அவின்யூ" ஃபேஸ்-I, 6480 ச.அடி கொண்ட ஈடுபெற்ற காலி நிலம்.

**குறைந்தபட்ச கேட்பு விலை : ₹.125.00 இலட்சங்கள்; டேவணித் தொகை : ₹.12.50 இலட்சங்கள்; ஏல உயர்வுத் தொகை: ₹.1.00 இலட்சங்கள்; ஏல நேரம் : மதியம் 12.30 மணி**

**வ.எண்.3: கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி :**

**1) வரதா ஸ்டீல்ஸ் பிரைவேட் லிட்,. 2)M/s. வரதா ஸ்டீல்ஸ்** முகவரி: எண்.15, புதிய எண்.11, பெரிய தெரு, கீழ்பாக்கம், சென்னை – 600010. **ஜாமீன்தாரர்கள் : திரு. K. A. பாபு திரு. K. N. பாபு. திருமதி. A. T. ஹீரா பானு**

**நிலுவைத் தொகை : 1) ரூ.46,32,18,722.00 (ரூபாய் நாற்பத்து ஆறு கோடியே முப்பத்து இரண்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து எழுநூற்று இருபத்து இரண்டு மட்டும்) மேலும் 11.11.2016 அன்றுமுதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள். 2) ரூ.15,69,07,596.00 (ரூபாய் பதினைந்து கோடியே அறுபத்து ஒன்பது இலட்சத்து ஏழாயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று ஆறு மட்டும்) மேலும் 02.02.2018 அன்றுமுதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள். அடையாள சுவாதீனம்**

**சொத்துக்களின் விவரம்:**

M/s Roshan Company Pvt. Ltd. அவர்களின் பெயரில் உள்ள சர்வே எண்.61/1 மற்றும் 61/2, பட்டாவின் படி சர்வே எண்.61/1, இல் அடங்கிய சடயன்குப்பம் கிராமத்தில் உள்ள 18837ச.அடி கொண்ட காலி நிலம், அதன் **எல்லைகள்:** வடக்கில்: பெருமாள் கோவில் தெரு, தெற்கில்: சுடுகாடு; கிழக்கில்: காலி நிலம்; மேற்கில்: காலி நிலம்

**குறைந்தபட்ச கேட்பு விலை : ₹.43.00 இலட்சங்கள்; டேவணித் தொகை : ₹.4.30 இலட்சங்கள்; ஏல உயர்வுத் தொகை: ₹.0.50 இலட்சங்கள்; ஏல நேரம் : மதியம் 1.00 மணி**

M/s Varatha Steel & Iron Store. அவர்களின் பெயரில் உள்ள சர்வே எண்.70, பட்டாவின் படி சர்வே எண்.70/1, இல் அடங்கிய சடயன்குப்பம் கிராமத்தில் உள்ள 5382ச.அடி கொண்ட காலி நிலம், அதன் **எல்லைகள்:** வடக்கில்: நீர் நிலை, தெற்கில்: காலி நிலம்; கிழக்கில்: காலி நிலம்; மேற்கில்: காலி நிலம்

**குறைந்தபட்ச கேட்பு விலை : ₹.5.00 இலட்சங்கள்; டேவணித் தொகை : ₹.0.50 இலட்சங்கள்; ஏல உயர்வுத் தொகை: ₹.0.10 இலட்சங்கள்; ஏல நேரம் : மதியம் 1.30 மணி**

**வ.எண்.4 : கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி :**

**1.Aaray Global resources Pvt. Ltd.** எண்.5, Ceebros Centre, 39, மான்டீயத் சாலை, எழும்பூர், சென்னை – 600 008. மேலும் ஒரு முகவரி: P2, TNHB, டர்ன்புல்ஸ் 2வது குறுக்கு தெரு, நந்தனம், சென்னை – 600035, மற்றும் 4/211, MGR சாலை, 4, அமரா சமுத்ரா, பாலவாக்கம், சென்னை – 600041. **ஜாமீன்தாரர்கள்/அடமானதாரரர்கள் 1.A. பாலாஜி 2.A. வரலட்சுமி 3. A. விஸ்வநாதன்**

**நிலுவைத் தொகை : 29.05.2014 அன்றுள்ளபடி ரூ.19,44,67,468/- அடையாள சுவாதீனம்**

**சொத்துக்களின் விவரம்:** O. சர்வே எண்.198, தற்பொழுதைய எண்.12 மற்றும் CC எண்.1091 இல் அடங்கிய கதவு எண்.39, அண்ணாசாலை, சென்னை – 600002 இல் அமைந்துள்ள 7 கிரவுண்டுகள் மற்றும் 600ச.அடி விஸ்தீரணத்தில் 177.62ச.அடி பிரிக்கப்படாத பங்கு மற்றும் கீழ் தளத்தின் பின் பாகத்தில் அமைந்துள்ள கடை எண்கள்.37, 38, 39 & 39A, ஆகியவற்றின் மொத்தக் கட்டிடப் பரப்பு 1415 ச.அடி, அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி மற்றும் அதன் **எல்லைகள்:** வடக்கில்: LIC கட்டிடம், தெற்கில்: அண்ணா திரையரங்கம் மற்றும் Gee Gee காம்ப்ளக்ஸ், கிழக்கில்: எல்லீஸ் சாலை மற்றும் மேற்கில்: அண்ணா சாலை (மவுண்ட் ரோடு)

**குறைந்தபட்ச கேட்பு விலை : ₹.45.50 இலட்சங்கள்; டேவணித் தொகை : ₹.4.60 இலட்சங்கள்; ஏல உயர்வுத் தொகை: ₹.0.50 இலட்சங்கள்; ஏல நேரம் : மதியம் 3.00 மணி**

O. சர்வே எண்.198, தற்பொழுதைய எண்.12 மற்றும் CC எண்.1091 இல் அடங்கிய கதவு எண்.39, புதிய கதவு எண். 17/2, அண்ணாசாலை, சென்னை – 600002 இல் அமைந்துள்ள 7 கிரவுண்டுகள் மற்றும் 600 ச.அடி விஸ்தீரணத்தில் 90.62ச.அடி பிரிக்கப்படாத பங்கு மற்றும் கீழ் தளத்தின் பின் பாகத்தில் அமைந்துள்ள கடை எண்கள். 19 & 20, ஆகியவற்றின் மொத்தக் கட்டிடப் பரப்பு 570 ச.அடி, அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி மற்றும் அதன் **எல்லைகள்:** வடக்கில்: LIC கட்டிடம், தெற்கில்: அண்ணா திரையரங்கம் மற்றும் Gee Gee காம்ப்ளக்ஸ், கிழக்கில்: எல்லீஸ் சாலை மற்றும் மேற்கில்: அண்ணா சாலை (மவுண்ட் ரோடு)

**குறைந்தபட்ச கேட்பு விலை : ₹.18.50 இலட்சங்கள்; டேவணித் தொகை : ₹.1.90 இலட்சங்கள்; ஏல உயர்வுத் தொகை: ₹.0.10 இலட்சங்கள்; ஏல நேரம் : மதியம் 3.30 மணி**

**மின்ஏலத்தின் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள்**

1. இந்த மின்ஏல விற்பனையானது இணைதள முகவரியான http://www.mstcecommerce.com/ "இணையவழி மின் ஏலம் மூலம் " நடைபெறும்
2. இந்த மின்ஏல விற்பனைக்கான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கான விவரங்களுக்கு, https://www.ibapi.in, https://eprocure.gov.in/epublish/app, http://www.mstcecommerce.com/, www.pnbindia.in. ஆகிய இணையதளங்களில் காணலாம்.
3. இந்த மின்ஏலத்தில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் இந்த மின்ஏலத்திற்கான செயல்பாடுகள் பகுதியில் உதவி கையேடு, விற்பனை அறிவிப்பின் பிரதிகள், மின்ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள், ஆகியவற்றை e-Bक्रय–IBAPI என்ற இணையதளத்திலிருந்து கட்டணமில்லாமல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
4. எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்த நேரத்திலும் ஏலத்தின் விதிமுறைகளை ஏலத்தின் விதிமுறைகளை ஒத்திவைக்க / ரத்துசெய்ய / ஒத்திவைக்க / நிறுத்துவதற்கு அல்லது மாறுபடுவதற்கான எந்தவொரு முயற்சியையும் ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்கும் உரிமை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு உரிமமை உண்டு, அவரின் முடிவே இறுதியானது.
5. சொத்துக்கள் "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளபடி" மற்றும் "என்ன உள்ளதோ அப்படியே" என்ற நிலையில் விற்கப்படும்.
6. டெண்டர் சொத்துக்களை ரிசர்வ் விலைக்கு கீழ் விற்பனை செய்யப்படமாட்டாது.
7. ஏலத்தில் வங்கியும் வெளிப்படையாக பங்கேற்க உரிமை உண்டு.

தேதி : 23.07.2021
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பஞ்சாப் நேஷனல் வங்கி, கடன் வழங்கியவர்

எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, திருப்பூர், சேலம் தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

வானவில் அரங்கம்

# கருணைக்கு வழிகாட்டும் ‘1001 அரேபிய இரவுகள்’

ஷங்கர்ராமசுப்ரமணியன்

நேசம், மகிழ்ச்சி, தைரியம், பரிவு ஆகிய பண்புகளை வாசிப்பவர்களிடம் கிளர்த்தும் காப்பியங்களில் ஒன்று ‘ஆயிரத்தோரு அரேபிய இரவுகள்’. வாழ்க்கையைக் கொண்டாடுவதற்கும் அது தரும் ஆசீர்வாதங்களை அனுபவிப்பதற்கும் இஸ்லாமியக் கலாச்சாரம் வழங்கிய ஞானப்பொக்கிஷம் என்று மதிக்கப்படுகிறது. மேற்கு, கிழக்கு என்ற பாகுபாடின்றிப் பல துறை அறிஞர்கள் தொடங்கி, சாதாரண மக்கள் வரை புதுமை மாறாமல் வாசித்தும் புழங்கியும் கொண்டிருக்கிற அந்தக் கதைகளுக்கான நவீன மொழிபெயர்ப்பை சஃபி தமிழில் இரண்டு பாகங்களாக ‘உயிர்மை’ பதிப்பகம் வழியாகக் கொண்டுவந்துள்ளார். மூன்றாவது பாகம் விரைவில் வெளியாகவிருக்கிறது. தேனி மருத்துவக் கல்லூரியில் கிளினிக்கல் சைக்காலஜிஸ்டாகப் பணிபுரிந்துவரும் சஃபியுடன், ‘ஆயிரத்தோரு அரேபிய இரவுக’ளை முன்வைத்து நடத்திய உரையாடலிலிருந்து…

**‘ஆயிரத்தோரு அரேபிய இரவுகள்’ நூல் தொடர்பான உலகம் அறிந்த கதையைச் சொல்லுங்கள்…**

‘1001 அரேபிய இரவுகள்’ நூலாக வந்த வரலாறே சுவாரசியமானதுதான். முதன்முதலாக, பிரெஞ்சுக்காரர் அந்த்வான் கேலோன் (Antoine Galland) வழியாகத்தான் 1704–ல், 12 பாகங்கள் கொண்ட பெருந்தொகுப்பாக பிரெஞ்சு மொழியில் வெளிவந்தது. அரபியிலிருந்து பிரெஞ்சு மொழிக்கு அவர்தான் மொழிபெயர்த்தார். அதைத் தொடர்ந்து வெள்ளம்போல் பல மொழிகளில் அந்தக் கதைகள் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டன. செம்பதிப்பாகவும், பஜாரில் கிடைக்கும் மலிவுப் பதிப்பாகவும் புழக்கத்துக்கு வந்துவிட்டன. ‘ஆயிரத்தோரு இரவுகள்’ பல மொழிகளில் ஆக்கப்பட்டதையும், அதன் மொழிபெயர்ப்பாளர்களையும் பற்றி போர்ஹே ஒரு தனிக் கட்டுரையே எழுதியுள்ளார். போர்ஹே சிபாரிசு செய்யும் ஆக்கம் ரிச்சர்ட் பர்ட்டன் (Richard Burton) மொழிபெயர்த்ததாகும். ரிச்சர்ட் பர்ட்டன் வெளியிட்டது மொத்தம் 16 தொகுதிகள். 1885–1888 ஆண்டுகளில் கல்கத்தாவில் அவை பதிப்பிக்கப்பட்டன. ‘காமசூத்திர’த்தை மொழிபெயர்த்தவரும் ரிச்சர்ட் பர்ட்டன்தான்.

**‘ஆயிரத்தோரு இரவுக’ளில் எத்தனைக் கதைகள் உள்ளன?**

‘ஆயிரத்தோரு இரவுகள்’ என்பதால், ஆயிரம் கதைகள் இருக்கும் என்பதாய் யோசிப்போம். ஆனால், சில நூறு கதைகளே ஆயிரத்தோரு இரவுகளுக்கும் நீள்கின்றன. ரிச்சர்ட் பர்ட்டனின் தொகுப்பில் 468 கதைகள் இருக்கின்றன. மூலத்தொகுப்பில் 200 கதைகளே இருக்கின்றன என்று பதினோராம் நூற்றாண்டைச் சார்ந்த இப்னு அல் நதீம் என்ற பாக்தாதைச் சார்ந்த புத்தக விற்பனையாளர் சொல்லியிருக்கிறார். சுத்தப் பதிப்பாக வெளிவந்துள்ள முஹ்ஸின் மஹதி பிரதியில் 271 இரவுகளோடு கதைகள் முடிகின்றன. இப்படிப் பல வேறுபாடுகள் இருக்கின்றன.

**‘ஆயிரத்தோரு இரவுகள்’ கதை இன்று உலகம் முழுவதும் வாசிக்கப்படுவதற்கு என்ன காரணம்?**

எளிய நாட்டார் கதைகளுக்கு உலகம் முழுக்க ஈர்ப்பு உண்டு. கிரேக்க நாடகாசிரியர் சோபக்ள்ஸின் ‘ஈடிபஸ்’ நாடகத்தின் சாயல் கொண்ட ஒரு கதையை நீங்கள் விக்கிரமாதித்தன் கதைகளில் படித்துவிட முடியும். மதனகாமராஜன் கதைகள் ஒன்றில், ஒரு பாம்பு தனது நேசத்துக்குரிய பெண்ணை அடைய முடியாமல் நெருக்கடிக்கு ஆளாகும்போது, அந்தப் பெண் இரவில் தூங்கும்போது, அவளது தலைக்கேசத்தில் சுருக்கிட்டு மாய்த்துக்கொள்ளும். மொத்தக் கதைச் சூழலோடு அதை வாசித்தால், பெரிய ஆச்சரியத்தைத் தரும் கதை அது. அப்படியான கதைகளை நீங்கள் ‘1001 இரவுக’ளில் நிறைய எதிர்கொள்ளலாம்.




**கதைசொல்லியான ஷஹர்சாத் சகல சாஸ்திரங்களையும் கற்றுத்தேர்ந்த வலுவான ஆளுமையாக வருகிறாள். உரிமைகளையும் மாற்றங்களையும் விரும்புபவர்கள் அனைவருமே ஷஹர்சாதின் மேல் பிரியம் கொள்ளவே செய்வார்கள்!**



1001 அரேபிய இரவுகள்
தமிழில்: சஃபி
உயிர்மை பதிப்பகம்
அடையாறு, சென்னை-20.
தொடர்புக்கு: 044 48586727
விலை: ரூ.930 (2 பாகங்கள்)

**தமிழில் எப்போதிருந்து பதிப்பு காணத் தொடங்கியது?**

பாண்டிச்சேரியைச் சார்ந்த பி.ஞானப்பிரகாச முதலியாரால் 1825–லேயே, ஒரே பக்கத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலும் அரபுக் கதைகள் மொழிபெயர்க்கப்பட்டு, 12 தொகுதிகள் வெளியிடப்பட்டிருப்பதாக ஜே.பி.பி.மோரே கூறுகிறார். அப்படிப் பார்த்தால், அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளுடன் தொடர்புடைய அந்த அரபுக் கதைகளே, தமிழ் முஸ்லிம் அல்லாத தமிழர் ஒருவரால் மொழிபெயர்க்கப்பட்டு, தமிழில் வெளியான முதல் இஸ்லாமியப் படைப்பு எனக் கொள்ளலாம் என்கிறார்.

பெரும் தமிழறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி ஆக்கிய ‘பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்’ நூலில் 1876–ல் ‘அராபிக் கதை’ அமரம்பேடு அண்ணாசாமி முதலியாரால் மொழிபெயர்க்கப்பட்டு, சென்னை சிந்தாதிரிப்பேட்டை உள்ள பிரபாகர அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறார். 1880–லிருந்து அரபுக் கதைகளின் மீதுள்ள ஈர்ப்பால், 1950–களின் இறுதி வரை தமிழில் ஒரே தொகுதியாகவும், பல தொகுதிகளாகவும் பல்வேறு அச்சகங்களில் அச்சிடப்பட்டிருக்கின்றன. அதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், அ.லெ.நடராஜன் மொழிபெயர்ப்பில், சக்தி கோவிந்தனின் ‘சக்தி காரியாலயம்’ வழியாக, 1957–58–க்குள் ஆறு தொகுதிகள் வெளியாகியிருக்கின்றன.

அடுத்து, இஸ்லாமிய இதழியல் முன்னோடியும் உ.வே.சா.வின் கலாசாலைத் தோழருமான ப.தாவூத்ஷா, ‘ஷாஜஹான் புக் டெப்போ’ வழியாக 9 தொகுதிகள் (1,156 பக்கங்கள்) வெளியிட்டதாகத் தெரிகிறது. அந்தத் தொகுப்புகளெல்லாம் இப்போது கிடைப்பதில்லை. ‘அலிபாபா நாற்பது திருடர்கள்’, ‘அலாவுதீனும் அற்புத விளக்கும்’, ‘சிந்துபாத்’ போன்ற தனிக் கதைகள் மக்களிடையே வரவேற்பு பெற்றுத் தனியாக நிறைய அச்சிடப்பட்டுள்ளன. அப்படி வரவேற்பு இருந்ததால்தான், 1941–ல் என்.எஸ்.கிருஷ்ணன் நடித்த ‘அலிபாபா’, 1956–ல் மாடர்ன் தியேட்டர்ஸ் வெளியீடாக எம்ஜிஆர் நடித்த ‘அலிபாபாவும் நாற்பது திருடர்களும்’ என இரண்டு திரைப்படங்கள் வெளிவந்திருக்கின்றன. ஹாலிவுட்டில் டிஸ்னி வெளியீடாக ‘அலாவுதீன்’ கதை சமீபத்தில் அனிமேஷனில் வெளிவந்திருக்கிறது. இத்தாலிய இயக்குநரான பஸோலினியும் அரபுக் கதைகளின் மீதுள்ள ஈர்ப்பால், அதைத் தழுவி ஓர் அழகான படம் எடுத்துள்ளார்.

**நீங்கள் மொழிபெயர்த்துப் புதிதாகக் கொண்டுவருவதற்கான முக்கியத்துவம் என்னவென்று கருதுகிறீர்கள்?**

துண்டுத் துண்டு கதைகளாகப் படித்திருந்த நிலையில், எழும்பூர் கன்னிமாரா நூலகத்தில் நான் பார்த்த ‘1001 அரேபிய இரவு’ கதைகளைப் பற்றிய என்சைக்ளோபீடியாதான் எனக்கு உந்துதல் தந்தது. உல்ரிச் மர்ஜோல்ப், ரிச்சர்ட் வான் லீவன் தலைமையில் உருவாக்கப்பட்ட கலைக்களஞ்சியம் அது. அரேபிய இரவுக் கதைகளில் வரும் ஒவ்வொரு கதாபாத்திரம் குறித்தும் விரிவான தகவல்கள், கதை நிகழும் காலத்து வரலாற்றுப் பின்னணி, கதைகளுக்குள் செயல்படும் நாட்டார் கூறுகள், அது போக ஒவ்வொரு கதையையும் சர்வதேச நாட்டுப்புறக் கதைகளுடன் ஒப்பிடுவது என்று இதுவரை பரிச்சயமில்லாத பகுதிகளை அறிமுகப்படுத்துவதாய் அந்தக் கலைக்களஞ்சியம் இருந்தது. அதைத் தொடர்ந்து தேடத்தேட ‘அரேபிய இரவுக’ளைப் பற்றிய நிறைய ஆய்வுகள் அகப்பட்டன. அத்தோடு யுனெஸ்கோ அமைப்பும் 2004–ல் ‘அரேபிய இரவுகள்’ வெளியான 300–வது நூற்றாண்டைக் கருத்தரங்குகள் நிகழ்த்தி சிறப்பாகக் கொண்டாடிய செய்தியைப் படித்தபோது, ஆச்சரியமாக இருந்தது. இப்படியான தரவுகளோடு தமிழ்ச் சூழலில் கதைகள் அறிமுகமாகவில்லை. கடந்த ஐம்பது, அறுபது வருடங்களாகப் புதிதாக மொழிபெயர்ப்புகள் ஆய்வுக் குறிப்புகளோடு வராததால் இந்தக் கதைகளை நான் மொழிபெயர்த்துள்ளேன்.

**ஒரு உளவியல் நிபுணராக, ‘ஆயிரத்தோரு இரவுகள்’ கதைகளை மனசிகிச்சையின் ஒரு வடிவமாகப் பார்ப்பதன் பின்னணியைப் பகிர்ந்துகொள்ளுங்கள்…**

மனநலத்தின் உச்சம் அன்பும் கருணையும் என்பார்கள். ஆனால், அடையச் சிரமான காரியமும் அவைதான். நம்மை நாமே அளவுக்கு அதிகமாய் நேசிப்பதைப் போலவே பிறரையும் சுலபத்தில் நம்மால் நேசிக்க முடிவதில்லை. எல்லாக் கலைப் படைப்புகளும் ‘பிறரின்’ பார்வையில் உலகைப் பார்ப்பதற்கு அனுசரணையாகச் செயல்படுவதுபோல, ‘ஆயிரத்தோரு இரவுகள்’ கதைகளிலும், பெண் வெறுப்பு கொண்ட சுல்தான் ஒருவருக்கு உலகின் மாற்றுச் சாத்தியங்கள் கதைகளின் வழியாக வைக்கப்படுகின்றன. அவரும் படிப்படியாக மனத்தில் ‘மறுபிறவி’ கொள்கிறார்.

பாலுறவு சார்ந்து பெண்ணின் தன்னிச்சையான விருப்பு இன்றும் சமயங்களையும் கலாச்சாரங்களையும் சமூகங்களையும் அச்சுறுத்துவதாக உள்ளது. ‘ஆயிரத்தோரு இரவுகள்’ கதைகளில் பெண்ணின் இயல்பும் ஆண் அவள் மேல் கொள்ளும் அச்சமும் பரிசீலிக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட பின்னணியில் ஆணிடம் பெண் உரையாட முயலும் கதைகள் எனலாமா?

அப்படி உறுதியாகச் சொல்லலாம். கதைசொல்லியான ஷஹர்சாத் அறிமுகமாகும்போதே, சகல சாஸ்திரங்களையும் கற்றுத்தேர்ந்த வலுவான ஆளுமையாகத்தான் வருகிறாள். பல பெண்ணியவாதிகள், அரேபிய இரவுக் கதைகளின் மேல் ஆர்வம் கொண்டிருப்பதை நிறைய ஆய்வுகள் வழியாக சமீபத்தில் அறிய முடிகிறது. உரிமைகளையும் மாற்றங்களையும் விரும்புபவர்கள் அனைவருமே ஷஹர்சாதின் மேல் பிரியம் கொள்ளவே செய்வார்கள்.

**‘1001 அரேபிய இரவுகள்’ புத்தகம் சார்ந்து இன்னும் செய்ய வேண்டியது என்ன இருக்கிறது?**

அரேபிய இரவுக் கதைகளுக்காக வரையப்பட்ட ஓவியங்கள் தனி கவனத்துக்குரியவை. ஆங்கிலத்தில் கிடைக்கும் புத்தகங்களில் வரையப்பட்டிருக்கும் வர்ண ஓவியங்கள் நம்மை அந்த மாய உலகத்துக்குள் உடனடியாகப் பிடித்துத் தள்ளிவிட்டுவிடும். தமிழில் அப்படியான ஓவியங்களோடு கதைகளைக் கொண்டுவர ஆசை. இப்போது வெளியான தொகுதிகளில் அது கால்வாசிதான் நிறைவேறியிருக்கிறது. இனிவரும் காலங்களில் கைதேர்ந்த ஓவியர் சேரும்போது அதுவும் சாத்தியமாகும் என்று நம்புகிறேன்.

- ஷங்கர்ராமசுப்ரமணியன், தொடர்புக்கு:
sankararamasubramanian.p@hindutamil.co.in

# நீங்களும் வானொலி தொடங்கலாம்!



**இணைய வசதி கொண்ட, ஸ்மார்ட்போன் வைத்துள்ள யார் வேண்டுமானாலும் ‘பாட்காஸ்டிங்’ வானொலியைத் தொடங்க முடியும்!**

தங்க.ஜெய்சக்திவேல்

கரோனா காலகட்டம் எவ்வளவோ நெருக்கடிகளைக் கொண்டுவந்திருந்தாலும், இந்தக் காலகட்டத்தைப் பயன்படுத்தி இன்று பலரும் பல்வேறு முன்முயற்சிகளை எடுத்துவருகின்றனர். அதுவும் வீட்டில் இருக்கும் குழந்தைகள் புதிது புதிதாகப் பலவற்றையும் கற்றுவருகின்றனர். இந்த வரிசையில் சேர்ந்திருப்பதுதான் ‘பாட்காஸ்டிங்’ (Podcasting). இதன் மூலம், பல நாடுகளிலும் இன்று குழந்தைகளும் வானொலி அலைவரிசைகள் தொடங்கி நடத்திவருகிறார்கள். இளைஞர்கள் மத்தியிலும் இது நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையதளம் என்ற வரிசையில் புதிதாக இணைந்திருக்கும் ‘பாட்காஸ்டிங்’, உண்மையில் ஒரு நல்வாய்ப்பு. காரணம், யார் வேண்டுமானாலும் எளிதாகத் தொடங்கக்கூடிய ஊடகம் இது. ‘யூடியூப்’க்குத் தேவைப்படும் அளவுக்கு இன்டெர்நெட் டேட்டாவும் இங்கே விரயமாகாது.

**‘பாட்காஸ்டிங்’ என்றால் என்ன?**

ஆப்பிள் நிறுவனம் ‘ஐபாட்’ அறிமுகப்படுத்தியபோது அதில் ‘பாட்காஸ்டிங்’கையும் இணைத்து அறிமுகப்படுத்தியது. அதன் பிறகுதான் இந்த வார்த்தை பரவலாகத் தெரியவந்தது. டிரிஸ்டன் லூயிஸ் 2000–ல் இந்தத் தொழில்நுட்பத்தை எழுத்து வடிவத்தில் அறிமுகப்படுத்தினார். அதற்குச் செயல் வடிவம் கொடுத்தவர் டேவ் வின்னர். ‘பிபிசி’யின் செய்தியாளரும், ‘தி கார்டியன்’ இதழின் பத்தி எழுத்தாளருமான பென் ஹாமெர்சுலி இதைப் பற்றி 2004–ல் ஒரு கட்டுரை எழுதினார். அதில் ‘பாட்காஸ்டிங்’ எனும் வார்த்தையை முதன்முறையாகப் பயன்படுத்தினார். ‘ப்ராட்காஸ்டிங்’ என்பது அனைத்து வகை ஒலி/ஒளிபரப்புகளையும் குறிக்கும். ‘ஐபாட்’ இதை அறிமுகப்படுத்திய பின் இதற்கு ‘பாட்காஸ்டிங்’ என்ற பெயர் வந்தது.

**வழக்கமான வானொலியிலிருந்து இது எப்படி வேறுபடுகிறது?**

‘பாட்காஸ்டிங்’ ஒலிபரப்புக்கும் வானொலி ஒலிபரப்புக்கும் மிக முக்கிய வேறுபாடே, நமக்குத் தேவையான நேரத்தில் தேவையான நிகழ்ச்சிகளைக் கேட்க முடியும் என்பதுதான். வானொலி நிகழ்ச்சிகளை, ஒலிபரப்பும்போது மட்டுமே கேட்க முடியும். தவறும் பட்சத்தில் அந்த நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கு வாய்ப்பே இல்லை. ‘பாட்காஸ்டிங்’ அப்படியல்ல; தேவையான வானொலியைப் பின்தொடரும் பட்சத்தில், உங்கள் செல்பேசிக்கே அந்த ஒலிபரப்பின் தகவல்கள் வந்துவிடும். தேவையான நேரத்தில் அந்த ஒலிபரப்பைக் கேட்டுக்கொள்ளலாம்.

**யாரெல்லாம் ‘பாட்காஸ்டிங்’ தொடங்கலாம்?**

தொழில்நுட்பம் தெரிந்தவர்கள் மட்டுமே ‘பாட்காஸ்டிங்’கைத் தொடங்க முடியும் என்றில்லை. யாரெல்லாம் ஃபேஸ்புக், வலைப்பூ, வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம் போன்றவற்றைப் பயன்படுத்துகிறார்களோ அவர்களெல்லாம் மிக எளிதாக ‘பாட்காஸ்டிங்’ வானொலியைத் தொடங்க முடியும். வலைப்பூவை எப்படி இலவசமாகத் தொடங்க முடிகிறதோ, அதே போன்று ‘பாட்காஸ்டிங்’கையும் இலவசமாகவே தொடங்க முடியும். தனியாக நாமே ஒரு பக்கத்தை அமைப்பதற்குப் பெரிய சர்வர்கள் தேவைப்படும்; அதனால், முதலில் ஏதேனும் ஒரு ‘பாட்காஸ்டிங்’ வழங்குநர் பக்கத்தை நாடலாம். இதற்குப் பல்வேறு இணையதளங்கள் உதவுகின்றன. மேலும், செயலியை செல்பேசியிலும் பதிவிறக்கிக்கொள்ள முடியும். நம் செல்பேசியிலேயே நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்து, அதிலேயே எடிட்செய்யும் வசதியும் உள்ளதால், குழந்தைகள் உட்பட அனைத்துத் தரப்பினரும் இன்று ‘பாட்காஸ்டிங்’ தொடங்குவது மிகவும் எளிதாகியுள்ளது.

**எதுவும் கட்டுப்பாடுகள் இருக்கின்றனவா?**

இணைய வசதி கொண்ட, ஸ்மார்ட்போன் வைத்துள்ள யார் வேண்டுமானாலும் ‘பாட்காஸ்டிங்’ வானொலியைத் தொடங்க முடியும். இதற்கு யாரிடமும் அனுமதி வாங்கத் தேவையில்லை. இதற்காக ‘ஆங்கர்’ (anchor.fm), ‘ஸ்பாட்டிஃபை’ (open.spotify.com), ‘கூகுள் பாட்காஸ்ட்’ (google.com/podcasts), ‘ஆப்பிள் பாட்காஸ்ட்’ (podcast.apple.com), ‘பிரேக்கர்’ (breaker.audio), ‘காஸ்ட் பாக்ஸ்’ (castbox.fm), ‘ஓவர் காஸ்ட்’ (overcast.fm), ‘பாக்கெட் காஸ்ட்’ (pca.st), ‘ரேடியோ பப்ளிக்’ (radiopublic.com) போன்ற இணையதளங்கள் இலவசமாகவே இடம் தருகின்றன. ஆனால், திரைப்படப் பாடல்களை ஒலிபரப்ப வேண்டுமாயின் முறையான அனுமதி பெற வேண்டும். மேலும், ஒலிபரப்புக் கொள்கைகளுக்கு உட்பட்டே ‘பாட்காஸ்டிங்’ ஒலிபரப்பும் இருக்க வேண்டும். ஒலிபரப்புக் கொள்கைகளை ஒன்றிய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் இணையதளத்துக்குச் (mib.gov.in/broadcasting/air-broadcast-code) சென்று பார்த்துக்கொள்ளலாம்.

**பணம் சம்பாதிக்க முடியுமா?**

முடியும். உதாரணமாக, ஆங்கர் (Anchor) செயலியை எடுத்துக்கொள்வோம். இதன் உதவியுடன் உங்களின் ‘பாட்காஸ்டை’ இலவசமாக உருவாக்குவதோடு மட்டுமல்லாது, அதைப் பல்வேறு செயலிகளின் ஊடாக விநியோகிக்கவும் முடியும். இதன் மூலம், ‘யூடியூப்’பைப் போல ‘பாட்காஸ்டிங்’ வழியாகவும் பணம் சம்பாதிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

**சில உதாரண வானொலிகள்**

இந்த கரோனா காலத்தில் நான் தொடங்கிய வானொலி ‘தமிழ் சிறுகதைகள்’ (https://anchor.fm/tamilsirukathaikal). இந்த வானொலியில் இதுவரை தமிழின் மிக முக்கியமான 100–க்கும் மேற்பட்ட எழுத்தாளர்களின் கதைகள் பதிவேற்றப்பட்டுள்ளன. இந்த கரோனா காலத்தில் தொடங்கப்பட்டு வெற்றிகரமாக ஒலிபரப்பாகிவரும் மற்றுமிரு ‘பாட்காஸ்டிங்’ வானொலிகள் ‘பொன்னியின் செல்வன்’ (http://anchor.fm/uma-chari), ‘மழலையர் உலகம்’ (http://anchor.fm/aysha-thameem5). இந்த இரண்டு வானொலிகளும் தொழில்நுட்பம் தெரிந்த புலிகளால் தொடங்கப்பட்டதல்ல; ஆர்வம் கொண்டவர்களால் தொடங்கப்பட்டதாகும். ‘பொன்னியின் செல்வன்’ உமா சாரியால் திருச்சியிலிருந்தும், ‘மழலையர் உலகம்’ கோவையிலிருந்து தஸ்லீமா பர்வீனாலும் ஒலிபரப்பப்பட்டுவருகிறது. கல்கியின் ‘பொன்னியின் செல்வன்’ என்றாலே பலர் அது பெரிய புத்தகம் என்று பயப்படுவார்கள். ஆனால், அதை மிக அழகாகவும் எளிமையான தொனியிலும் வாசித்துள்ளார் உமா சாரி. ‘மழலையர் உலகம்’ வானொலியை, கொஞ்சும் தமிழில் ஒலிபரப்பிவருகிறார் தஸ்லீமா. இவர்களைப் போல உங்கள் பகுதியில், உங்கள் மக்களுக்காக நீங்களும் ஒரு ‘பாட்காஸ்டிங்’ வானொலியைத் தொடங்கலாம்!

- தங்க.ஜெய்சக்திவேல், உதவிப் பேராசிரியர், இதழியல் மற்றும் தொடர்பியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.
தொடர்புக்கு: bbcsakthi@gmail.com

# தமிழுக்கு வளம்சேர்க்கும் ஓர் இணையவாசி



நீச்சல்காரன்

பொழுதைப் போக்கவும், அரட்டை அடிக்கவும் இணையத்துக்கு வரும் பெரும்பாலானோர் மத்தியில் ஆக்கபூர்வமாக இணையத்தைப் பயன்படுத்துவோர் ஆங்காங்கே உள்ளனர். அவர்களுக்கெல்லாம் இணையத்தில் அறிவுபூர்வமான தகவல்களைக் கொடுப்பதில் முக்கியப் பங்கு வகிப்பது விக்கிப்பீடியா எனும் களஞ்சியமாகும். அத்தகைய இணையக் கலைக் களஞ்சியத்தில் தமிழில் ஐம்பதாயிரத்துக்கும் மேல் தொகுப்புகள் செய்து, உலகின் ஐந்தாவது நபராக இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார் கிருஷ்ணகிரியைச் சேர்ந்த அருளரசன். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கனகரத்தினம், கனடாவைச் சேர்ந்த நக்கீரன், இலங்கையைச் சேர்ந்த அன்ரன், மதுரையைச் சேர்ந்த எஸ்.பி.கிருஷ்ணமூர்த்தி ஆகியோரையடுத்து இந்த இமாலயப் பங்களிப்பைச் செய்துவரும் இணையவாசி இவர்.

அருளரசன் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரைச் சொந்த ஊராகக் கொண்டவர். ஓசூரிலேயே படித்து வளர்ந்து, தற்போது சுயதொழில் செய்துவருகிறார். இவரது தந்தை கி.குருசாமி, ஓசூரின் முதல் நகராட்சித் தலைவராக இருந்தவர். முதன்முதலில் தமிழ் விக்கிப்பீடியா குறித்து சுஜாதா எழுதிய ஒரு கட்டுரை வழியாகத் தெரிந்துகொண்டவர். சிறு வயதிலிருந்தே மொழிப் பற்று கொண்டவராக வளர்ந்ததாலும் நூல்களை வாசிக்கும் பழக்கம் கொண்டதாலும் விக்கிப்பீடியாவில் எழுதும் ஆர்வத்தைப் பெற்றுள்ளதாகக் கூறுகிறார். விக்கிப்பீடியா என்பது யாரும் தொகுக்கக்கூடிய கூட்டு உழைப்பு என்பதால், மேலும் ஆர்வம் வந்ததாகச் சொல்கிறார். இணையத்தைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் விக்கிப்பீடியாவைப் பயன்படுத்தியிருப்போம். அவ்வாறு தேடிப் படித்த தகவல்கள் அனைத்தும் இவரைப் போன்ற பல தன்னார்வப் பங்களிப்பாளர்களால் உருவானதாகும். தமிழ் விக்கிப்பீடியாவில் சுமார் 1.39 லட்சம் கட்டுரைகள் இருந்தாலும், அதில் ஏழில் ஒரு பங்குக் கட்டுரைகளில் இவரின் பங்கு இருக்கிறது.

2014 முதல் விக்கிப்பீடியாவில் அருளரசன் எழுதிவருகிறார். இதுவரை 4,000 புதுக் கட்டுரைகளைத் தொடங்கியும், சுமார் இருபதாயிரம் பக்கங்களில் ஐம்பதாயிரம் தொகுப்புத் திருத்தங்களைச் செய்தும் உள்ளார். தமிழ் விக்கிப்பீடியாவின் நிர்வாகிகளுள் ஒருவரான இவர் இலங்கை, பஞ்சாப் போன்ற இடங்களில் நடந்த விக்கிப்பீடியா சார்ந்த மாநாடுகளுக்குச் சென்றுவந்துள்ளார். வரலாறு, அரசியல் தொடர்பான மிக முக்கியக் கட்டுரைகளைத் தொடங்கியவர். இவர் எழுதிய ‘கீத கோவிந்தம்’ (திரைப்படம்), ‘சாவித்திரிபாய் புலே’, ‘ஆற்காடு பஞ்சாங்கம்’ போன்ற கட்டுரைகள் அதிகம் படிக்கப்பட்டன. விக்கித்தரவு, விக்கிமூலம், விக்கிமேற்கோள், பொதுவகம் போன்ற துணைத் திட்டங்களிலும் கணிசமாகப் பங்களித்துவருகிறார். வேங்கைத் திட்டம் உட்பட பல்வேறு இந்திய அளவிலான போட்டிகளில் முக்கியப் பங்களிப்புகளைச் செய்து, தமிழ் விக்கிப்பீடியாவின் வெற்றிக்குத் துணைநின்றவர். இவருடன் இவர் மனைவி தீபாவும் பல்வேறு தலைப்புகளில் எழுதிவரும் விக்கிப்பீடியர் என்பது குறிப்பிடத்தக்கது.

விக்கிப்பீடியா ஒரு கட்டற்ற முயற்சி. யாரும் எழுதலாம், யாரும் திருத்தலாம் என்பதுடன் ஆதாரபூர்வமாக ஒவ்வொரு செய்தியையும் குறிப்பிட வழிகாட்டுகிறது. முழுக்க முழுக்க வணிக நோக்கில்லாமல் தன்னார்வமாக ஒருங்கிணைப்பும் மேற்பார்வையும் செய்து, இணையத்தில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவர்கள் என்றால் இவரைப் போன்ற விக்கிப்பீடியர்களைச் சொல்லலாம். வெள்ளித்திரைக்கு முன்னால் கொண்டாடப்படுபவர்களைவிட இந்தக் கணினித் திரைக்குப் பின்னால் கட்டுரையாக எழுதிய இவர்களும் கொண்டாடப்பட வேண்டியவர்களே!

- நீச்சல்காரன், தொழில்நுட்ப எழுத்தாளர்.
தொடர்புக்கு: neechalkaran@gmail.com

### காரில் தப்பியபோது மதுரையில் கைதான

# பாதிரியார் ஜார்ஜ் பொன்னையா சிறையில் அடைப்பு

## ● கிறிஸ்தவ இயக்கச் செயலாளர் தலைமறைவு

**நாகர்கோவில்/மதுரை**

பிரதமர், உள்துறை அமைச்சர் மற்றும் இந்துக்கள் குறித்து அவதூறாகப் பேசிய பாதிரியார் ஜார்ஜ் பொன்னையா, காரில் தப்பிச் சென்றபோது மதுரையில் நேற்று கைது செய்யப்பட்டார். குழித்துறை நீதிமன்றம் உத்தரவின்படி, அவர் பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டார்.



▲ குழித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக நேற்று அழைத்து வரப்பட்ட பாதிரியார் ஜார்ஜ் பொன்னையா.

கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையைச் சேர்ந்தவர் ஜார்ஜ் பொன்னையா. பாதிரியாரான இவர் கடந்த 18-ம் தேதி அருமனையில் கிறிஸ்தவ இயக்கம் சார்பில் நடந்த கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில் பேசினார்.

அப்போது, பாரத மாதா, பிரதமர் மோடி, மத்திய அமைச்சர் அமித்ஷா, தமிழக அமைச்சர்கள் சேகர்பாபு, மனோதங்கராஜ், நாகர்கோவில் தொகுதி எம்எல்ஏ எம்.ஆர்.காந்தி, முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன் ஆகியோர் குறித்து அவதூறாகவும், கடும் விமர்சனம் செய்தும் பேசினார். மேலும், திமுக பெற்ற வெற்றி குறித்தும் சர்ச்சையான கருத்தை கூறினார். இந்த பேச்சு சமூக வலைத்தளங்களில் வைரலாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்து அமைப்பினர் கடும் கண்டனத்தை தெரிவித்து போராட்டங்களில் ஈடுபட்டனர். ஜார்ஜ் பொன்னையாவை கண்டித்துவரும் 28-ம் தேதி அருமனையில் பாஜகவினர் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளனர். இதனால், தனது சர்ச்சை பேச்சுக்கு வருத்தம் தெரிவித்து ஜார்ஜ் பொன்னையா வீடியோ ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில், பாஜக மற்றும் இந்து அமைப்பினர் அளித்த புகாரின் பேரில், கடந்த 20-ம் தேதி அவர் மீது 143, 153ஏ, 295ஏ, 505(2), 506(1), 269, 3 ஆகிய 7 பிரிவுகளில் அருமனை காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அருமனை கிறிஸ்தவ இயக்கச் செயலாளர் ஸ்டீபன் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

ஜார்ஜ் பொன்னையா உட்பட 2 பேரையும் கைது செய்ய, நெல்லை சரக டிஐஜி பிரவின்குமார் அபிநவ் உத்தரவின்பேரில் 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டன. குமரி மாவட்ட எஸ்பி பத்ரிநாராயணன் தலைமையில் போலீஸார் கைது நடவடிக்கையை தீவிரப்படுத்தினர். பாதிரியார் தலைமறைவான நிலையில் நேற்று மதுரை வழியாக சென்னைக்கு காரில் தப்பிச் சென்று கொண்டிருப்பதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது.

மதுரை எஸ்பி பாஸ்கரன் உத்தரவின்பேரில் போலீஸார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். மதுரை அருகே கருப்பாயூரணி பகுதியில் போலீஸார் நேற்று காலை வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, அவ்வழியாக வந்த காரில் ஜார்ஜ் பொன்னையா இருப்பதை போலீஸார் அடையாளம் கண்டனர். காரை தடுத்து நிறுத்தியபோது நிற்காமல் வேகமாக சென்றது.

போலீஸார் கருப்பாயூரணி நான்கு வழிசாலையில் அதிவேகமாக சென்ற காரை விரட்டிச் சென்று பிடித்தனர். அப்போது, காரில் இருந்த ஜார்ஜ் பொன்னையாவை போலீஸார் கைது செய்தனர்.

பின்னர், அங்கிருந்து பலத்த போலீஸ் பாதுகாப்புடன் கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக அவர் அழைத்து வரப்பட்டார். ஆரல்வாய்மொழி காவல் நிலையத்தில் வைத்து அவரிடம் போலீஸார் விசாரணை நடத்தினர். பின்னர், குழித்துறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு மருத்துவ பரிசோதனை நடைபெற்றது. ஜார்ஜ் பொன்னையா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை முன்னிட்டு குழித்துறை நீதிமன்றம், குழித்துறை அரசு மருத்துவமனை ஆகியவற்றில் குமரி எஸ்பி பத்ரிநாராயணன் தலைமையில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

மருத்துவ பரிசோதனைக்கு பின்னர் நேற்று மாலை குழித்துறை குற்றவியல் நீதிமன்றத்தில் பாதிரியார் ஜார்ஜ் பொன்னையா ஆஜர்படுத்தப்பட்டார். அவரை 15 நாள் காவலில் வைக்க நீதிபதி செல்வம் உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து பலத்த போலீஸ் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்ட பாதிரியார் ஜார்ஜ் பொன்னையா, பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். அருமனை கிறிஸ்தவ இயக்க செயலாளர் ஸ்டீபனை போலீஸார் தேடி வருகின்றனர்.

# டிசம்பர் மாதத்துக்குள் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்

## ● அமைச்சர் கே.என்.நேரு தகவல்

**தூத்துக்குடி**

தமிழகத்தில் வரும் டிசம்பர் மாதத்துக்குள் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும் என ஊரக மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

தூத்துக்குடி மீளவிட்டான் பகுதியில் 132 ஏக்கர் பரப்பளவில் உள்ள சி.வ.குளத்தை ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி ஆழப்படுத்தி, கரைகளை பலப்படுத்தும் பணி, ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் ரூ.53.40 கோடியில் தூத்துக்குடி பழைய பேருந்து நிலைய மேம்பாட்டு பணி ஆகியவற்றை அமைச்சர் ஆய்வு செய்தார். பின்னர், அவர் கூறியதாவது:

தூத்துக்குடி மாநகரில் நடந்து வரும் ஸ்மார்ட் சிட்டி பணிகளை ஆய்வு செய்தோம். முந்தைய ஆட்சியில் தொடங்கப்பட்ட பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முடிக்கப்படாமல் உள்ளது. அதை விரைவாக முடிக்கும் பொருட்டு பல்வேறு இடங்களிலும் ஆய்வு நடத்தப்பட்டது. போக்குவரத்து துறையில் இருந்து இடம் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக பேருந்து நிலைய மேம்பாட்டு பணிகள் தாமதமாகிவிட்டன. தற்போது இடம் கிடைத்து பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. வரும் ஏப்ரல் மாதத்துக்குள் பேருந்து நிலையம் செயல்பாட்டுக்கு வரும்.

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை விரைவில் நடத்த தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். சட்டப்பேரவை தேர்தலில் திமுக அறிக்கையில், சில நகரங்கள் மாநகராட்சியாகவும், சில இடங்கள் நகராட்சியாகவும் தரம் உயர்த்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை முதல்வர் அறிவித்த பின்னர், சுழற்சி முறை இட ஒதுக்கீடு முறைப்படுத்தி, பருவ மழைக்காலம் முடிந்தவுடன் தேர்தல் அறிவிக்கப்பட்டு டிசம்பர் மாதத்துக்குள் முடிக்கப்படும். திருச்செந்தூர் பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்துவது குறித்து முதல்வர் அறிவிப்பார் என்றார் அவர்.

அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பெ.கீதாஜீவன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா, நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் பா.பொன்னையா, மாவட்ட ஆட்சியர் கி.செந்தில்ராஜ், எம்எல்ஏ ஜீ.வி.மார்க்கண்டேயன், மாநகராட்சி ஆணையர் சாருஸ்ரீ மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.



▲ ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் ரூ.53.40 கோடியில் நடைபெறும் தூத்துக்குடி பழைய பேருந்து நிலைய மேம்பாட்டு பணியை, ஊரக மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு செய்தார். உடன் அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பெ.கீதாஜீவன் மற்றும் அதிகாரிகள். படம்: என்.ராஜேஷ்

### நெல்லை, தேனி, மதுரை மாவட்டங்களில்

# என்ஐஏ அதிகாரிகள் விசாரணை

**திருநெல்வேலி/தேனி/மதுரை**

திருநெல்வேலி, தேனி, மதுரை மாவட்டங்களில் என்ஐஏ (தேசிய புலனாய்வு முகமை) அதிகாரிகள் நேற்று விசாரணை நடத்தினர்.

திருநெல்வேலி மாவட்டம் களக்காட்டை சேர்ந்த சரவணக்குமார் என்ற அப்துல்லா(32), மதுரை பழைய ராமநாதபுரம் பகுதியில் வசித்து வருகிறார். சமூக வலைதளங்களில் மத மோதலை ஏற்படுத்தும் கருத்துகளை பரப்பியதாக கடந்த ஏப்ரலில் மதுரை தெப்பக்குளம் போலீஸாரால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கு என்ஐஏ விசாரணைக்கு மாற்றப்பட்டது. இதையடுத்து அப்துல்லா புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில், டெல்லியிலிருந்து வந்த என்ஐஏ அதிகாரிகள் களக்காட்டில் உள்ள அப்துல்லா வீட்டில் நேற்று சோதனை நடத்தினர். அங்கிருந்த அவரது தாய் முத்துலட்சுமி, சகோதரர் சேதுராமன் ஆகியோரிடம் விசாரணை மேற்கொண்டனர். தொடர்ந்து, அப்துல்லாவுடன் தொடர்பில் இருந்தவர்கள், நண்பர்கள் உட்பட 10-க்கும் மேற்பட்டோரை, களக்காடு புலிகள் காப்பக துணை இயக்குநர் அலுவலகத்துக்கு வரவழைத்து விசாரணை நடத்தினர்.

இதேபோன்று, மதுரையில் உள்ள அப்துல்லா மற்றும் அவரது மாமனார் வீட்டில் நேற்று என்ஐஏ சோதனை நடத்தது.

**சின்னமனூர்**

மதுரையை சேர்ந்த சமுத்திர பாண்டி மகன் யூசுப்அஸ்லாம் (31), தேனி மாவட்டம் சின்னமனூர் வடக்கு ரத வீதியில் உள்ள வாடகை வீட்டில் வசித்து வருகிறார். அவரது வீட்டில் நேற்று என்ஐஏ அதிகாரிகள் சோதனை நடத்தினர். அங்கிருந்து சில ஆவணங்களை கைப்பற்றிய அதிகாரிகள், விசாரணைக்காக யூசுப் அஸ்லாமை சின்னமனூர் காவல் நிலையத்துக்கு அழைத்து சென்றனர்.

சமூக வலைதளங்களில் சர்ச்சைக்குரிய கருத்துகளை பதிவிட்டு வந்த யூசுப் அஸ்லாமுக்கு தீவிரவாத இயக்கத்துடன் தொடர்பு இருக்குமோ என்ற கோணத்தில் இந்த சோதனை நடத்தப்பட்டதாக தெரிகிறது.

### தமிழகத்துக்கு சொன்னதைவிட மத்திய அரசு

# கூடுதல் தடுப்பூசி வழங்கியதை மறைத்து அரசியல் செய்கிறது திமுக

## ● தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை குற்றச்சாட்டு

**திருவண்ணாமலை**

தமிழகத்துக்கு சொன்னதை விட கூடுதலாக மத்திய அரசு தடுப்பூசி வழங்கியதை மறைத்து அரசியல் செய்வதாக திமுக மீது தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை குற்றஞ்சாட்டினார்.

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை நேற்று சுவாமி தரிசனம் செய்தார். பின்னர் அவர், செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழ் மண்ணை சார்ந்ததுதான் பாஜக சித்தாந்தம். ஆன்மிகத்தை அடிப்படையாக வைத்து கட்சி வளர்ந்து கொண்டிருக்கிறது. பவுர்ணமி, கார்த்திகை தீபத்துக்கு யாருமே அழைக்காமல் பல லட்சம் பேர் வருகிறார்கள். தமிழக மக்களுக்கு ஆன்மிக தேடுதல் இருக்கிறது. ஆன்மிகத்துடன் வாழ்க்கை பயணத்தை கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக கோயிலை புண்ணிய ஸ்தலமாக தமிழக மக்கள் பார்க்கின்றனர். கிரிவலம் செல்ல முடியவில்லை என எனக்கும் வருத்தமாக உள்ளது.

கரோனா தடுப்பூசி விஷயத்தில் மத்திய அரசை கண்டிக்கிறோம் என்பதில் முகாந்திரம் கிடையாது. தமிழகத்துக்கு கடந்த ஜூன் மாதத்துக்கு 41 லட்சம் தடுப்பூசி கொடுக்க வேண்டும். ஆனால், 52 லட்சம் தடுப்பூசி கொடுக்கப்பட்டது. கூடுதலாக 11 லட்சம் தடுப்பூசி கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மாதம் 70 லட்சத்துக்கும் கூடுதலாகதான் தடுப்பூசியை மத்திய அரசு வழங்கும்.

**டோக்கன் பெறுவதாக புகார்**

தடுப்பூசி மையங்களில் திமுகவினர் சென்று, டோக்கனை பெற்று தங்களுக்கு தெரிந்த நபர்களுக்கு வழங்குகின்றனர். இதைக் கண்டித்துதான் அதிமுக, பாஜக ஆர்ப்பாட்டம் செய்துள்ளன. ஜூன் மாதத்துக்கு சொன்னதை விட, குறைவாக கொடுத்துள்ளனர் என சுகாதாரத் துறை அமைச்சர் அறிக்கை வெளியிடட்டும்.

மத்திய அரசு ஒத்துழைப்பு அளிக்கிறது, நிறைய தடுப்பூசி வழங்குகிறது என புதுடெல்லியில் பேசுகிறார்கள், சென்னை வந்ததும் மாற்றி பேசுகின்றனர். தமிழகத்துக்கு பாரபட்சம் பார்க்கின்றனர் என கூறுகின்றனர். சொன்னதை விட மத்திய அரசு அதிகமான தடுப்பூசி வழங்கும்போது, அதனை மறைத்து ஏன் அரசியல் செய்கின்றனர்.

பெட்ரோல், டீசல் விலையை கட்டுக்குள் கொண்டுவருவதற்கான பணியை மத்திய அரசு செய்து வருகிறது. ஒரு லிட்டருக்கு 5 ரூபாய் குறைப்போம் என சொல்லி திமுக ஆட்சிக்கு வந்தது. அவர்கள் சொன்னதுபோல் குறைக்கவில்லை. பழைய அரசு மீது லஞ்ச ஒழிப்புத் துறை மூலமாக புதிய அரசு சோதனை நடத்துவது என்பது, தமிழகத்தில் வாடிக்கையாக இருப்பதுதான். அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலம், அவர்கள் அரசியலுக்காக சோதனை நடத்தினார்களா என்பது தெரிந்து விடும். இவ்வாறு அண்ணாமலை கூறினார்.

இதைத் தொடர்ந்து அவர், திருவண்ணாமலையில் நடைபெற்ற பாஜக நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் அண்ணாமலை கலந்து கொண்டு பேசினார்.



▲ திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை நேற்று சுவாமி தரிசனம் செய்தார்.

# அசாமில் நிலச்சரிவில் சிக்கி தமிழக ராணுவ வீரர் மரணம்

**மதுரை**

அசாமில் பலத்த மழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் மதுரையைச் சேர்ந்த ராணுவ வீரர் கதிர்வேல் உயிரிழந்தார்.



▲ கதிர்வேல்

மதுரை வில்லாபுரம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பைச் சேர்ந்தவர் கதிர்வேல்(36). இவருக்கு சண்முகப்பிரியா(25) என்ற மனைவியும், ஹனிஷ்க்(7), பார்த்திவ்(3) ஆகிய 2 மகன்களும் உள்ளனர். கதிர்வேல் ராணுவ வீரராகப் பணியாற்றி வந்தார்.

இவர் அசாமில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு பணியில் இருந்தார். அப்போது பலத்த மழை பெய்தது. இதனால் அப்பகுதியில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் சிக்கி கதிர்வேல் இறந்தார். ராணுவ அதிகாரிகள் அவரது உடலை அசாம் தலைமையகத்துக்குக் கொண்டு சென்று அஞ்சலி செலுத்தினர்.

அவரது உடல் விமானம் மூலம் (இன்று) இரவு 8.30 மணியளவில் மதுரை வருகிறது. பின்னர் உறவினர்களிடம் உடல் ஒப்படைக்கப்பட்டு ராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும்.

# தேவைப்பட்டால் மட்டுமே யானைகள் நலவாழ்வு முகாம்

## ● அறநிலையத் துறை அமைச்சர் தகவல்

**மேட்டுப்பாளையம்**

கோவை மேட்டுப்பாளையம் வனபத்ரகாளியம்மன் கோயிலில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: 3 மாதங்களுக்கு ஒருமுறை, கோயில் யானைகளுக்கு முழு உடற்பரிசோதனை நடத்தப்படும். 15 நாட்களுக்கு ஒருமுறை மருத்துவர்கள் மூலம் பரிசோதனை நடத்தப்படும். கோயில் யானைகளுக்கான நலவாழ்வு முகாமை பொறுத்தவரை கடந்த காலங்களில் இருந்த நிலைவேறு, தற்போதைய நிலை வேறு. இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் பராமரிக்கப்படும் யானைகள், அந்தந்த கோயில்களிலேயே புத்துணர்வு பெறவும் ஆரோக்கியமாக இருக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோயில்களிலேயே யானைகளுக்கு பிரத்தியேக குளியல் தொட்டிகள் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

எனவே, தேவை ஏற்பட்டால் மட்டுமே கோயில் யானைகளுக்கான புத்துணர்வு முகாம் நடத்தப்படும். யானைகள் இல்லாத கோயில்களுக்கு, வீட்டில் வளர்த்து வரும் யானைகளை, உரிமையாளர்கள் தானமாக வழங்கினால், சட்டப்படி ஏற்கப்படும் என்றார்.

### மின்வாரிய அதிகாரி வீட்டில்

# ரூ.2 கோடி மதிப்பிலான ஆவணங்கள் பறிமுதல்

**பெரம்பலூர்**

பெரம்பலூர் மின்வாரிய அலுவலகத்தில், மின்வாரிய உதவி செயற்பொறியாளராக பணியாற்றியவர் மாணிக்கம்(43). இவர், 2019-ல் லஞ்ச வழக்கில் கைதாகி சிறைக்குச் சென்றவர். துறைரீதியான நடவடிக்கையாக அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

இந்த வழக்கு தொடர்பாக லஞ்ச ஒழிப்பு போலீஸார் விசாரணை நடத்தி, மாணிக்கம் வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்ததாக வழக்கு பதிவு செய்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக, நேற்று முன்தினம் மாணிக்கத்துக்கு சொந்தமான வெங்கடேசபுரத்தில் உள்ள வீட்டிலும், வெண்பாவூர் கிராமத்தில் உள்ள வீட்டிலும் லஞ்ச ஒழிப்பு போலீஸார் திடீர் சோதனையில் ஈடுபட்டனர். நள்ளிரவு வரை இந்த சோதனை நீடித்தது. இதில், ரூ.2 கோடி மதிப்பிலான சொத்து மற்றும் முதலீட்டு ஆவணங்களும், வங்கி கணக்கு புத்தகமும் பறிமுதல் செய்யப்பட்டதாக லஞ்ச ஒழிப்பு போலீஸார் தெரிவித்தனர்.

**‘பஞ்ச்’சோந்தி பராக்!**

நாங்கள் யாருக்கும் பயப்பட மாட்டோம்.
– முன்னாள் முதல்வர் பழனிசாமி




– மு.நிர்மலாதேவி, திண்டுக்கல்.

● **செய்தி :** சொந்த தேவைக்கு காவலர்கள் பேருந்தில் சென்றால் டிக்கெட் எடுக்க வேண்டும்! – *டிஜிபி சைலேந்திர பாபு*

**பஞ்ச் :** ‘மாமூல்’ வாழ்க்கை பாதிக்குமே!
– நா.இரவீந்திரன், வாவிபாளையம்.

● **செய்தி :** வெளிப்படைத் தன்மையுடன் எளிமையாக பத்திரப்பதிவு சேவை இருக்க வேண்டும்! – *முதல்வர் ஸ்டாலின்*

**பஞ்ச் :** குறிப்பா, கழக உடன்பிறப்புகள் யாருகிட்டேயும் மிரட்டி இடத்தை வாங்கக் கூடாதுன்னு சொல்லுங்க தலைவரே!
– கு.வைரச்சந்திரன், திருச்சி.

### வீடு, நிறுவனங்களில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் சோதனை

# திமுக அரசின் பழிவாங்கும் நடவடிக்கை

## ● முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் குற்றச்சாட்டு

**கரூர்**

தனது வீடு, நிறுவனங்களில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் சோதனை நடத்தியது திமுக அரசின் பழிவாங்கும் நடவடிக்கை என அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தெரிவித்தார்.

கரூரில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கூறியது: சென்னை மற்றும் கரூரில் உள்ள எனது வீடுகள், நிறுவனங்கள் மற்றும் உதவியாளர்கள் வீடுகள் உள்ளிட்ட இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸார் நேற்று முன்தினம் சோதனை நடத்தியுள்ளனர். எனக்கு சென்னை மற்றும் கரூரில் சொந்த வீடு கிடையாது. வாடகை வீடுகளில் தான் வசிக்கிறேன்.

திமுக அரசின் பழிவாங்கும் நடவடிக்கையின் முதல் கட்டமாக இந்த சோதனையை நடத்தி உள்ளனர். இதை சட்டப்படி எதிர்கொள்வோம். அதிமுக எதற்கும் தயாராக உள்ளது.

மேலும், இந்தச் சோதனை எதிர்பார்த்த ஒன்றுதான். சோதனையில் ஆவணங்கள் எதுவும் எடுத்து செல்லப்படவில்லை. 4 நிறுவனங்களில் இருந்து பணம் மட்டும் எடுத்து செல்லப்பட்டுள்ளது. அதற்கு முறையான கணக்குகள் உள்ளன.

சம்மன் அனுப்பும்போது உரிய ஆவணங்களை சமர்ப்பித்து பணத்தைத் திரும்ப பெற நடவடிக்கை எடுக்கப்படும். இதுபோல பொய் வழக்குகள் போட்டு கரூர் மாவட்டத்தில் என்னை செயல்படவிடாமல் தடுத்து விடலாம் என மனக்கணக்கு போட்டுள்ளனர்.

உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு பொறுப்புகளில் உள்ள சிலரை தொழில்ரீதியாக மிரட்டி திமுகவில் இணைக்கின்றனர். அரசு பதவிகளில் உள்ளவர்களை பணியிடமாற்றம் செய்து பழிவாங்குகின்றனர். பல தொழிற்சங்கங்களில் உள்ளவர்களை தொமுசவில் இணைய வற்புறுத்துகின்றனர். மறுத்தால் பணியிட மாற்றம் செய்கின்றனர்.

நான் பதவிக்கு வந்த பிறகு சொத்துகளை சேர்த்தது போல சிலர் கூறுகின்றனர். ஆனால், சாயப்பட்டறை, தறி, கிரஷர் என நான் 35 ஆண்டுகளாக தொழில் செய்து வருகிறேன். எனது வங்கிக்கணக்குகள் எதுவும் முடக்கப்படவில்லை. திமுகவின் அராஜக போக்கு நீண்ட காலம் நீடிக்காது. காலம் இப்படியே போய்விடாது என்றார்.

### தமிழக அரசு சார்பில்

# நீட் தேர்வு குறித்து தெளிவான அறிவிப்பு வெளியிட வேண்டும்

## ● கிருஷ்ணசாமி வலியுறுத்தல்

**மதுரை**

இந்த ஆண்டு நீட் தேர்வு நடத்தப்படுவது குறித்து தமிழக அரசு தெளிவான அறிப்பை வெளியிட வேண்டும் என்று புதிய தமிழகம் கட்சித் தலைவர் க.கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: திமுக ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என தெரிவித்திருந்தனர். இந்நிலையில் இந்த ஆண்டு கட்டாயமாக நீட் தேர்வு நடத்தப்படும் என மத்திய அரசு கூறியுள்ளது. எனவே, திமுக தலைமையிலான தமிழக அரசு, நீட் தேர்வு நடத்துவது குறித்து தெளிவான அறிவிப்பை வெளியிட வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பாகவத்தை நண்பர் என்ற முறையில் சந்தித்துப் பேசினேன். தமிழகத்தில் தடுப்பூசி இருப்பு குறித்து வெளிப்படைத்தன்மை இல்லை. எனவே, தடுப்பூசி குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

திமுக ஆட்சிக்கு வந்த பின்னர் இந்தியாவை ஒன்றியம் என அழைப்பது நம்மை நாமே சிறுமைப்படுத்துவது போல உள்ளது. திமுக தனது நிலைப்பாட்டை மாற்ற வேண்டும். அறநிலையத் துறையின் கீழ் உள்ள கோயிலுக்குச் சொந்தமான சொத்துகள் தொடர்பாக முழுமையான விவரங்களை வெளியிட வேண்டும்.

கோயிலுக்குச் சொந்தமான ஒரு அடி நிலம் கூட ஆக்கிரமிக்க அனுமதிக்கக் கூடாது. இவ்வாறு அவர் கூறினார்.

இந்து தமிழ் திசை
பெண் இன்று
உலகம் இவள் வசம்
ஞாயிறு, ஜூலை 25, 2021 penindru@hindutamil.co.in

# சமூகத்துக்குச் சிகிச்சை அளித்த முத்துலட்சுமி



மருத்துவர் முத்துலட்சுமியின் 135ஆம் பிறந்த நாள்: ஜூலை 30

■ ஆதி வள்ளியப்பன் ■

**இன்றைய பெண்களுக்குக் கிடைத்திருக்கும் சில வசதிகள் குறித்துச் சிலாகித்துப் பேசப்படுகிறது. இந்தச் சொற்ப வசதிகளும் கடந்த நூற்றாண்டின் முதல் பாதியில் பெண்களுக்கு எட்டாக்கனியாகவே இருந்தன என்பது நாம் அறியாத நிஜம். சமூகவெளியில் பெண்கள் அனுமதிக்கப்பட்டிராத அந்தக் காலத்தில், தடைகளை எதிர்த்துக் கடுமையாகப் போராடித்தான் பெண்கள் வெளியே வந்தார்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருவர் முத்துலட்சுமி.**

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் புதுக்கோட்டை போன்ற அதிகம் வளர்ச்சி பெற்றிராத ஊரில் அவர் வளர்ந்தார். பெண்கள் சார்ந்து அன்றைக்கு முற்போக்காகச் சிந்திந்த நாராயணசாமிக்கு மகளாக முத்துலட்சுமி பிறந்திருந்தாலும், அவருடைய தாய் இசைவேளாளர் சாதியைச் சேர்ந்தவர் என்பதால் பல்வேறு ஒடுக்குமுறைகளை எதிர்கொண்டார். 1902இல் புதுக்கோட்டை மாகாண அளவிலான மெட்ரிக் தேர்வில் தேறிய பத்துப் பேரில் ஒரே பெண்ணாக இருந்தார். அவருடைய முதல் சாதனைப் பட்டியல் இப்படித்தான் தொடங்கியது.

**படிப்புத் தாகம்**

பெண்களுக்கான பள்ளிக்கல்வியே சாதனையாகக் கருதப்பட்ட நிலையில், உயர்கல்வி என்பது பெருங்கனவாகவே இருந்தது. இண்டர்மீடியேட் படிக்க அவர் விரும்பினார்.

பெண்களுக்கென இண்டர்மீடியேட் கல்லூரி இல்லாததால், ஆண்களுக்கான கல்லூரிக்கே அவருடைய தந்தை விண்ணப்பித்தார். முதலில் பாலினத்தைக் கூறி மறுக்கப்பட்ட வாய்ப்பு, அடுத்ததாக அவருடைய தாயின் சாதியைக் காரணம் காட்டி மறுக்கப்பட்டது. முத்துலட்சுமியும் அவருடைய தந்தையும் அயர்ந்துவிடாமல் மாகாண அரசு அதிகாரிகளிடமும் புதுக்கோட்டை மாகாண அரசரிடமும் விண்ணப்பித்துப் போராடியதன் விளைவாக, அனுமதி கிடைத்தது. கல்லூரியில் ஒரே பெண்ணாக இருந்ததால் மூன்று புறமும் அடைக்கப்பட்ட கூண்டு போன்ற அமைப்பில், மாணவர்களுடன் கலக்காமல் அவர் உட்கார வைக்கப்பட்டார்.

அவருடைய படிப்புத் தாகம் அத்துடன் நிறைவு பெறவில்லை. 1907இல் 'மதராஸ் மருத்துவக் கல்லூரி'யில் சேர்ந்தார். தங்கள் வகுப்புகளில் பெண்களுக்கு அனுமதியில்லை என மறுத்த பல ஆங்கிலேயப் பேராசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்று, சிறப்புத் தகுதியுடன் மருத்துவக் கல்வியை முத்துலட்சுமி நிறைவுசெய்தார். சிறு வயதிலேயே திருமணம் செய்தாக வேண்டுமென்கிற உறவினர்களின் தொடர்ச்சியான வற்புறுத்தலை மீறியே, அவருடைய கல்விப் பயணம் இவ்வளவு காலம் தொடர்ந்தது.

**மருத்துவச் சேவை**

'மதராஸ் மருத்துவக் கல்லூரியில் படித்த முதல் பெண்', 'முதல் தென்னிந்தியப் பெண் மருத்துவர்' என்று தகவல் பிழையுடன் அவரைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. உண்மையில் அவருக்கு முன்னதாக மதராஸ் மருத்துவக் கல்லூரியில் சில பெண்கள் படிப்பை நிறைவுசெய்து, மருத்துவராகப் பணியாற்றியும் இருக்கிறார்கள். அவருக்கு முன்னர் அந்தக் கல்லூரியில் படித்தவர்கள் கிறிஸ்தவப் பெண்களாக இருந்தார்கள். முத்துலட்சுமி படித்து முடித்த காலத்தில்தான் மாணவ-மாணவிகளுக்கு பல்கலைக்கழக மருத்துவப் பட்டம் வழங்கப்பட்டது. அந்த வகையில் 'பல்கலைக்கழக மருத்துவப் பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்' என்கிற அடைமொழி முத்துலட்சுமிக்குப் பொருந்தும்.

முத்துலட்சுமி மருத்துவராவதற்கும் பிற்காலத்தில் புற்றுநோய் மருத்துவத்துக்கான சிறப்பு மருத்துவமனையான 'அடையாறு புற்றுநோய் நிறுவன'த்தை உருவாக்குவதற்கும் இருவர் காரணமாக அமைந்தார்கள். டைஃபாய்டால் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த முத்துலட்சுமியின் அம்மா சந்திரம்மாளுக்குச் சிகிச்சை அளித்துக் காப்பாற்றிய அமெரிக்க மருத்துவர் வான் ஆலன் முதலாமவர், புற்றுநோயால் இளம் வயதிலேயே காலமான தங்கை சுந்தராம்பாள் இரண்டாமவர்.

**முன்னேற்றத்தின் முதுகெலும்பு**

மருத்துவராகச் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றிருந்த முத்துலட்சுமி பிற்காலத்தில் பல முன்னோடிச் சட்டங்களை இயற்றுவதிலும் பங்களித்தார். நாட்டிலேயே சட்டமன்றத்துக்கு நியமனம் செய்யப்பட்ட இரண்டாம் பெண் உறுப்பினர் முத்துலட்சுமி (1927இல்). சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் 'தேவதாசி முறை ஒழிப்பு மசோதா', 'குழந்தைத் திருமணத் தடை மசோதா' போன்றவை அவருடைய முக்கியப் பங்களிப்புகள். கடந்த நூற்றாண்டின் முதல் பாதியில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நாடு போராடிக்கொண்டிருந்த காலத்தில், தென்னிந்தியப் பெண்களின் நிலை மோசமாகவும் கேட்பாரற்றும் இருந்தது. அந்தப் பின்னணியில் பெண்களின் சமூக மேம்பாட்டுக்கு இந்தச் சட்டங்கள் குறிப்பிடத்தக்க அளவுக்குப் பங்களித்தன.

அடிப்படையில் காந்தியவாதியான முத்துலட்சுமி தன் காலத்தைத் தாண்டி சிந்திப்பவராக இருந்தார். அதேநேரம் தீவிர முற்போக்காளர் என்று அவரை வரையறுத்துவிட முடியாது. சட்டமன்றத்தில் அவர் தாக்கல் செய்த மசோதா தொடர்பான விமர்சனங்கள், ஏற்படுத்தச் சாத்தியமுள்ள பின்விளைவுகள் சிலவற்றை அவர் முழுமையாக உள்வாங்கிக் கொண்டிருக்கவில்லை. அதேநேரம் பெண்களின் நிலையை முன்னேற்ற தன் வாழ்நாள் முழுக்க அர்ப்பணிப்புடன் அவர் பாடுபட்டார் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.


மதம், சடங்குகளின் பெயரில் பெண்களுக்கு எதிராக வலியுறுத்தப்பட்ட ஒடுக்குமுறைகளைச் சட்டரீதியாகக் களைவதற்காகத் தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டே இருந்தார். பல வகைகளில் தான் ஒரு முதல் பெண்ணாக இருக்கிறோம் என்கிற பெருமையைப் பெரிதாகக் கருதாமல், சமூகத்தை அனைத்துப் பெண்களுக்குமானதாக மாற்றுவதற்காகக் கடைசிவரை மன உறுதியுடன் அவர் செயல்பட்டது முன்னுதாரணம் அற்றது.



கட்டுரையாளர் தொடர்புக்கு:
valliappan.k@hindutamil.co.in

## புறக்கணிக்கப்பட்ட போராட்ட வரலாறு

மருத்துவர் முத்துலட்சுமியைப் பற்றி மட்டுமல்லாமல், இந்தியாவின் முதல் பெண் மருத்துவர்களின் போராட்ட வாழ்க்கை குறித்து விவரிக்கிறது ஆங்கில இதழாளர் கவிதா எழுதியுள்ள 'லேடி டாக்டர்ஸ்' நூல் (வெஸ்ட்லேண்ட் நான்ஃபிக்ஷன் வெளியீடு). இந்தியாவின் முதல் பெண் மருத்துவரான ஆனந்திபாய், இந்தியாவுக்குள்ளேயே மருத்துவம் படித்த முதல் பெண் காதம்பினி, குழந்தைத் திருமணத்திலிருந்து வெளியேறி மருத்துவரான ருக்மாபாய், குழந்தைக் கைம்பெண்ணாக இருந்து பிற்காலத்தில் மருத்துவரான ஹைமாவதி, இந்தியாவின் முதல் பெண் மாநிலத் தலைமை மருத்துவரான மேரி பூனன் லூகோஸ் ஆகியோரின் வாழ்க்கையையும் சாதனைகளையும் இந்த நூல் மூலம் தெரிந்துகொள்ளலாம். இவர்களில் ருக்மாபாயும் முத்துலட்சுமியும் பெண்கள் சந்தித்த ஒடுக்குமுறைகளைத் தாண்டி, சாதி சார்ந்தும் தடைகளை எதிர்கொண்டவர்கள்.




கடந்த நூற்றாண்டின் தொடக்கம்வரை பெண் மருத்துவர்கள் 'லேடி டாக்டர்' என்கிற அடைமொழியுடன் சற்று எள்ளல் தொனியுடனே அழைக்கப்பட்டுவந்தனர். அந்த எள்ளல் தொனியைத் துடைத்தெறியும் வகையில் அவர்கள் தகர்த்த தடைகள், முன்னோடி முயற்சிகளை இந்த நூல் பதிவுசெய்துள்ளது. அன்றைக்குப் பெண்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த சில வேலைகளைத் தாண்டி, மருத்துவத் தொழிலிலும் முத்திரை பதிக்க வாசல் திறந்துவைத்தவர்கள் இந்தப் பெண்கள். இந்தியா முதல் பெண் அலோபதி மருத்துவரைப் பெற்று 135 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், நம் வரலாற்றிலும் பாடப்புத்தகங்களிலும் புறக்கணிக்கப்பட்டுள்ள இந்தப் பெண்களின் வாழ்க்கையைக் கூறி, இந்தத் தலைமுறைக்கு உத்வேகம் ஊட்டுகிறது இந்த நூல்.

Lady Doctors: The Untold Stories of India's First Women in Medicine, Kavitha Rao, Westland Non fiction

---

விவாதக் களம்



## குழந்தைப்பேறு பெண்ணின் உரிமையே

**பெண்களுக்கு மறுக்கப்படும் உரிமைகள், குறிப்பாக குழந்தைப்பேறு உரிமை குறித்து 18 ஜூலை அன்று வெளியான 'பெண் இன்று'வில் எழுதியிருந்தோம். குழந்தைப்பேறு சார்ந்து முடிவெடுக்கும் உரிமை பெண்களுக்கு இருக்கிறதா எனக் கேட்டிருந்தோம். அந்த உரிமை மறுக்கப்படுவது குறித்தும் பெண்களே அதை உணராத நிலை குறித்தும் பலரும் எழுதியிருந்தனர். அவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடிதங்கள் உங்கள் பார்வைக்கு:**

நான் ஒரு மகப்பேறு மருத்துவர். எந்தப் பெண்ணுமே மகப்பேறு தனது உரிமை என உணர்வது இல்லை. திருமணமான நான்கே மாதங்களிலேயே, 'இன்னும் ஏன் குழந்தை தங்கவில்லை என வீட்டில் போய்ப் பார்த்துவிட்டு வர சொன்னார்கள்' என்று வருவார்கள். கணவரோ வெளிநாட்டில். பரிசோதனையும் செய்துகொள்ள மாட்டாராம். ஆனால், வந்திருக்கும் இந்த இரண்டு மாத இடைவெளியில் குழந்தை தங்கவில்லை என்றால் விவாகரத்து ஆனாலும் ஆகிவிடும். 34 வயதில் குடலிறக்கப் பிரச்னையோடு இருக்கும் அரசு ஊழியர். 'வீட்டில் ரொம்ப அழுத்தம் கொடுக்கிறார்கள். மூன்றாவது குழந்தை அதுவும் ஆண் குழந்தை வேண்டும்' என்பார். இவர்களுடன் இவர்களுடைய கணவன்மார்கள்கூட வருவதில்லை. இவற்றுக்கு இடையே சில ஆறுதல்களும் உண்டு. கணவனுடன் வந்து, 'இன்னும் படிப்பு முடியவில்லை, குழந்தைப் பிறப்பைத் தள்ளிப்போட என்ன செய்வது?', 'எதிர்பாராதவிதமாகக் கர்ப்பமாகிவிட்டேன். பாதுகாப்பாகக் கலைக்க விரும்புகிறேன்' என்றுவரும் பெண்கள் அரிது. இவை தவிர ஏமாற்றிச் சென்ற காதலனால் கருவுற்ற பெண்கள், போதிய இடைவெளியின்றி கருவுற்றவர்கள் என்று ஒவ்வொரு சம்பவத்திலும் பெண்களின் தேர்வு இரண்டாம்பட்சம்தான்.

குமுதாசலம், ஆத்தூர், சேலம்.

உரிமைகள் மறுக்கப்படுகையில் பெண்கள் எதிர்த்து நின்று, சமயோசிதமாகச் செயல்பட வேண்டும். ஆனால், இது எளிதல்ல. அப்போதும் அவள் இன்னல்களையும் தாக்குதல்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. என்றைக்கு ஆண்கள் புரிந்துணர்வுடன் பெண்ணைச் சக மனுஷியாக, சுயநலமின்றி உண்மையாக மதிக்கிறார்களோ, அன்றுதான் பெண்ணுரிமை முழுமையடையும்.

மணிமேகலை, ஓசூர்.

குழந்தை வேண்டுமா வேண்டாமா என்று முடிவெடுக்கும் உரிமை முழுக்க முழுக்கப் பெண்களுக்கு மட்டுமே உண்டு. அப்படி அந்த உரிமை மறுக்கப்படும் பட்சத்தில் தாராளமாகத் தன் நிலைப்பாட்டைப் பெண்கள் விளக்கலாம். குழந்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் எதிலும் தாழ்ந்துவிடவில்லை. ஆண்கள் அனுமதிக்க வேண்டும் என்று எதிர்பாராமல் தனக்கான உரிமையைத் தானே எடுத்துக்கொள்ளப் பெண்கள் பழக வேண்டும். குழந்தை பெற்றுக்கொள்வது, வளர்ப்பது என எதுவாக இருந்தாலும் அது பெண்ணின் உடல்நிலை, மனநிலையைப் பொறுத்ததாகத்தான் அமைய வேண்டும். இதில் ஆண்கள் முடிவெடுக்க பெண்கள் அனுமதிக்கக் கூடாது.

தேஜஸ், காளப்பட்டி.


பெண்ணின் உடல் சார்ந்த உரிமை குறித்த விவாதம் சிறந்த முன்னெடுப்பு. முதலில் பெண்கள் புனிதம், தாய்மை, பெண்மை போன்ற அபத்தங்களை உடைக்க வேண்டும். 'உன் முன்னேற்றத்தைக் குழந்தைப்பேறு தடுக்கும் என்றால் கர்ப்பப்பையை அறுத்து எறிந்துவிடு' என்று பெண் முன்னேற்றம் குறித்து எழுதியவர் பெரியார். இதை விளங்கிக்கொண்டால் பெண் ஏன் அடிமையானாள் என்று புரியும்.

மேனகா செல்வராஜ்.

---

## வாகனங்களில் கலக்கும் நடிகைகள்

கார் ரேஸிங், பைக் ரேஸிங் என்றால் தமிழ் சினிமா பிரபலங்களில் நடிகர் அஜித் குமாரின் பெயர்தான் நினைவுக்கு வரும். அதேபோல் சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு சைக்கிள் ஓட்டிச்சென்ற நடிகர் விஜய் இன்றைய உடற்பயிற்சி ஆர்வலர்களிடையே ட்ரெண்டாக இருக்கும் சைக்கிளிங்கில் தனக்கும் ஆர்வம் இருப்பதை வெளிப்படுத்தினார். தற்போது தமிழ் சினிமாவின் இரண்டு முன்னணி கதாநாயகிகள் கார் ரேஸிங், சைக்கிளிங் ஆகியவை தொடர்பான செய்திகளில் இடம்பிடித்தனர்.



நடிகை நிவேதா பெத்துராஜ் ஃபார்முலா 1 கார் பந்தயத்தில் பங்கேற்பதற்கான பயிற்சியில் முதல் நிலையை நிறைவுசெய்துள்ளார். எட்டாம் வகுப்பு படிக்கும்போதே தனக்கு ஸ்போர்ட்ஸ் கார்கள் மீது ஆர்வம் வந்துவிட்டதாகச் சொல்லும் நிவேதா, 2015–ல் அமீரகத்தில் வசித்தபோது தனக்கென்று சொந்தமாக ஸ்போர்ட்ஸ் காரை வாங்கினார். அதில் பொருத்தப்பட்ட அதிவேக எஞ்சின் காரணமாக மகளின் பாதுகாப்பு குறித்து அவருடைய தந்தை அஞ்சியதாகவும் அவரைக் கஷ்டப்பட்டு சம்மதிக்க வைத்ததாகவும் நிவேதா கூறியிருக்கிறார்.

மறுபுறம் நடிகை த்ரிஷா புதிய உயர்ரக சைக்கிளை வாங்கி அதில் அமர்ந்திருக்கும் ஒளிப்படத்தை ட்விட்டரில் வெளியிட்டார். சைக்கிளிங் செல்வதற்கான உடை, ஹெல்மெட், முகக் கவசம் ஆகியவற்றோடு கிழக்குக் கடற்கரை சாலையில் அவர் சைக்கிள் ஓட்டிச் சென்ற ஒளிப்படங்களும் வெளியாகின. கட்டுக்கோப்பான உடலமைப்பைப் பேணுபவரான த்ரிஷா தற்போது சைக்கிளிங்கையும் தொடங்கியிருக்கிறார்.

---

## ஆபத்தில் உதவியவர்களைக் கைவிடலாமா?

பெண்கள் 360°

■தொகுப்பு: கோபால்■

தெலங்கானா அரசு மருத்துவமனைகளில் போதுமான எண்ணிக்கையில் செவிலியர் இல்லாததால், ஓராண்டுக் கால அவுட்சோர்ஸிங் அடிப்படையில் தற்காலிகப் பணியில் செவிலியரை நியமிக்க அரசு உத்தரவிட்டது. இதன்படி 1,640 செவிலியர் ஏப்ரல் 2020 முதல் மார்ச் 2021வரை பல்வேறு அரசு மருத்துவமனைகளில் நியமிக்கப்பட்டனர். கரோனா இரண்டாம் அலை தீவிரமாக இருந்ததால் அவர்களுடைய பணிக்காலம் ஜூன் இறுதிவரை நீட்டிக்கப்பட்டது. ஜூலை 5ஆம் தேதியிலிருந்து அவர்கள் பணிக்கு வர வேண்டாம் என்று உத்தரவிடப்பட்டது. இதனால் வேலையையும் வாழ்வாதாரத்தையும் இழந்துள்ள செவிலியர், தாங்கள் பணியில் மீண்டும் சேர்க்கப்பட வேண்டும் என்று கூறிப் போராடிவருகின்றனர். ஹைதராபாத்தில் முதல்வர் கே.சந்திரசேகர ராவின் அலுவலகத்துக்கு முன் போராட்டம் நடத்திய நூற்றுக்கணக்கான செவிலியர் கைதுசெய்யப்பட்டனர். மேலும், பல பகுதிகளில் போராட்டங்கள் நடத்தும் முயற்சிகள் காவல்துறையால் ஒடுக்கப்பட்டுள்ளன. உண்ணாநிலைப் போராட்டம் நடத்துவதற்கு அரசும் காவல்துறையும் அனுமதி மறுத்துவருகின்றன



வேலையிழந்த செவிலியர் பலர் பணியின் காரணமாக கோவிட்–19 நோய்க்கு ஆளானவர்கள். குடும்ப உறுப்பினர்களைப் பெருந்தொற்றுக்குப் பறிகொடுத்தவர்கள். பலர் தனியார் நிறுவன வேலையை விட்டுப் பணிப் பாதுகாப்பு கிடைக்கும் என்னும் நம்பிக்கையில் அரசுப் பணியில் சேர்ந்துள்ளனர். அவுட்சோர்ஸிங் மூலம் நியமிக்கப்பட்ட செவிலியர் யாரும் பணியிலிருந்து நீக்கப்பட மாட்டார்கள் என்று முதல்வர் கூறியிருந்ததையும் மார்ச் 2022 வரை பணியாற்றும் வகையில் ஒப்பந்தக் காலம் நீட்டிக்கப்படும் என்று அதிகாரிகள் அளித்த வாய்மொழி உறுதிமொழிகளையும் போராடும் செவிலியர் சுட்டிக்காட்டுகின்றனர். மேலும், அரசு மருத்துவமனைகளில் 4,000 செவிலியர் பணியிடங்கள் காலியாக இருப்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தெலங்கானா அரசு, கரோனா பெருந்தொற்றுக் காலத்தில் செவிலியரின் அரும்பணிக்கு நன்றி செலுத்தும் விதமாகவும் அவர்களின் வாழ்வாதாரத்தின் மீது அக்கறையுடனும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியது அவசியம்.




## போராடிப் பெற்ற நிரந்தரப் பணி

இந்திய ராணுவத்தில் மேலும் 147 பெண் அதிகாரிகள் நிரந்தரப் பணியைப் பெற்றுள்ளனர். எல்லையில் அந்நிய நாட்டு ராணுவத்தினருடனும் தீவிரவாதிகளுடனும் தம் உயிரைப் பணையம் வைத்துப் போராடிய பெண்கள் ராணுவத்தில் நிரந்தரப் பணியாளர்கள் ஆவதற்கு ஆண்மையப் போக்கை எதிர்த்துச் சட்டப் போராட்டம் நிகழ்த்த வேண்டியிருந்தது.

1992–லிருந்து இந்திய ராணுவத்தில் பெண்கள் பணியமர்த்தப்பட்டனர். ஆனால், அவர்கள் அதிகபட்சம் 14 ஆண்டுகளைக்கொண்ட குறைந்த காலப் பணியில்தான் (எஸ்.எஸ்.சி.) அமர்த்தப்பட்டனர். இதை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில் 2020 பிப்ரவரியில் இந்திய ராணுவத்தில் பணியாற்றும் பெண்களுக்கு, ஆண்களுக்கு நிகராக நிரந்தரப் பணி வாய்ப்பும் பதவி உயர்வும் வழங்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆனால், உடற்தகுதி உள்ளிட்ட சில அளவுகோல்களின் அடிப்படையில் அவர்களுக்குப் பணி நிரந்தர வாய்ப்பு மறுக்கப்பட்டது. இதை எதிர்த்து மீண்டும் பெண்கள் உச்ச நீதிமன்றத்துக்குச் சென்றார்கள். அந்த வழக்கில் 2021 மார்ச் 25 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் பெண்களுக்கான நிரந்தரப் பணிக்கான அளவுகோல்கள் இயல்பிலேயே பெண்களைப் பாகுபடுத்துவதாகக் கூறி அவற்றில் சில மாற்றங்களுக்கு உத்தரவிட்டது. இதன் மூலம் 150 பெண் அதிகாரிகள் ராணுவத்தில் நிரந்தரப் பணியைப் பெறும் வாய்ப்பு உருவானது. இதன்மூலம் நிரந்தரப் பணியைப் பெற்றுள்ள பெண்களின் எண்ணிக்கை 424 ஆக அதிகரித்துள்ளது.

## சிறப்புக் குழந்தைகளின் தொடர்பாடலுக்கு உதவும் செயலி

ஆட்டிச நிலையில் உள்ள குழந்தைகளில் பலரால் பேச முடியாது. பேசக்கூடியவர்களும் முழுமையாகப் பேச மாட்டார்கள். பெரும்பாலும் துண்டு துண்டான சொற்களையே சொல்வார்கள். ஆட்டிசம் தவிர பிற அறிவுசார் குறைபாடு உடையவர்களும்கூடச் சரளமான பேச்சுத் திறன் அற்றவர்களாகவே இருப்பர்.



இதனால், அவர்கள் தம்முடைய எண்ணங்களைப் பகிர முடியால் போவதால் அவர்களது தேவைகள் நிறைவேறுவது சிரமமாக இருப்பதோடு இக்குழந்தைகள் சமூகத்தின் நடத்தை விதிகளை மீறுவதற்கும் வித்திடுகிறது என்று சிறார் மனநல நிபுணர்கள் கூறுகிறார்கள்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக ஆட்டிசம் போன்ற அறிவுசார் குறைபாடு உடையவர்கள் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ள உதவும் வகையில் செயலிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் விலை உயர்வாகவும் போதமைகளோடும் இருக்கின்றன. இந்தக் குறைகளைப் போக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டதுதான் 'அரும்புமொழி' என்னும் செயலி. இந்தச் செயலியை Arumbumozhi என்னும் பெயரில் தேடி கூகுள் பிளேஸ்டோரிலிருந்து இலவசமாகத் தரவிறக்கிக்கொள்ளலாம். பயன்படுத்துவதற்கும் மிக எளிமையானது.

இந்தச் செயலியைப் பயன்படுத்திய ஓராண்டுக் காலத்துக்குள் அதுவரை பேசவே இயலாமல் இருந்த தம்முடைய குழந்தைகள் 'தண்ணீர் தா' போன்ற ஓரிரு சொற்களைக் கொண்ட வாக்கியங்களைப் பேசத் தொடங்கியிருப்பதாகப் பெற்றோர்கள் சிலர் நற்சான்றிதழ் அளித்துள்ளனர்.



புதிய வேளாண் சட்டங்களை எதிர்த்து விவசாயிகள் புனித போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்கள் அழைத்தால் காலணி அணியாமல் பாத யாத்திரையாக சென்று சந்திப்பேன்.

● **நவ்ஜோத் சிங் சித்து,** பஞ்சாப் காங்கிரஸ் தலைவர் ●





உத்தர பிரதேச மாம்பழம் புளிக்கும். ஆந்திர மாம்பழம் இனிக்கும் என்று ராகுல் கூறியுள்ளார். அவரது ருசியில்கூட பிராந்திய பிரிவினைவாதம் தலைதூக்குகிறது.

● **யோகி ஆதித்யநாத்,** உத்தர பிரதேச முதல்வர் ●



| ஒரே நாளில் | இதுவரை |
|---|---|
| 35 ஆயிரம் பேர் குணமடைந்தனர் | 3.05 கோடி பேர் குணமடைந்தனர் |
| 42.67 லட்சம் பேருக்கு தடுப்பூசி | 42.78 கோடி பேருக்கு தடுப்பூசி |
| 16.31 லட்சம் பரிசோதனை | 45.45 கோடி பரிசோதனை |

# பஞ்சாப் மாநில காங்கிரஸில் உட்கட்சி மோதல் முடிந்தது

● காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் தகவல்

■ புதுடெல்லி

பஞ்சாப் மாநில காங்கிரஸில் நிலவிவந்த உட்கட்சி மோதல் முடிவுக்கு வந்துவிட்டதாக கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி கூறினார்.

பஞ்சாபில் ஆளும் காங்கிரஸ் கட்சிக்குள் முதல்வர் அமரீந்தர் சிங் மற்றும் மூத்த தலைவர் நவ்ஜோத் சிங் சித்து இடையே மோதல் ஏற்பட்டது. இருவரும் ஒருவரை ஒருவர் கடந்த சில வாரங்களாக விமர்சித்து வந்தனர். இதனால் இருதரப்பிலும் பிரச்சினை அதிகரித்தது.

இந்நிலையில் பஞ்சாப் மாநில காங்கிரஸ் தலைவராக சித்து நியமிக்கப்பட்டார். இதை ஏற்காத அமரீந்தர், தன்னிடம் சித்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்றார். இதனால் மாநில காங்கிரஸ் தலைவராக சித்து பொறுப்பேற்கும் நிகழ்ச்சியை அமரீந்தர் புறக்கணிப்பார் என கூறப்பட்டது.

இந்நிலையில் காங்கிரஸ் எம்எல்ஏ.க்களுக்கு அமரீந்தர் நேற்று முன்தினம் அளித்த தேனீர் விருந்தில் சித்து பங்கேற்றார். அமரீந்தரிடமும் பேசினார். இதையடுத்து மாநில காங்கிரஸ் தலைவராக சித்து பொறுப்பேற்கும் நிகழ்ச்சியில் அமரீந்தர் பங்கேற்றார்.

இந்நிலையில் பஞ்சாப் உட்கட்சி மோதல் தொடர்பாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியிடம் நேற்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு ராகுல் காந்தி, "பஞ்சாப் உட்கட்சி பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது. நீங்களே இதைப் பார்க்கலாம்" என்று தெரிவித்தார். - பிடிஐ

## கருத்துச் சித்திரம்

கருத்து: **கே.லக்ஷ்மணன்,** திருநெல்வேலி.




▲ வாசகர்களே... இந்த இடம் உங்களுக்கு. கருத்துச் சித்திரத்துக்கான உங்கள் எண்ணத்தை முடிந்தவரையில் வரைந்தோ, எழுத்தில் விவரித்தோ அனுப்பிவையுங்கள். சிறந்த கருத்துகளைச் சித்திரமாக்க எங்கள் ஓவியர் காத்திருக்கிறார். cartoon@hindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ, 044-28552215 என்ற தொலைநகல் எண்ணுக்கோ உங்கள் எண்ணங்களை அனுப்பலாம். பிரசுரிக்கப்படும் கருத்துச் சித்திரங்களுக்குத் தக்க சன்மானம் காத்திருக்கிறது.

**உங்கள் அலைபேசி / தொலைபேசி எண் மற்றும் பின்கோடு ஆகியவற்றைத் தவறாமல் குறிப்பிட்டு அனுப்பவும்.**

## சின்னச் சின்னதாய்...



▲ ஆந்திராவில் 5-ம் ஆண்டு நினைவு நாளில் வளர்ப்பு நாய்க்கு வெண்கல சிலை வைத்து கொண்டாடிய எஜமான் ஞானபிரகாஷ்.

### வளர்த்த நாய்க்கு சிலை வைத்து நினைவு நாள் அனுசரித்த எஜமான்

**விஜயவாடா:** ஆந்திர மாநிலம், கிருஷ்ணா மாவட்டம், பாபுலபாடு மண்டலத்தில் உள்ள அம்பாபுரத்தை சேர்ந்த விவசாயி ஞானபிரகாஷ் ராவ். இவர் சில ஆண்டுகளாக 'சுனக ராஜா' எனும் நாயை பாசத்துடன் வளர்த்தார். அந்த நாயும் இவர்களின் குடும்பத்தாரோடு மிகவும் அன்பாகவும், பாசமாகவும் பழகி வந்தது. இதனிடையே ஞானபிரகாஷ் தனது 2 மகள்களுக்கு திருமணமும் செய்து மாமியார் வீடுகளுக்கு அனுப்பி வைத்தார்.

மனைவியும் ஏற்கனவே இறந்து விட்டதால், வீட்டில் ஞானபிரகாஷுக்கு துணையாக 'சுனக ராஜா' மட்டுமே இருந்தது. அது கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் உடல் நலம் சரியின்றி இறந்து விட்டது. அதிலிருந்து அந்த நாயின் நினைவு நாளை ஞான பிரகாஷ் மிகவும் தடபுடலாக அனுசரித்து வருகிறார். நேற்று அந்த நாயின் 5-ம் ஆண்டு நினைவு நாளும் இதேபோல் தடபுடலாக அனுசரிக்கப்பட்டது. கிராமத்தின் பல இடங்களில் நாய்க்கு பேனர்கள் வைக்கப்பட்டன.

"குடும்பத்தில் ஒருவனாக பழகிய சுனகராஜாவின் ஆன்மா சாந்தி அடைய வேண்டும்" என அந்த பேனரில் எழுதப்பட்டு படத்துடன் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்தது. இதனை பார்த்த பலர் ஆச்சரியப்பட்டனர்.

பின்னர், 5-ம் ஆண்டு நினைவு நாளையொட்டி, அந்த நாய்க்கு தனது வீட்டில் வெண்கல சிலையையே வைத்து மாலை போட்டு, அதற்கு பிடித்தமான உணவுகளை படைத்து அனுசரித்தார் ஞானபிரகாஷ். மேலும், அந்த ஊர்க்காரர்களை வீட்டுக்கு அழைத்து விருந்தும் படைத்து மகிழ்ச்சி அடைந்தார்.

### கோதாவரி நதியில் வெள்ளப்பெருக்கு தாழ்வான பகுதிகள் நீரில் மூழ்கின

**காக்கிநாடா:** ஆந்திர மாநிலத்தில் கடந்த 4 நாட்களாக கடலோரப் பகுதிகள் மற்றும் ராயலசீமா மாவட்டங்களில் பெய்த கனமழையால் ஏரி, குளங்கள் மற்றும் அணைகள் நிரம்பின. இந்நிலையில் கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளில் இருந்து உபரி நீர் வெளியேற்றப்படுவதால், தாழ்வான பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதில் கிழக்கு கோதாவரி மாவட்டம், தேவிபட்டினம் பகுதியில் உள்ள கண்டி போச்சம்மா கோயில் முற்றிலும் நீரில் மூழ்கியது. கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் சுமார் 30 கிராமங்களுக்கு போக்குவரத்து தடைபட்டுள்ளது. கிராமங்களில் இருந்து சிறிய படகுகள் மூலம் மக்கள் நகர்ப்புறங்களுக்கு சென்று வருகின்றனர்.

போலவரம் அணைக் கட்டும் பணி தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும் அங்கு தேங்கிய தண்ணீர் திறக்கப்பட்டதால் தாழ்வான பகுதிகளில் இருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டனர். பல கிராமங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் அவை இருளில் மூழ்கியுள்ளன. மழை, வெள்ளத்தை தொடர்ந்து மக்களுக்கு தொற்றுநோய் மற்றும் காய்ச்சல் ஏற்படலாம் என்பதால் மருத்துவ முகாம்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வரலாறு காணாத கனமழை, நிலச்சரிவில் சிக்கி

# மகாராஷ்டிராவில் இதுவரை 138 பேர் உயிரிழப்பு

● ஒரு லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றம்

■ மும்பை

மகாராஷ்டிராவில் தொடர்ந்து பெய்து வரும் கனமழைக்கு இதுவரை 138 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 1 லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மகாராஷ்டிராவில் கடந்த மூன்று நாட்களுக்கும் மேலாக பலத்த மழை பெய்து வருகிறது. இடைவிடாது பெய்து வரும் இந்த மழையால், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. குறிப்பாக, கொங்கன் பிராந்தியத்தில் உள்ள பல்ஹார், தாணே, ராய்காட், ரத்னகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் வெள்ள நீர் புகுந்துள்ளது. இதனால் அங்கு ஆயிரக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கும் நிலையில் உள்ளன. அங்குள்ள மக்களை ஹெலிகாப்டர் மூலம் மீட்கும் பணிகள் நடந்து வருகின்றன.

இந்த சூழலில், கோலாப்பூர் மாவட்டத்தில் பாயும் பஞ்சகங்கா நதியில் ஏற்பட்டிருக்கும் வெள்ளத்தால் அங்குள்ள 821 கிராமங்கள் கடுமையான சேதத்தை சந்தித்திருக்கின்றன. 54-க்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தில் தத்தளித்து வருவதாக அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுபோன்ற வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள பகுதிகளில் பேரிடர் மீட்புப் படையினர் மீட்பு மற்றும் நிவராணப் பணிகளில் ஈடுபட்டு வருவதாக மகாராஷ்டிரா அரசு தெரிவித்துள்ளது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சுமார் 1 லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கு தேவையான உணவு, மருந்துப் பொருட்களை புணே நகராட்சி நிர்வாகம் செய்து வருகிறது.

இந்நிலையில், மகாராஷ்டிராவில் மூன்று நாட்களுக்கும் மேல் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவு உள்ளிட்ட சம்பவங்களுக்கு இதுவரை 138 பேர் உயிரிழந்துள்ளனர். கடலோர மாவட்டமான ராய்காட்டில் உள்ள தெலி கிராமத்தில் தொடர் மழை காரணமாக கடந்த வியாழக்கிழமை இரவு பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது.

**பலர் காணவில்லை**

இதில் இதுவரை 36 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் அங்கு பலர் காணாமல் போயிருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. காணாமல் போனவர்களை தேடும் பணி அங்கு இரவு - பகலாக நடைபெற்று வருகிறது.

இதேபோல, மேற்கு மகராஷ்டிராவின் சதாரா மாவட்டத்தில் உள்ள அம்பேகர், மீர்கான் கிராமங்களில் நேற்று முன்தினம் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 20-க்கும் மேற்பட்ட வீடுகள் சகதியில் அடித்துச் செல்லப்பட்டன. இந்த இருவேறு நிலச்சரிவு சம்பவங்களில் இதுவரை 27 பேர் உயிரிழந்திருத்திருப்பதாக பேரிடர் மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர். அங்கு தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**கட்டிடம் இடிந்தது**

இதனிடையே, மும்பையின் கோவண்டி, சிவாஜி நகர் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை கனமழை காரணமாக அடுக்கு மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்தது. இந்த சம்பவத்தில் 5-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறு மகாராஷ்டிரா முழுவதும் கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகளில் சிக்கி இதுவரை 138 பேர் உயிரிழந்திருப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது. அவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் எனவும் அரசு சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. - பிடிஐ

## செப்டம்பர் மாதம் சிறுவர்களுக்கான கரோனா தடுப்பூசி

■ புதுடெல்லி

டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை தலைவர் ரன்தீப் குலேரியா நேற்று கூறியதாவது:

குஜராத்தின் ஜைடஸ் கெடிலா நிறுவனம் தயாரித்துள்ள கரோனா தடுப்பு மருந்து, பாரத் பயோ டெக் நிறுவனம் சிறாருக்காக தயாரித்துள்ள கரோனா தடுப்பூசி (கோவேக்சின்) ஆகியவை சோதனையில் உள்ளன.

அதன்படி இந்தியாவில் சிறாருக்கான கரோனா தடுப்பூசி வரும் செப்டம்பரில் கிடைக்கும். அமெரிக்காவின் பைசர் நிறுவன கரோனா தடுப்பூசியையும் சிறாருக்கு செலுத்தலாம். மூன்று தடுப்பூசிகளுக்கும் அனுமதி கிடைத்த பிறகு சிறாருக்கான கரோனா தடுப்பூசி திட்டத்தை செயல்படுத்த முடியும். அதன் பிறகு பள்ளிகளை படிப்படியாக திறக்க வேண்டும்.

இவ்வாறு டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை தலைவர் ரன்தீப் குலேரியா கூறினார்.



▲ மகாராஷ்டிராவில் கனமழை பெய்து வருவதால் கோலாப்பூர் நகரின் சாலை, தெருக்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. மழை வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் மக்களை மீட்புப் படை வீரர்கள் நேற்று படகுகள் மூலம் மீட்டனர். படம்: பிடிஐ

## குஜராத்தில் காஸ் சிலிண்டர் வெடித்து 7 பேர் உயிரிழப்பு

■ அகமதாபாத்

குஜராத் மாநிலம் அகமதாபாத் புறநகர் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்த விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடந்தது. ஆனால் இதில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரில் 7 பேர் கடந்த சில நாட்களில் இறந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.

இதுகுறித்து அகமதாபாத் புறநகர், அஸ்லாலி காவல் நிலைய உதவி ஆய்வாளர் எஸ்.எஸ்.கமேதி கூறியதாவது:

ஒரு தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் என 10 பேர் கடந்த 20-ம் தேதி இரவு சிறிய அறையில் தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது சமையல் அறையில் காஸ் கசிவு ஏற்பட்டுள்ளது.

சமையல் காஸ் கசியும் வாசனையை உணர்ந்து பக்கத்து வீட்டுக்காரர் கதவைத் தட்டி அவர்களை எழுப்பியுள்ளார். அப்போது அவர்கள் மின் விளக்கு சுவிட்சைப் போட்ட போது வீட்டில் தீப்பற்றியது. சிறிது நேரத்தில் காஸ் சிலிண்டரும் வெடித்துள்ளது. இதில் படுகாயம் அடைந்த 10 பேரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் குழந்தைகள், பெண்கள் உட்பட 7 பேர் கடந்த சில தினங்களில் உயிரிழந்தனர்.

இவ்வாறு உதவி ஆய்வாளர் எஸ்.எஸ்.கமேதி கூறினார்.

# வாரணாசி கியான்வாபி மசூதியின் முன்பகுதி நிலம் காசி விஸ்வநாதர் கோயிலுக்கு பரிசாக அளிப்பு

● நிலப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர முயற்சிக்கும் முஸ்லிம்கள்

ஆர்.ஷபிமுன்னா

■ புதுடெல்லி

உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் கியான்வாபி மசூதியின் முன்பகுதி நிலம் காசி விஸ்வநாதர் கோயிலுக்கு பரிசாக அளிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் தரப்பினரின் இப்பெரும் முயற்சியால் மசூதி தொடர்பான நிலப் பிரச்சினை முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உ.பி.யில் காசி எனும் வாரணாசியில் இந்துக்களின் புனிதத்தலமான காசி விஸ்வநாதர் கோயில் உள்ளது. இதன் கர்ப்பக்கிரக பகுதிக்கு முன்புறமாக ஒட்டியபடி முஸ்லிம்களின் கியான்வாபி மசூதி உள்ளது. காசி விஸ்வநாதர் கோயிலின் ஒரு பகுதியை இடித்துவிட்டு, முகலாய மன்னர் அவுரங்கசீப்பால் இந்த மசூதி கட்டப்பட்டதாக பல ஆண்டுகளாக புகார் உள்ளது. இதன் அடிப்படையில் இந்து தரப்பினரால், வாரணாசி சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதில் நீதிமன்றம், "மாற்று மதத்தினரின் புனிதச் சின்னங்களை மாற்றி அமைத்தோ, அதன் இடிபாடுகள் உதவியினாலோ அல்லது அதை இடித்துவிட்டோ மசூதி கட்டப்பட்டுள்ளதா?" என நேரடியாக ஆய்வு செய்ய இந்திய தொல்பொருள் ஆய்வுக் கழகத்துக்கு கடந்த ஏப்ரல் 8-ம் தேதி உத்தரவிட்டது.

இந்நிலையில் இந்த வழக்கை முடிவுக்கு கொண்டுவர முஸ்லிம்கள் தரப்பில் ஒரு பெரும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூலை 7-ம் தேதி முடிவான ஒப்பந்தப்படி மசூதியின் முன்புறப் பகுதியின் 1,700 சதுர அடி நிலத்தை காசி விஸ்வநாதர் கோயிலுக்கு முஸ்லிம்கள் பரிசாக அளித்துள்ளனர்.

இந்த நிலம், பிரதமர் நரேந்திர மோடி யோசனையின் பேரில் கட்டப்பட்டு வரும் அக்கோயில் வளாகத்தின் காரிடர் பணிக்கு பயன்படுத்தப்பட உள்ளது. தற்போது அந்த நிலத்தில் கடந்த 1993 முதல் பாதுகாப்பு போலீஸாரின் கட்டுப்பாடு அறை உள்ளது. இதற்காக அந்த நிலம் வாரணாசி மாவட்ட நிர்வாகத்துக்கு மசூதி தரப்பில் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது.

நிலம் பரிசளித்த முஸ்லிம்களின் நற்செயலை மதிக்கும் வகையில் இந்துக்கள் தரப்பிலும் காசி விஸ்வநாதர் கோயிலின் 1000 சதுர அடி நிலம் பரிசாக அளிக்கப்பட்டுள்ளது. எனினும், முஸ்லிம்கள் அளித்த 1,700 சதுர அடி நிலம் மசூதியின் முக்கிய முன்பகுதி ஆகும். இதற்காக இந்து-முஸ்லிம் மனுதாரர்கள் தரப்பில் பலகட்டப் பேச்சுவார்த்தைகள் நடந்தன. இந்த தகவல் வெளியானால் பிரச்சினை ஏற்படலாம் என்பதால் வெளியில் தெரியாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது.

பேச்சுவார்த்தையின் முடிவில் நிலத்தை அளிக்க முஸ்லிம்கள் எடுத்த முடிவால், மசூதி நிர்வாகத்தால் முறையான பதிவுக் கட்டணமாக ரூ.2 லட்சத்து 29,000 நிலப்பதிவாளர் அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த முடிவு வாரணாசி சிவில் நீதிமன்ற அனுமதியுடன் எடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கின் அடுத்த விசாரணை வாரணாசி சிவில் நீதிமன்றத்தில் ஜூலை 27-ல் வரவுள்ளது. முஸ்லிம்களின் இந்த நல்முயற்சியால் பல ஆண்டுகளாக நீடிக்கும் இந்த நிலப்பிரச்சினை முடிவுக்கு வரும் வாய்ப்புகள் உள்ளன.

# காவிரியில் தமிழகத்துக்கு விநாடிக்கு 40 ஆயிரம் கன அடி நீர் திறப்பு

இரா.வினோத்

■ பெங்களூரு

கர்நாடகாவில் கடந்த இரு தினங்களாக உத்தர கன்னடா, தக்ஷின கன்னடா, ஷிமோகா, குடகு உள்ளிட்ட 8 மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. இரவு பகலாக கனமழை கொட்டி தீர்ப்பதால் கிருஷ்ணா, காவிரி, துங்கபத்ரா, கபிலா உள்ளிட்ட நதிகளில் வெள்ளம் கரை புரண்டோடுகிறது.

இதனால் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் கரையோர கிராமங்களில் வெள்ளம் புகுந்துள்ளது. தரைப்பாலங்கள் நீரில் மூழ்கியுள்ளதால் மடிகேரி - தலக்காவிரி இடையேயான பஸ் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. காவிரியில் பெருக்கெடுத்துள்ள வெள்ளத்தின் காரணமாக மண்டியா மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணராஜசாகர் அணைக்கு நீர்வரத்து திடீரென பன்மடங்கு அதிகரித்துள்ளது.

கேரளாவின் வயநாட்டிலும் கனமழை தொடர்வதால் கபிலா ஆற்றிலும் வெள்ளம் கரை புரண்டோடுகிறது. இதனால் மைசூரு மாவட்டத்தில் உள்ள கபினி அணை முழு கொள்ளளவை எட்டியுள்ளதால், அணையின் பாதுகாப்பை கருதி உபரி நீர் பாசனத்துக்காக திறந்துவிடப்பட்டுள்ளது.

நேற்று மாலை 5 மணி நிலவரப்படி 124.80 அடி உயரம் உள்ள கிருஷ்ணராஜசாகர் அணையின் நீர்மட்டம் 106.65 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு விநாடிக்கு 31 ஆயிரத்து 896 கனஅடி நீர் வந்துகொண்டிருக்கும் நிலையில், அணையில் இருந்து விநாடிக்கு 8 ஆயிரத்து 492 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 2284 அடி உயரத்தில் உள்ள கபினி அணையின் நீர்மட்டம் நேற்று 2283.80 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு விநாடிக்கு 27 ஆயிரத்து 179 கனஅடி நீர் வந்துகொண்டிருக்கும் நிலையில், விநாடிக்கு 33 ஆயிரத்து 800 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

கிருஷ்ணராஜசாகர், கபினி ஆகிய அணைகளில் இருந்தும் மொத்தமாக தமிழகத்துக்கு விநாடிக்கு 40 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2 ஆயிரத்து 292 கனஅடி நீர் கால்வாய்கள் மூலம் மைசூரு, மண்டியா மாவட்ட விவசாயிகளுக்காக திறக்கப்பட்டுள்ளது.

தமிழகத்துக்கு 40 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளதால் மேகேதாட்டு, பிலிகுண்டுலு உள்ளிட்ட பகுதிகளில் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் கரையோர கிராம மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு, மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.


பிரெஸ்டீஜ்
எதையும் எதற்கும்
எக்ஸ்சேஞ்ஜ் சலுகை*
ஏப்ரல் 10 முதல் ஜூலை 31, 2021 வரை
INDIA'S No.1 KITCHEN APPLIANCE BRAND
SELECTED Superbrands INDIA Consumer Validated 2021
புதுமையை அன்லாக் செய்யுங்கள்.
வசதியை அன்லாக் செய்யுங்கள்.
எந்த ஒரு சமையலறை சாதனம், அது எந்த பிராண்ட் ஆனாலும்,
எந்த நிலையில் இருந்தாலும், அதை எக்ஸ்சேஞ்ச் செய்து
பிரெஸ்டீஜின் பிரத்தியேக புதுமைகளை வீட்டிற்கு கொண்டு வாருங்கள்.
இந்தியாவின் மிக சிலிம்மான குக்டாப்
இப்பொழுது ஸ்காட் கிளாஸ் மீது வாழ்நாள் வாரண்டியுடன்
எட்ஜ் கேஸ் ஸ்டவ்
அல்ட்ரா-சிலிம் பாடி
நீடித்து நிலைக்கு வடிவமைப்பு
ஸ்காட் கிளாஸ் மீது வாழ்நாள் வாரண்டி
ஃபிளேம் பாதுகாப்பு கவசத்துடன் பான் ஆதரவு
சுத்தமான சமையலுக்கு
கசிவதை கட்டுப்படுத்தும் லிட் கொண்ட இந்தியாவின் முதல் பிரஷர் குக்கர்.
சுவச் பிரஷர் குக்கர்கள்
கசிவதை கட்டுப்படுத்த ஆழமான லிட்
நீடித்து உழைக்கும் ஆன்டி-பல்ஜ் பேஸ்
கேஸ் மற்றும் இன்டக்‌ஷனுக்கு ஏற்றது
நீடித்து நிலைக்கும் 5 லேயர் நான்-ஸ்டிக் கோட்டிங் கொண்ட
இந்தியாவின் முதல் குக்வேர்
கிரனைட் குக்வேர்
நீடித்து நிலைக்கும் 5 லேயர் உயர்தர
நான்-ஸ்டிக் கோட்டிங்
டிஷ்வாஷர் பாதுகாப்பு
டிஜிட்டல் ப்ரிசெட் டைமர் கொண்ட இந்தியாவின் முதல் வெட் கிரைண்டர்
PWG 09 வெட் கிரைண்டர்
உயர்தரமான அரைக்கும் கற்கள்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ட்ரம்
இணக்கமான டேபிள்டாப் வடிவமைப்பு
டிஜிட்டல் டைமர் ப்ரிசெட் செயல்பாடுடன்
மோட்டார் மீது 5 வருட வாரண்டி கொண்ட
சக்திவாய்ந்த மிக்ஸர் கிரைண்டர்
டிலைட் 750 ப்ளஸ்
சக்திவாய்ந்த 750W தூய செம்பிலான மோட்டார்
3 ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜார்கள் மற்றும்
ஒரு ஜூஸர் ஜார் சல்லடையுடன்
மோட்டார் மீது 5 வருட வாரண்டி
உங்கள் உணவை பாக்டீரியா மற்றும் வைரஸ்லிருந்து பாதுகாக்கிறது
ஃப்ரூட் மற்றும் வெஜிடெபிள் கிளீனர்
இரசாயனத்தை நீக்கி தீங்கு விளைவிக்கும்
பாக்டீரியாவை அழிக்கிறது.
இறைச்சி மற்றும் கடல் உணவு மணத்தை நீக்குகிறது
உணவை ஃப்ரெஷ்ஷாக வைக்கிறது
பராமரிப்பு தேவையில்லை
ஈரமான மற்றும் உலர்ந்த தரையை சுத்தம் செய்வதற்கான வேக்யூம் கிளீனர்
டைபூன் 05 வேக்யூம் கிளீனர்
WET & DRY CLEANING
சக்திவாய்ந்த 1200W மோட்டார்
மேம்பட்ட ஹேபா ஃபில்டர்
10லி தூசி பெட்டி
எக்ஸ்சேஞ்சில் கவர்ச்சிகரமான தள்ளுபடிகளை பெறுங்கள்
பிரஷர் குக்கர்கள் 20% - 37% தள்ளுபடி*
குக்வேர் 28% - 57% தள்ளுபடி*
மிக்ஸர் கிரைண்டர்கள் 32% - 41% தள்ளுபடி*
கேஸ் ஸ்டவ்கள் 26% - 40% தள்ளுபடி*
இன்டக்‌ஷன் குக்டாப்ஸ் 33% - 43% தள்ளுபடி*
சிறிய சாதனங்கள் 25% - 55% தள்ளுபடி*
வாட்டர் பியூரிஃபையர்கள் 27% - 37% தள்ளுபடி*
வேக்யூம் கிளினர்கள் 29% - 33% தள்ளுபடி*
Prestige®
குடும்பத்து நேசிக்கிறவங்க
பிரெஸ்டீஜ் எப்படி வேணாம்னு சொல்லுவாங்க.
MADE WITH PRIDE IN INDIA
TOLL-FREE Prestige CARE 1800-123-334411
Follow 'TTK Prestige' on
PRESTIGE XPERT 97423 34411
www.ttkprestige.com
ttk
BAJAJ FINSERV
EMI FINANCE